www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி


පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 13 | ஆடி (யூலை) 2006 | பக்கம்12 | விலை 15/ | சுழற்சி 93

# இந்தியத் தலையீடு தீர்வைத் தருமா?

இலங்கை இனப்பிரச்சினையின மறைவில் அமெரிக்க இந்திய பொருளாதார அரசியல் ராணுவப் போட்டி இருந்து வருவது இரகசியமல்ல. அவற்றை வெளிவெளியாகக் காணப்பெறும் நிகழ்வுகள் இப்போது தொடராக இடம் பெற்று வருகின்றன.

கடந்த மாதம் முதலாம் திகதி அமெரிக்க வெளியுறவுச் செயலர் நிச்சாட் பௌச்சர் இலங்கைக்கு ராஜதந்திரப் பயணம் மேற்கொண்டிருந்தார். அமெரிக்க- மேற்குலக நலன் சார்ந்த விடயங்களின் அடிப்படையில் கருத்துக்களை வெளியிட்டும் சென்றார். யுத்தம் வேண்டாம் என்று ஒப்புக்குக் கூறிய அவர் அரசாங்கத்திற்கு ஆயுதங்கள் பயிற்சி ஆலோசனை வழங்குவதற்கு தொடர்ந்தும் அமெரிக்கா பங்களிக்கும் என வாக்குறுதி வழங்கியும் சென்றார். அத்துடன் புலிகள் இயக்கத்திற்கு எச்சரிக்கைத் தொனியில் ஆலோசனை வழங்கும் கருத்துக்களையும் வெளியிட்டுச் சென்றார்.



அமெரிக்காவின் இலங்கை மீதான நகர்வுகளை உற்றுநோக்கி வந்த இந்தியா இனிமேலும் தூர நின்று கொள்ளமுடியாது என்ற முடிவில் ஏதோ வகையில் மீண்டும் களத்தில் நுழைய முடிவு செய்து கொண்டது. அதன் காரணமாக இம் மாதம் 3ம் திகதி இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் முன் கூட்டியே வெளிப்படுத்தாத விஜயத்தை இலங்கைக்கு மேற்கொண்டார். ஜனாதிபதி வெளியுறவு அமைச்சர் முப்படைகளின் தளபதிகள் என்போரையும் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அரசியல் தலைவர்களையும் சந்தித்து விரிவாக உரையாடிச் சென்றார். இதனைச் சாதாரண பயணம் எனக் கொள்ளவியலாது.

இம் முறை இந்தியத் தரப்பிலிருந்து அரசியல் தீர்வுக்கு வருவது பற்றியே அழுத்திப் பேசப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. தாங்கள் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் ஒரு தரப்பாகவோ அல்லது நேரடி வழிகாட்டும் நிலைக்கோ வரமுடியாது என்று கூறியுள்ள ஷியாம் சரண் நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் பேச்சு வார்த்தை முயற்சிகளுக்கு தமது ஆதரவையும் தெரிவித்திருந்தார். அதே வேளை தமது பொருளாதார நலன்களின் இருப்பையும் சுட்டிக்காட்டி தெற்கில் அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் ஒருமித்த வகையில் முன்னெடுக்கப்படுவதையும் வலியுறுத்தியிருந்தார். ஆனால் தமது ராணுவ மறைமுகப் பாத்திரம் பற்றி எதையும் வெளிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப்பகிர்வு எவ்வாறு சாத்தியம்!

இந்தியா இலங்கை இனப்பிரச்சினையின் இன்றைய யுத்தத்தில் பெரும் அயலகப் பங்காளி என்பது மறுக்கப்பட முடியாத ஒன்றாகும். அதன் அடிப்படை பிராந்திய மேலாதிக்கம் என்பது மறைக்க முடியாத உண்மையாகும். அவற்றின் அடிப்படையிலேயே இது வரை தமது காய்களை நகர்த்தி வந்த இந்தியா இப்பொழு தும் புதிய வகையில் அழுத்தம் தரு வது என்ற பெயரில் தலையீடு செய்ய வியூகம் அமைத்து செயல்பட ஆரம்பித்திருக்கிறது.

தமிழ் நாட்டின் தேர்தலுக்கு முன்பு இந்தியப் பிரதமர் திருகோணமலையில் பேரினவாத வெறியாட்டம் இடம் பெற்ற போது நேரடியாக ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு கடும் தொனியில் கருத்துரைத்ததாகச் செய்திகள் வெளிவந்தன. தேர்தலுக்குப் பின்பு மேலும் இலங்கை விடயத்தில் செயல்படும் திட்டங்களுடன் இந்தியா முன் வந்திருக்கிறது. அதன் ஆரம்பமே அண்மைய ஷியாம் சரணின் பயணமாகும்.

இந்தியாவின் புதிய வியூகம் வெளிப்படையாக இல்லையாயினும் விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தி பலவீனப்படுத்தும் அரசியல் தந்திரோபாயத்தைக் கொண்டிருப்பதை

தொடர்ச்சி 12ம் பக்கம் ➡

# யுத்தத்தை முழுமையாக நடாத்த ஜே. வி. பி அபாயச் சங்கு!

## கொழும்புத் தமிழர்களுக்கு எச்சரிக்கை!



ஜே.வி.பி தமது பேரினவாத வெறித்தன நிலைப்பாட்டை மீண்டும் ஒரு முறை அண்மைய 5வது சிறப்பு மாநாட்டில் பிரகடனப்படுத்தியிருக்கிறது. அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்கா மேற்படி மாநாட்டில் உரையாற்றும் போது புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவது அர்த்த மற்ற ஒன்று என்றும் தனிநாட்டை அடைய நிற்கும் புலிகளை யுத்தத்தின் மூலம் அழித்து விட வேண்டும் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் பயங்கரவாதம் என்றால் என்ன என்பதைப் பற்றிய விளக்கத்தையும் ஜனாதிபதிக்கு பாடம் சொல்லிக் கொடுத்துள்ளார்.

அத்துடன் கொழும்பில் வாழும் தமிழர்களுக்கு முன் எச்சரிக்கையும் விடுத்துள்ளார். தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டாம் என்றும் அப்படி ஆதரவு வழங்கினால் எல்லோரும் வடக்கு கிழக்கிற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்றும் எச்சரித்துமுள்ளார். இது ஜே.ஆர் 1977ல் கூறிய கூற்றுக்களின் மறுவாசகமாகவே உள்ளது. கொழும்பிலும் வெளி மாவட்டங்களிலும் வாழ்ந்து வரும் தமிழர்களுக்கு விடுக்கப்பட்ட மிரட்டலாகவே எடுக்க வேண்டியுள்ளது.

மேலும் மேற்குலகம் நோர்வே மூலம் நாட்டைத் துண்டாட நிற்கின்றது எனக் குற்றம் சாட்டி நிற்கும் சோமவன்ச இலங்கையின் இனப்பிரச்சினை இருந்து வருவதையோ அன்றி அதற்கான தீர்வு என்ன என்பது பற்றியோ எதுவும் கூறியதாக இல்லை. யுத்தத்தின் மூலம் புலிகள் இயக்கத்தை இல்லாமல் செய்வதே அவர்கள் முன்வைக்கும் தீர்வாகும். இது வரை இப்படி உரைத்தவர்களும் போரை நடாத்தியவர்களும் செய்ய முடியாததை ஜே.வி.பி யும் சோமவன்சாவும் செய்து முடிப்பார்கள் என்று சிங்கள மக்கள் நம்ப வேண்டும் என எதிர்பார்ப்பது வேடிக்கையானது மட்டுமன்றி முட்டாள் தனமுமாகும். இத்தனைக்குப் பின்பும் ஜே.வி.பி.யை இடதுசாரி என்று யாராவது கருதுவாராகில் அத்தகையோர் சித்தசுவாதீனமுடையோராகவே இருக்க முடியும்.

# கூட்டு ஒப்பந்தத்திலிருந்து இ.தொ.கா. விலகும் உள்நோக்கம் என்ன?

தோட்டத்தொழிலாளர்களின் சங்கங்களுக்கும் தோட்டக் கம்பெனிகளுக்குமிடையிலானகூட்டு ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்வதாக இ.தொ.கா அறிவித்துள்ளது. அதேபோன்று தொழிற்சங்கங்களின் சார்பில் கையெழுத்திட்ட ஏனைய தொழிற்சங்கங்களான இ.தே.தோ. தொ.சங்கமும், பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியும் விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளன. ஏனைய தொழிற்சங்கங்கள் கூட்டு ஒப்பந்தத்தையும் அதில் கையெழுத்திட்ட மேற்படி சங்கங்களையும் விமர்சிப்பதாலலேயே அவை விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளன. அத்துடன் ஏனைய தொழிற்சங்கங்களுக்கு முடிந்தால் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்கட்டும் என்றும் சவால் விட்டுள்ளன.

கூட்டு ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்திருப்பதன் மூலம் அச்சங்கங்களின் இயலாமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவை இதுவரையும் கையெழுத்திட்டு தொழிலாளர்களை காட்டிக் கொடுத்தன. இம்முறை கையெழுத்திடாமல் காட்டிக் கொடுக்கின்றன. அவற்றுக்கு பேரம்பேசும் சக்தி இல்லாவிட்டால் அவை விலகிக்கொள்வதே நல்லது.

கூட்டு ஒப்பந்த முறை தொழிலாளர்களுக்கும் தோட்டக் கம்பெனிகளுக்குமிடையிலான பிணக்குகளை தீர்க்க சிறந்த முறை யில் மாற்றியமைக்கப்பட வேண்டும். அல்லது புதிய முறையொன்றை ஏற்ப டுத்த வேண்டும். கூட்டு ஒப்பந்த முறையே சிறந்ததென கூறிக் கொண்டு தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்விற்கு வழிவிடாத கூட்டு ஒப்பந்தத்தை வழி பாட்டிற்குரியதாக பூஜிக்க முடியாது.

நியாயமான சம்பள உயர்வை பெற்றுத்தருவதற்காக நடவடிக்கைகளில் ஈடுபடாத தொழிற்சங்கள் விலகிக் கொள்வது நல்லது. தொழிலாளர்கள் மாற்று வழிகளைத் தேடிக் கொள்வார்கள்.

இ.தொ.கா வோ வேறு எந்த தொழிற்சங்கமோ கூட்டு ஒப்பந்தத்திலிருந்து விலகி கொண்டன என்பதற்காக தொழிலாளர்கள் செத்து மடியமாட்டார்கள். தோட்டக் கம்பனிகளிடம் உரத்து நியாயம் கேட்டு அதிகபட்ச நாட்சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க முடியாத இ.தொ.கா வும் ஏணய தொழிற் சங்கங்களும் தங்களைத் தொழிற்சங்கம் இல்லை எனப் பிரகடனப் படுத்திக் கொள்வதே முறையானதாகும்.

## பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக சங்கம்

பெருந்தோட்டத் தொழிற்றுறையில் வேலை செய்வோருக்கும் தனியார், விவசாயம், கைத்தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் கடைகள், காரியலயங்களில் வேலை செய்வோரின் நலன்களுக்காக பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் உத்தியோத்தர்கள் பின்வருமாறு தலைவர் சட்டத்தரணி இ. தம்பையா, செயலாளர், எம். சத்தியமூர்த்தி, பொருளாளர், கே.சுதர்சன், பிரதித்தலைவர், கே. சிவராஜா, உதவி செயலாளர், என். கலைச்செல்வி, உதவிப் பொருளாளர், எம். நமச்சிவாயம், உபதலைவர்கள், எஸ். வீ. சண்முகராஜா, டி. கிருஷ்ணசாமி, என். எஸ். நாராயணசாமி, டி. வேதநாயகம், எம். சிவராஜ், செயற்குழு உறுப்பினர்கள் கே. முன்னீஸ்வரன், எஸ். குமாரவேல், கே. பாலகிருஷ்ணன். ஆகியோர் செயலாற்றுவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியாவுக்கான அழைப்பு தமிழ்மக்களுக்கு அலுப்பு

மேலக மக்கள் முன்னணியின தலைவரும் கொழும்பு மாவட்ட ஐ.தே. கட்சி உறுப்பினருமான மனோகணேசன் இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடவேண்டும் என்று அறிக்கை விட்டுள்ளார். அமெரிக்கா தலையிட்டு இந்தியாவின் நலன்களுக்கு எதிராக செயற்படுவதற்கு முன்பு இந்தியா முந்திக் கொள்ள வேண்டும் என அவர் இந்தியாவுக்கு அறிவுரை கூறியுள்ளார். தமிழ் நாட்டிலுள்ள பிரிவினைவாத இயக்கங்களுக்கும் இந்திய அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் அமைப்புகளுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உதவக்கூடாது என்ற உத்திரவாதத்தை பெற்றுக் கொண்டு இந்திய இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். இந்த அறிக்கைக்கு மேலாக அவர் தனியார் வானொலி நிகழ்ச்சி யொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதும் இந்தியா தலையிட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். மனோகணேசன் தமிழ்த்தேசியத்தை உயர்த்தி பிடித்துக் கொண்டு கொழும்பில் அரசியல் செய்பவர். அவர் இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்று கூறுவதன் அர்த்தமென்ன? திடீரென்று இந்தியா இலங்கைத் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்போவதாக வாக்குறுதி எதனையும் அளித்துவிடவில்லை. இந்தியாவின் தலையீடு எவ்வாறு இருக்கும் என்பதும் தெரிந்த விடயமே. இந்திய மேலாதிக்கவாதம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கப்போவதில்லை. இவ்வாறான நிலைமையில் இந்தியா தலையிட வேண்டும் என்று கூறுவது இந்திய நலனுக்கானதா? தமிழ் மக்களுக்கானதா? என்பதே சிந்தனைக் குரியது.

இந்திய நலனை காப்பதில் மனோகணேசன் தீடீரென காட்டும் கரிசனை அவரது அரசியலுடன் தொடர்புடையதுதான். முதலாளித்துவ, பிற்போக்குவாத, ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளின் பக்கம் நின்று செயற்படுதே அவரின் அரசியலாகும். வெறும் தமிழ்த்தேசியத்தை உச்சரிப்பதனால் மட்டும் தமிழ்மக்களின் விடுதலையின் பக்கம் நிற்கமுடியாது. 1983 இற்குப் பிறகு இந்தியாவிற்கு சென்று அங்கு இருந்த காலகட்டங்களில் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி தெரிந்து கொண்டவர்களுக்கு 'மனோகணேசனின் இந்தியப் பாசம்' ஆச்சரியத்தை தராது. இந்தியாவுக்கு எதிராகப் பேசி தமிழ்மக்களின் உணர்ச்சிகளை தூண்டிய மனோகணேசன் 'பாரத தாயின்' மடியில் சாய்வதற்கு காரணம் இல்லாமல் இல்லை. அது என்ன என்பது அவரை நன்கு அறிந்தவர்களுக்குப் புரியும்.

கொழும்பில் தமிழ்மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக மனோகணேசன் போட்ட தமிழ் தேசிய வேஷம் கலைக்கப்படுவதற்கு காலம் எடுக்கவில்லை. அவர்கள் வெளிவெளியாக எதைத்தான் பேசினாலும் எவருக்காவது தாசர்களாக இருப்பதற்கே தகுதியானவர்கள் என்பதை எப்போதும் நிரூபித்துக் கொண்டுதான் இருப்பார்கள். ஏமாறும் மக்கள் தான் புரிந்து கொள்வதில்லை.

தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளுக்கு குறிப்பாக சுயநிர்ணய உரிமைக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருக்கும் இந்திய ஆளும் வர்க்கம் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் தலையீடு எவ்வித பலாபலனையும் பெற்றுத்தரப் போவதில்லை என்பதே நிலைப்பாடாகும்.

வரலாற்றில் இந்தியாவிடம் சிக்கிக் கொண்டு இலங்கைத்தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் பட்ட பாட்டையும் தமிழ்மக்கள் அனுபவித்த துயரங்கள் வேதனைகளையும் தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை. இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை கண்டிக்கப்பட வேண்டியதாகும். அவரின் கொலையை ஒரு அரசியல் வழிமுறையாக கொண்டிருக்கக் கூடாது. தனிநபர் படுகொலைகளை அரசியல் வழிமுறையாகக் கொள்வோர் அவற்றால் ஏற்படும் பாதிப்புகளை பின் விளைவுகளை அனுபவித்தபோதும் அக்கொலைகளை பிழையென ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதனை ஏற்றுக்கொள்ளாதபோது அதே தவறுகளும் அதனால் ஏற்படும் பாதிப்புகளும் தொடரும் நிலையயே ஏற்படும். ராஜீவ் காந்தியின் கொலை தவறானது என்பதற்கு தண்டனையாக இந்திய மேலாதிக்கத்திடம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அடகு வைக்கவோ காட்டிக்கொடுக்கவோ முடியாது. அது ஒரு அரசியல் தவறாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் அதற்காக இந்திய மேலாதிக்கத்திடம் சரணடையும் விதத்தில் போராட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அது வரலாற்றில் திருத்த முடியாத பாரதூரமான அரசியல் தவறாகி விடும்.

அந்த பாரதூரமான அரசியல் தவறுக்கு துணைபோகும் விதத்தில் இந்தியா இலங்கையில் தலையிட வேண்டும் என்று கூறுவது துரோகமாகும். இந்தியாவை தலையிட வேண்டாம் என்று கோருவதே சரியாதாகும். இவ்விடயத்தில் இந்திய மக்களின் குறிப்பாக தமிழ்நாட்டு மக்களின் ஒத்துழைப்பும் இந்தியாவிலுள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவும் நிச்சயம் பெறப்பட வேண்டும். அது இந்திய மேலாதிக்கத்தை இங்கு நிலைநாட்டுவதல்ல. போராட்டத்திற்குப் பலம் சேர்ப்பதற்கேயாகும். எனவே இந்திய தூதரகத்துடன் நெருங்கி இருக்கும் போது ஒரு கதையும், விலகி இருக்கும் போது இன்னொரு கதையும் கூறும் அரசியல் வாதிகள் தமிழ் தேசியத் துக்கு ஆதரவானவர்களல்லர். இந் தியாவுக்கும் அதன் மூலம் தமது சொந்த நலன்களுக்ககாவுமே அவ்வாறு இருந்து வருகிறார்கள்.

இந்திய மேலாதிக்கத்திற்கு அழைப்பு விடுக்கும் மனோகணேசனை புரிந்து கொண்டு செயற்படுவது தமிழ்மக்களின் கடமையாகும். மீண்டும் இந்திய மாயை வேண்டாம். அது இலங்கை தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தை மீண்டும் பின்னுக்கு தள்ளும் ஒரு சதி முயற்சியேயாகும். அச்சதியிலிருந்து தமிழ் மக்களும் அவர்களது நியாயமான கோரிக்கைகளும் போராட்டங்களும் விலகி முன் செல்ல வேண்டும்.

**ஆர். ரமேஷ்குமார்**
**கொழும்பு -06**

# நாலு நடக்கும் உலகிலே

நற்குணன்

## தமிழ்ப் பண்பாடு இது தானா?

கெபிதிகொல்லாவ படுகொலையில் மாண்டோருக்கான அனுதாபத் தீர்மானத்தையொட்டி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்ட போது எழுந்து நிற்க மறுத்துத் தமது மனித நேயமின்மையை வெளிக்காட்டினர் இரு தமிழ்ப் பாரளுமன்ற உறுப்பினர்கள். கொல்லப்பட்ட தமிழர்கட்கு அஞ்சலி செலுத்தப்படவில்லை என்பது இவர்களது நடத்தைக்கான விளக்கம். மறுநாள் அரச வன்முறையில் மாண்ட தமிழ் மக்களுக்கான அஞ்சலியின் போது அனுதாபப் பிரேரணையை ஏற்காத ஒரு சிங்கள பேரினவாத பிக்கு எல்லாருடனும் சேர்ந்து எழுந்து அஞ்சலி செலுத்திய பின்பு தனது உடன்பாடின்மையைத் தெரிவித்தார்.

அவர் மனிதாபிமானியா இல்லையா என்று எனக்குத் தெரியாது. என்றாலும் நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களைவிடப் பண்பாடுள்ளவர் என்று தான் சொல்ல வேண்டும்.

## புதுப் பாட்டு

கொஞ்சக் காலமாக மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்) அரச படைகளைக் கண்டித்து அறிக்கைகளை விடுகிறார்கள். விடுதலைப் புலிகளைக் கண்டிப்பது கணிசமாகக் குறைந்து விட்டது. இது உண்மையிலேயே ஒரு மன மாற்றமா? அல்லது புதிய சனாதிபதியுடன் உள்ள முரண்பாடா? அல்லது எசானர்கள் பாட்டை மாற்றிப் பாடும் படி பணித்திருக்கிறார்களா?

விடுதலைப் புலிகளைச் சில காலமாகக் கடுமையாக கரித்துக் கொட்டி வந்த திருநர் டி.பி.எஸ்.ஜெயராஜின் தொனியும் மாறியுள்ளது. அதற்குக் இதற்கும் ஏதேனும் தொடர்புண்டா?

## புதிய இந்தியத் தரகர்கள்

அண்மைக்காலமாக இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையில் இந்தியத் தலையீட்டைக் கோருகிற ஒரு போக்கு உருவாகி உள்ளது. வெளீயீட்டுத் துறையில் தீவிரமாக இயங்குகிற ஒரு என்.ஜி.ஓ. நிறுவனத்தின் முக்கியஸ்தர் ஒருவர் இந்தியாவின் குறுக்கீட்டைத் தமிழர் தங்களுக்குச் சாதகமான முறையில் பயன்படுத்துவது பற்றி ஆராய வேண்டும் என்று இரண்டு மாதங்கள் முன்பு ஞாயிறு தினக்குரலில் எழுதியிருந்தார். அந்த நிறுவனத்திற்கு மிக நெருக்கமான ஒருவர் புனைபேரில் அதே ஏட்டில் தமிழக அரசியல் கட்சிகளை எல்லாம் வளைத்துப் போட்டு எம்.ஜி.ஆர் காலத்து தமிழக அரசியல் நிலை ஒன்று உருவாக்கப்படுவது பற்றி எழுதியிருக்கிறார். அது போக இந்தியா குறுக்கிட வேண்டும் என்ற பல்லவி சில தமிழ்ப் பாரளுமன்ற உறுப்பினர்களாலும் பாடப்படுகிறது. ஆனந்த சங்கரிக்கும் அவர்களுக்கும் இவ் விடயத்தில் நல்ல நெருக்கம் போலத்தெரிகிறது. எந்த விதமான குறுக்கீட்டை எதிர்பார்க்கிறார்கள் என்று ஒவ்வொருவரும் தெளிவாகவே சொல்வார்களானால் உதவியாயிருக்கும்.

## நல்ல தொரு குடும்பம்

குடும்ப அரசியல் பற்றிய குற்றச்சாட்டு முதலாவது பிரதமராக டி.எஸ்.சேனநாயக்கவின் வாரிசாக மகன் டட்லி சேனநாயக்கவை நியமிக்கத் திட்டமிட்டதுடன் தொடங்கியது. பின்பு பண்டாரநாயக்க குடும்பம். (உண்மையில் இது பண்டாரநாயக்க திட்டமிட்டபடி நடந்த ஒரு விடயமல்ல) காமினி திஸ்ஸாநாயக்காவின் குடும்ப அரசியல் இப்போது சம்பந்தி கரு ஜயசூரிய வழியில் நடக்கிறது. லலித் அத்துலத் முதலியின் குடும்ப அரசியல் விரைவிற் படுத்துப் போய்விட்டது. என்றாலும் மகிந்தராஜபக்ச தனது சகோதரர்கள் எல்லாரையும் இழுத்து வந்து பதவிகளில் அமர்த்தியதுடன் இப்போது மகனையும் கெபிதிகொல்லாவ உதவி அமைப்பிற்குள் இழுத்து விட்டிருக்கிறார். அம்பாந்தோட்டை சுனாமி நிதியைக் கையாண்டதில் இருந்த ஒழுங்கீனங்கள் இதில் இல்லாமலிருந்தால் நன்றாயிருக்கும்.

## பயங்கரவாத மன்றம்

யூஎன்.பியைச் பேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரும் ஐ.ம.சு.முன்னணி அமைச்சருமாகவுள்ள அபூர்வ அரசியல் விலங்குகளில் கெஹலிய ரம்புக்கல்லவின் உரைகள் ஊடகங்களில் அதிகமாக வருகின்றன. அவரும் முத்துக்களை உதிர்த்தவாறே இருக்கிறார். அண்மையில் உதிர்ந்த ஒன்று "பயங்கரவாதிகளே காலையில் ஒரு கதையும் மாலையில் இன்னொரு கதையும் பேசுவார்கள்" என்பதாகும். அப்படியானால் நமது பாராளுமன்றம் காலையில் ஒன்றும் மாலையில் ஒன்றும் பேசும் பயங்கரவாதிகளால் நிரம்பி வழிகிறது என்றா அவர் சொல்லுகிறார்.

## நோயாளி யார்?

கொழும்பு மேயர் சத்தியப்பிரமாணம் செய்யும் போது நன்றாகத்தான் இருந்தார். பிறகு காணமற் போனார். பிறகு ஒரு மருத்துவமனையிற் கண்டுபிடிக்கப்பட்டார். பிறகு இன்னொரு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். உண்மையில் நோய் அவருக்கா அல்லது அவரைப் பகடைக்காயாக்கி கொழும்பு மாநகராட்சியைச் சீர்குலைக்கப் பார்க்கிற ஒரு கூட்டத்துக்கா?

## பண்பான பாதாள உலகம்

மூன்றாம் இலக்கச் சுயேட்சைக் குழுத் தலைவர் காணமற் போனார். அவரது குடும்பத்தில் யாருமே அது பற்றிப் பதற்றப்படவில்லை. பிறகு திரும்பி வந்தார். அவரைக் கட்டத்திக் கொண்டு போனவர்கள் அவரை மிகவும் நல்லவிதமாகக் கவனித்துத் திருப்பிக் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள். ஆட்களைக் கடத்துகிற மற்றவர்களும் இந்த மாதிரிப் பண்பாக நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

இப்படிப்பட்ட நல்ல ஆட்கடத்தற்காரர்களை ஊக்குவிப்பதற்குத்தான் குழுத் தலைவரும் மேற்கொண்டு விசாரணைகளை நடத்தும்படி பொலிசாரையும் வற்புறுத்தவில்லை என்று நம்புகிறேன்.--

# ஸ்ரீபாத கல்லூரி பயிலுனர்களில் 13 பேருக்கு நியமனம் இல்லை!

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் பயின்ற ஆசிரிய பயிலுநர்களில் 13 பேருக்கு நியமனம் வழங்கப்படமாட்டாது என தெரியவருகிறது. எதிர் வரும் 14ம் திகதி வழங்கப்படவுள்ள நியமனங்களுக்கான பெயர்ப்பட்டியலில் அந்த 13 பேரின் பெயர்கள் இடம்பெறவில்லை. காரணம் அவர் களுக்கு எதிராக நுவரேலியா நீத வான் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டிருப்பதே காரணமாகும். அவர்கள் அவ்வழக்குகளிலிருந்து விடுதலையாகும் வரை அவர்களுக்கு நியமனம் வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விடுதலையானாலும் விடுதலையான பிறகு புதிதாகவே அவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அறிய முடிகிறது.

அவர்களுக்கு எதிராக இருக்கும் வழக்குகள் தனிப்பட்ட காரணங்களுக்காகத் தொடுக்கப்பட்டவை அல்ல. கல்லூரியின் நிர்வாக அதிகாரிகளால் செய்யப்பட்ட ஊழல் மோசடிகளுக்கு எதிராகப் போராடியதற்கு பிரதிபலனாககவே கல்லூரியின் நிர்வாக அதிகாரிகளைத் தாக்கியதாக அவர்களுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் ஏற்கனவே பிணையில் விடப்பட்டுள்ளனர். வழக்கு விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை.

அவர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொடுக்க ஐக்கியப் பட்ட அரசியல் நடவடிக்கைகள் அவசியமாகின்றன. மேற்படி 13 ஆசிரிய பயிலுனர்கள் வேறுவகை குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் அல்லர். கல்லூரியின் ஊழல் மோசடி பற்றி கேள்வி எழுப்பிய பல நூறு மாணவர்களில் அவர்களும் உள்ளடங்குவர். இது ஒரு பழிவாங்கலாகக் கொள்ளக் கூடாது. எனவே அவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும்.

## நீதித்துறை பெரியவர் பிரதமராவாரா?

இலங்கையின் நீதித்துறையினர் உயர் பதவி வகிப்பவர் ஒருவர் இலங்கையின் பிரதமராக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களிலும் நீதிமன்ற வட்டாரங்களிலும் பேசிக் கொள்ளப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கு நெருக்கமானவரான நீதித்துறையின் அந்தப் பெரியவரின் பக்கபலம் தனக்கு அவசியமென கருதப்படுகிறதாம். அதனால் அவர் பிரதமராக நியமிக்கப்படலாம் என்றே கூறப்படுகிறது.

## நியாயத்தின் அளவுகோல்

பாலஸ்தீனப் பிரச்சனை தீயாய் எரிந்து கொண்டிருக்க இஸ்ரேலை ஒரு நாடாக அங்கீகரிக்கவே மாட்டோம் என்ற நியாயத்துக்காய் ஹமாஸ் போராட அனேகமான நாடுகள் ஹமாஸிற்கு எதிராய் போர்க்கொடி தூக்கின. அண்மைய அமெரிக்க விஜாத்தின் போது இஸ்ரேலிய பிரதமர் இகூட் ஒல்மேட் "முழுப் பிரதேசத்துக்குமான வரலாற்று உரிமை இஸ்ரே லியர்களுக்கே உரியது" என்றார். "இஸ்ரேலிய பிரதமர் மிகவும் நியாயமான கருத்தொன்றை கூறியுள்ளார்". என்று அடுத்தநாள் அனேகமான மேற்கு நாடுகளின் பத்திரிகைகள் எழுதின.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மின்சாரத்தை தனியார் கைகளுக்கு தாரை வார்க்க வேண்டுமா?

அரசாங்கத்தின் கீழ் உள்ள இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பு செய்வது என்ற பெயரில் தனியார் மயமாக்கும் முயற்சி விடாப்பிடியாக இடம் பெற்று வருகின்றது. அரசாங்க பொதுத்துறைகளில் காணப்படும் சீரழிவுகள் ஊழல் நிர்வாக முறைகேடுகள் போன்றவற்றால் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை அனுபவித்து வருகின்றனர் என்பது உண்மையே. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனியார்மயத்தை எண்பதுகளில் இருந்து எல்லா அரசாங்கங்களும் நடைமுறைப்படுத்தி வந்துள்ளன. எஞ்சிய ஒரு சில அரசாங்கத்தின் கீழ் உள்ள துறைகளில் மின்சார சபை மிகவும் முக்கியமானதாகும். அதனை தனியார்மயமாக்கும் படி உலக வங்கி ஏற்கனவே வற் புறுத்தி வந்துள்ளது. அதன் அடிப்படையி லேயே இப்பொழுது மறுசீரமைப்புக்கான சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் மின்சார சபையின் சகல தொழிற்சங்கங்களும் தமது எதிர்ப்பைத் தெரிவித்து நடவடிக்கையில் இறங்கப்போவதாக எச்சரித்தன. ஆதலால் 04-07-2006 அன்று பாராளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்ற முனைந்த இம் மின்சார மறு சீரமைப்பு சட்டமூலம் விவாதத்திற்கு எடுக்காது பின்போடப்பட்டுள்ளது. ஜனாதிபதி யின் தலையீட்டால் பின் போடப்பட்டுள்ளதாகவும் செய்தி வந் துள்ளது. அரசாங்கம் இவ்வாறு மின்சார சபையை மறுசீரமைப்பு என்ற பெயரில் தனியார் மயமாக்க இடமளித்தால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நடந்த அதே கதி தான் ஏற்படும். பெற்றோல் விலையை இந்தியாவின் ஐ.ஓ.சி யே தீர்மானிக்கவுள்ளமை போன்று மின்சாரத்தின் கட்டணத்தையும் பல்தேசியக் கம்பனிகளே தீர்மானித்து மக்களின் முதுகுகளில் மேலும் பாரச்சுமை ஏற்றும் நிலை ஏற்படும். அத்துடன் இது போன்று சுகாதாரம், புகையிரம், அரச வங்கிகள், தபால் போன்ற அரச துறைகளும் தனியார்மயத்துக்குள் தள்ளப்படும் அபாயம் தோன்றவே செய்யும். எனவே மின்சார சபை தனியார் மயப்படுத்தலை அனைத்து மக்களும் எதிர்த்து தடுத்து நிறுத்த வேண்டும்.

# பம்பேகம தொழிலாளர்கள் மீது இனவாதத் தாக்குதல்

கேகாலை மாவட்டத்திலுள்ள எகலியகொட பம்பேகம தோட்டத்தில் தமிழ் தொழிலாளர்களுடைய வீடு கள் தாக்கப்பட்டுள்ளன. 600 ற்கு மேற்பட்ட பெரும்பான்மையினக் காடையர்கள் தமிழ்தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளை தாக்கியதையடுத்து தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளனர்.

பம்பேகம தோட்டத்தில் நீண்டகாலமாக காவலாளியாக வேலை செய்து வந்த தமிழ் தொழிலாளியை தோட்ட நிர்வாகம் வேலையிலிருந்து நீக்கிவிட்டு சிங்களவரொருவரை காவலாளியாக நியமித்துள்ளது. இதனையடுத்து அந்த சிங்களத் தொழிலாளிக்கும் தமிழ் தொழிலாளிக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி மோதலாகியது.

அந்த மோதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே கிராமத்தியிலிருந்து பெரும்எண்ணிக்கையானோர் கடந்த 27 ஆம் திகதி இரவு 11 மணியளவில் பம்பேகம தோட்டத்திற்குள் புகுந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதல் நடத்துப்படும்போது அவசர பொலிஸ் பிரிவுக்கு தொலைபேசியில் அறிவிக்கப்பட்டபோதும் பொலிஸார் வழமைபோல் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமையை கட்டுப்படுத்தவில்லை. மாறாக பாதுகாப்பு வழங்க முடியாது என்று பொலிஸார் தெரிவித்ததாக மக்கள் கூறுகின்றனர்.

நாட்டில் இனமோதலுக்குரிய சூழ்நிலையே நிலவுகிறது. இந்த சூழ்நிலையை சாதகமாக்கிக் கொண்டு இனவாத காடையர்கள் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

நாட்டில் நிலவும் இனவாத சூழ்நிலைக்கு இரட்னபுரி, கேகாலை, களுத்துறை போன்ற மாவட்டங்களை சேர்ந்த தமிழ் தொழிலாளர்களும் குடும்பத்தினரும் தாக்கப்படுவது வழமையாகி விட்டது.

இதற்கு நீதிவிசாரணைகள் நடத்தப்படுவதால் மட்டும் எவ்வித பயனுமேற்படாது. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது தடுத்து நிறுத்தவும் முடியாது. அப்பிரதேச தமிழ் மக்கள் அடியோடு அப்பிரதேசத்திலிருந்து வெளியேற முடியாது. அரசியல் ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதன் மூலமே இவ்வாறான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த முடியும்.

# படுகொலைகளுக்கு ஆளாவோர் உழைக்கும் சாதாரண மக்களே!

வடக்கு கிழக்கில் நாளாந்தம் இடம் பெற்று வரும் படுகொலைகள் தொடர்கின்றன. இப் படுகொலைகளில் அரசின் ஆயுதப்படைகள், புலிகள் இயக்கப் படைகள், கருணா குழுவினர். முன்னாள் ஆயுதக் குழுக்கள் ஈடுபட்டு வருவது எல்லோருக்கும் பகிரங்கமானதாகும். இக் கொலைகள் சிலவற்றுக்கு உரிமை கோரிய செய்திகள் வெளிவருகின்றன. வேறு சிலவற்றுக்கு எவருமே உரிமை கோருவதில்லை. இக் கொலைகளால் குடும்பங்கள் தம்மவர்களை இழந்து நிர்க்கதிக்கு உள்ளாகின்றன. பெற்றோர் பிள்ளைகளையும் மனைவிமார் கணவன்மாரையும் பிள்ளைகள் தந்தையினரையும், உறவினர்கள் அயலவர்களையும் ஊரவர்கள் தம்மவர்களையும் இழக் கின்றனர். ஒரு புறம் இரத்த வெள்ளம் மறுபுறம் கண்ணீர் வெள்ளம். இழப்பிற்கு ஆளாகும் குடும்பங்களோ இருளில் மூழ்கின்றன. "அநாதை" யாகும் சிறுவர்கள், ஆதரவற்ற குழந்தைகள் "விதவை" யாகும் இளம் பெண்கள். என்னே கொடூரம். என்னே கொடுமை

இவ்வாறு நாளாந்தப்படுகொலைகளுக்கு உள்ளாகுவோர் பற்றி வெளிவரும் விபரங்கள் மேலும் அதிர்ச்சியாகின்றன. கொல்லப்படுவோர் கூலித் தொழிலாளி, வயல் வேலை செய்தவர் சிறுகடை வைத்திருந்தவர், தச்சு வேலை செய்த குடும்பம், மீனவர், என்று செய்திகள் கூறுவதுடன் இவர்களில் அதிகமானோர் வயது 18- முதல் 40 50 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பது கவனத்திற்குரியதாகும். இளைஞன், இளம் பெண் என்ற அடையாளம் அதிகமானதாகும். அன்றாடக் கொலைகளில் மரணமாவோரை எடுத்து நோக்கின் பெரும்பான்மையோர் சாதாரண உழைக்கும் குடும்பங்களில் தமது அன்றாட வருவாய்க்காக கஷ்டப்பட்டு தொழில் செய்வோராகவும் இளவயதுடையோராகவும் இருப்பதைக் காணலாம். இங்கே குறிப்பாக அவதானிக்க வேண்டியது யாதெனில் கடந்த 25 வருட தேசிய இன விடுதலைப் போராட்டக்களத்தில் "தமிழ் இன விடுதலை" க்கு எனத்தம்மை இணைத்துக் கொண்டமையை மையமாகக் கொண்டே இப்படுகொலைகள் இடம் பெற்று வருவதாகும். "தெருப்புழுதியிலே உன் உடம்பு/ உடம் பெல்லாம் இரத்த வெள்ளம் /நீதானா என்று குனிந்து பார்த்தேன் /ஓம் ராசா நீயே தான்" என்று புலம்பி அழும் தாய் மாரின் அவலக்குரல்கள் அன்றிலிருந்து இன்று வரை அதிகரித்தே வந்துள்ளது. ஆர் பெற்ற பிள்ளையோ பிணமானாள்/ இந்த அன்னையின் தனிமகளோ சவமானாள் என்ற நிலை நீடித்துக் கொண்டு செல்கிறது. ஒரு புறம் பேரினவாத ஒடுக்கு முறையின்கீழான அரச ஆயுதப்படைகளின் படுகொலைகள். மறுபுறம் இயக்கங் களுக்கிடையிலான சகோதரப்படு கொலைகள். சட்டம் நீதி நியாயம் மனசாட்சி என்பன வெல்லாம் துப்பாக்கிகளின் முன்னே தூசாகப் பறக்கின்றன. பழிக்குப் பழி எனக் கூறி படுகொலைகள் தத்தம் அளவில் நியாயப்படுத்தப்படுகின்றன. யாருக்காக யாரால் ஏன் இப்படுகொலைகள் கொடூரமாக நடாத்தப்படுகின்றன என்பதை சரியான அரசியல் நோக்கிலும் வர்க்கப் போராட்டக் கண்ணோட்டத்திலும் கருத்தியல் ரீதியில் அறிவு பூர்வமாகச் சிந்திக்கப்பட வேண்டும். பேரினவாத ராணுவ ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் அவசியம். ஆனால் மக்கள் மத்தியிலான படுகொலைகள் விடுதலைக்கு எவ்வகையிலும் உதவ மாட்டாது. கடந்த 25 வருடகாலப் போராட்டத்தில் இடம் பெற்றவைகள் பற்றிய சரியான மதிப்பீடுகளும் மாற்றியமை த்தல்களும் இல்லாது விடின் சொந்த இன அழிவுகள் அதிகரிக்கும் / இந்நிலை பேரினவாத சக்திகளுக்கும் அவர்களது அரவணைப்பாளர்களான ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளுக்கே உதவக் கூடியதாகும். மக்கள் நேசிப்பும் மனித நேயமும் கொண்ட சமூக நோக்கு எந்த விடுதலையினதும் அடிப்படையாகும்.

# கண்டதும் கேட்டதும்

-சாந்தன்-

### ✦ துப்பாக்கியும் ஒலி எழுப்பியும்

அண்மையில் அரசாங்கம் வடக்கு கிழக்கின் எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பிற்கென துப்பாக்கிகளை விநியோக்கித்து சிங்கள மக்களுக்கு பயிற்சிகளையும் வழங்கியதை ஊடகங்களில் காணமுடிந்தது. அரசாங்கம் இவ்வாறு செய்ய எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சி அதே மக்களுக்கு அபாய ஒலி எழுப்பும் கருவிகளைச் செய்வித்து விநியோத்து வருவதையும் அதே ஊடகங்களில் காணக் கூடியதாக இருந்தது. ஆனால் இந்த துப்பாக்கிகள் அபாய ஒலி எழுப்பிகள் ஆகியவற்றால் எல்லைக் கிராம மக்கள் பாதுகாப்பாக அமைதியாகத் தமது இயல்பு வாழ்வைத் தொடர முடியவில்லை. இடம் பெயர்ந்து முகாம்களில் அகதி வாழ்வையே மேற்கொண்டு வரும் நிர்ப்பந்தத்திலேயே உள்ளனர். துப்பாக்கி கொடுக்கும் அரசாங்கமும் அபாய ஒலி எழுப்பி வழங்கும் எதிர்க்கட்சியும் யுத்தத்திற்கு காரணமான தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உரியவாறு செயல்பட்டால் இவை எதுவுமே எல்லைக்கிராம சிங்கள மக்களுக்குத் தேவை இல்லை. அவர்கள் நிம்மதியாக வாழ முடியும். அல்லவா?

### ✦ மும்மணிகளும் மூவர்ணமும்

போர் நிறுத்தம் பற்றி மகிந்த சிந்தனையென ஊடகங்களில் வெளிவருவது ஒன்று. மகிந்தரின் சிந்தனை வேறொன்று இதனைச் சரிவரப் புரிந்து கொள்ளாதபடியால் தான் கிளிநொச்சி, ஒஸ்லோ உட்பட பலர் குழப்பிப் போயிருக்கிறார்கள். ஆனால் மகிந்தர் தெளிவாக இருக்கிறார். "இதுவரையிலும் தீவை ஆட்சிசெய்தவர்கள் கண்டிச்சிங்களவர்கள்- கண்டி அரசனைக் காட்டிக் கொடுத்த பரம்பரை. நான் தென்னிலங்கையன் புலிகளை ஒழித்துக்கட்ட என்னால் முடியும்" (கரையோரப் பகுதிகளை ஆட்சி செய்த சிங்களராசாக்கள் தமது மதிகேட்டினால் அந்நியரிடம் ஆட்சியை இழந்தது வேறுகதை) இதன்படி போர் நிறுத்த ஒப்பந்தத்தினைப் புலிகளைக் கொண்டே முறிக்கும்படி அவர்கள் மீது பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறார். அரும் பொட்டில் ஆட்சிக்கு வந்தவுடன் படையினரை அவிழ்த்து விட்டு விட்டார். கொடுமைக்கார்களான கொட்டகதெனிய சரத் பொன்சேகா, தயாசந்தகிரி கோதபாய ஆகியோர் வீடு கொளுத்துகிற ராசாவுக்கு நெருப்பு கொடுக்கும் மந்திரிகளைப் போல் இருக்கிறார்கள். முன்பு மும்மணிகளின் ஆசியுடன் மூன்று அந்நிய நாட்டவர்கள் ஆட்சிசெய்தார்கள். இனி அதே மும்மணிகளின் ஆசியுடன் மூவண்ணக் கொடிக்குச் சலாம் போட வேண்டி வரலாம். இந்தியாவில் இருந்து சமீபத்தில் இங்கு வந்திருந்த நம்பகமான ஒரிவரின் கூற்றுப்படி இந்திய உளவுப் படையினரும் கொள்கை வகுப்பாளர்களும் "சீன எதிர்ப்பு- அமெரிக்க ஆதரவு" என்ற வகையில் நடாந்து கொள்வதற்கான காரணம் என்ன வெனில் இவர்களுக்கும் இவர்களது சுற்றத்தவர்களுக்கும் அமெரிக்காவில் உயர் கல்வி, மற்றும் குடியுரிமை வசதிகள் கிடைக்கும் என்பதாகும். இந்திரா காந்தி அமெரிக்காவின் சேட்டைகளை நன்கறிந்தவர். அதன் பின் பிரதமராக வந்தவர்களுக்கு அமெரிக்காவைப்பற்றிய தெளிவான அறிவு இல்லை என்பதை விட ஏகாதிபத்திய விசுவாசத்தைத் தமது உயர் வர்க்க நலன்களுடன் இணைந்தே பார்த்து வருகிறார்கள் என்பதே அடிப்படையாகும்.

### ✦ கல்வியும் காசு கறப்புமு

கொழும்பில் சில விடயங்களை அவதானிக்க முடிகிறது. ஒன்று:- தனியார் வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிலர் உயர்தர வகுப்புக்களில் கற்போருக்குத் தொடர்ச்சியாக ஒரு பாடத்தை 5-6 மணித்தியாலங்கள் வரை கற்பிக்கின்றனர். தமது வசதியை மட்டும் கருத்திற் கொண்டே இவர்கள் இவ்வாறு செய்கின்றனர். கற்போர் அகலங்குறைந்த வாங்குகளில் மணித்தியாலக் கணக்காக உட்காரமுடியுமா என்பதனையோ அல்லது 1-2 மணித்தியாலங்களுக்கு மேல் கற்பவர்களால் கற்பிப்பவற்றைக் கிரகிக்க முடியாது என்பதனை இப் "பிரபல ஆசிரியர்கள்" தாமாக உணரமாட்டார்கள். ஒன்றில் கற்போர் உணர வைக்க வேண்டும் அல்லது கல்வித்திணைக்களம் கவனிக்க வேண்டும். ஒன்றரை மணிக்கே பாடசாலை மூடும் கல்வியமைச்சு எப்படி உணரும் என்பதே பிரச்சினை? சிறிய வகுப்பு மாணவர்கட்கும் கருத்தரங்கு நடாத்துகிறோம் என்ற பெயரில் பணம் கறப்பதில் தனியார் கல்வி நிலையங்கள் ஈடுபடுகின்றன. இதனை யாரும் கண்டு கொள்ளவதில்லை. இரண்டாவது:- தற்போதைய ஒழுங்கின்படி 1ம் தவனைப் பரீட்சைகளைப் பாடசாலை மட்டத் தில் நடாத்த வேண்டியதில்லை. ஆனால் சில பாடசாலைகள் பரீட்சைகளை நடாத்துவதற்காக பணம் வசூலித்து வினாத் தாள்களின் நேரத்தைக்குறைத்து ஏதோவொரு பரீட்சையை நடாத்துகிறார்கள். பெற்றோருக்கும் எதுவும் புரிவதில்லை, கல்விப்பகுதியும் கண்டுகொள்வதில்லை. தனியார்மய உலகமய மாதல் சூழலுக்குள் அமிழ்ந்து அடிமையாகிப் போகும் போக்கே கல்வித்துறையிலும் காணப்படுகிறது.

### ✦ வடக்கு கிழக்கிற்கு வெளியே தமிழர்

பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள் பெறுவதை ஊக்குவிக்கும் விளம்பர மொன்றினைச் சமீபத்தில் கண்டேன் வடகிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் பேசுவோர் இந்த ஆவணங்களைத் தமிழில் விண்ணப்பித்து பெற இதுவரை என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய அரச நிர்வாகங்களில் தமிழ் பாவனையின் கதி என்ன? இந்தத் தமிழர்களிடம் வாக்கு வேட்டையாடுவோர் இதற்கென்ன பதில் தருவார்கள்? குறிப்பாக மேலகத்தின் தமிழ் மக்களுக்கு "ஏகப்பிரதிநியாக" முயல்வோர் இதுபற்றி என்ன கூறுவார்கள்.

### ✦ அதிஷ்டம் தரும் ஆண்டு

கோடிக்கணக்கில் "வற்" வரி இறைவரித்திணைக்களத்தில் கொள்ளையடிக்கப்படும் வரை உள்ளகக் கணக்குப் பரிசோதகர்கள் (INTERNAL AUDITORS) என்ன செய்து கொண்டிருந்தார்கள் அல்லது அவர்களும் சேர்ந்துதான் செய்தார்களா? 500 கோடிக்கு அதிகமான பணம் மத்திய வங்கியின் அனுமதி, சுங்கப் பரிசோதனை இவற்றையெல்லாம் தாண்டி வெளிநாட்டுக்குக் கடத்தப்பட்டது எப்படி? கடன் வழங்கு வதற்காக அரச வங்கிகள் வழமையாகக் கடைப்பிடிக்கும் ஒழுங்கு விதிகளை மீறி அரசியல் வாதிகளின் அடியாட்களான பணக்காரர்களுக்கு கடனாக இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் வழங்கிய 600 கோடிக்கு அதிகமான பணம் இன்னமும் மீளப் பெறப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தப் புண்ணிய வான்கள் வட்டியாவது கட்டி வருகிறார்களா? இவர்கள் மீது இதுவரை எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாததால் கிடைத்த துணிவினால் தான் இறைவரித்திணைக்களக் கொள்ளை நடை பெற்றிருக்கிறது. அதே தைரியந்தான் பிறி தொரு மந்திரிக்கும் தெரிந்தோ தெரியாமலோ அவரின் அலுவலகத்தினூடாக போலி விசாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பௌத்த புனித ஜயந்தி 2550ம் ஆண்டு நம் நாட்டுக் கொள்ளையர்கட்கும் மோசடிக்காரருக்கும் அதிட்டமான ஆண்டு போலும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மதவெறியர்கள் எப்படி மாக்ஸிய வாதிகளாக முடியும்?

## தோழர் பன்னீர் தொடுத்த கணை

ஜே.வி.பி தங்களை மார்க்சிச வாதிகள் என்று கூறிக் கொள்கிறார்கள். மார்க்சிஸ்டுக்கள் உலகின் அடக்கப்பட்ட மக்களுக்காகவும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்காகவும் குரல் கொடுப்பவர்கள் போராடுபவர்கள். ஆனால் ஜே.வி.பி யினர் அவ்வாறு செய்கிறார்களா? அடக்கப்பட்ட மக்கள் சார்பாகவும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் சார்பாகவும் செயற்படுகின்றனரா? என்று பார்த்தால் இல்லை என்றே கூறவேண்டும். இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் வலப்பனைப் பிரதேச சபை உறுப்பினர் தோழர் ச.பன்னீர்செல்வம் கடந்த 22ம் திகதி வலப்பனை பிரதேச சபையில் நடந்த கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஜே.வி.பியின் வலப்பனை பிரதேச சபை உறுப்பினர் மத்தும பண்டார "பிரிவினைவாத பயங்கரவாதத்திற்கு எதிராக" எனும் பிரேரணையை முன்வைத்து உரை நிகழ்த்திய போது புலிகள் பயங்கரவாதிகள் என்றும் பிரபாகரனை அமெரிக்க ஏகாதிபத்தியமே இயக்குகிறது என்றும் குறிப்பிட்டார். மேற்படி மத்தும பண்டாரவின் பிரேரணை தொடர்பாக உரையாற்றும் போது தோழர் பன்னீர் குறிப்பிட்டதாவது, "உலகில் அடக்கப்பட்ட மக்கள் தங்கள் விடு தலைக்காகப் போராடிய போதெல்லாம் அவர்கள் அங்கு ஆட்சிசெய் தவர்களால் பயங்கரவாதிகள் என்றே முத்திரை குத்தப்பட்டார்கள். இதற்கு லெனினோ, மாஓ சேதுங் கோ, பிடல் கெஸ்ட்ரோவோ கூட விதிவிலக்கல்ல. தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினையை ஜே.வி.பி மாக்ஸிய நிலை நின்று பேசமுடியாது தடுமாறுகிற நிலையில் இனப்பிரச்சினைக்கு எத்தகைய தீர்வை முன் வைக்கப் போகிறது. ஜே.வி.பி இன்று உழைக்கும் மக்களின் பிரச்சினையைப் பேச வேண்டும். மலையக மக்களின் உரிமைகளுக்காகப் பேசவேண்டும். ஆனால் இனவாதத்திற்கும் மத வாதத்திற்கும் ஆட்பட்டு நிற்கின்ற வர்களால் அவ்வாறு பேசமுடியாது. மத்தும பண்டார இன்று இறைவணக்கத்தில் ஈடுபட்டிருந்ததைக் கண்டேன். அவர் ஒரு மாக்ஸவாதியா? மாக்ஸிஸ்டுக்கள் மதங்களுக்கு அப்பாற்பட்டு செயற்பட வேண்டும். மத்தும பண்டார இறைவணக்கத்தில் ஈடுபட்டதன் மூலம் தான் ஒரு மதத்தின் சார்பாளர் என்பதனை அடையாளப்படுத்தியுள்ளார். இன்று இனப் பிரச்சினையால் அதிகம் மலையக மக்களே பாதிக்கப்பட்டுள்ளார்கள். மலையக இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் தடுத்து வைக்கப்படுவதும் சித்திர வதைக்கு உள்ளாக்கப்படுவதும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இனப்பிரச்சினை என்பது வடக்கு கிழக்கை மட்டுமன்றி இலங்கையில் உள்ள அனைத்து மக்களையும் பாதிப்புறச் செய்து வருகிறது. எனவே இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும். யுத்தம் எவ்வகையிலும் தீர்வாகாது" என்றும் கூறினார்.

# கல்கந்தை தோட்டத்தில் பொலிஸார் கெடுபிடி

தலவாக்கொல்லை கிறேட்டுவெஸ்டன் கல்கந்தை தோட்டத் தொழிலாள குடும்பங்கள் பொலிஸாரின் பாதுகாப்பு கெடுபிடிகளுக்குள்ளாகி வருகின்றன. சுற்றிவளைப்பு, சோதனை, விசாரணைகள், ரோந்து போன்ற நடவடிக்கைகளினால் கல்கந்தை மக்கள் அச்சமடைந்துள்ளதுடன் அமைதி இழந்துள்ளனர். நானுஓயா கிறேட்வெஸ்டன் புகையிரத நிலையங்களுக்கிடையில் ரயில் பாதையில் சிலர் நாசகாரவேலைகளில் ஈடுபடமுற்பட்டதாக பொலிஸ் இராணுவம் மற்றும் அதிரடிப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அப்பகுதியில் அதிகரிக்கப்பட்டிருந்தன.

என்றும் இல்லாதவாறு கிறேட்டுவெஸ்டன் கல்கந்தை தோட்டத்தில் பொலிஸார் அடிக்கடி சுற்றிவளைத்துத் தேடுதல்களை செய்தனர். நள்ளிரவு வேளையில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகளும் தேடுதல்களும் அதிகரிக்கப்படிருந்தன. அந்நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடக்கின்றன. தோட்டத்தொழிலாளர்களும், அவர்களது குடும்பத்தினரும் பொலிசாரால் விசாரிக்கப்படுகின்றனர். அவர்களது வருமானம் தொழில் முயற்சிகள் பற்றியெல்லாம் பொலிஸார் குடைந்து குடைந்து கேள்விகள் கேட்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் அவர்களது வீடுகளை திருத்திக்கட்டியிருந்தால் அதற்கு செலவிட்ட பணத்தை எங்கிருந்து பெற்றார்கள் என்றும், அவர்களுக்கு வடக்குகிழக்கில் உறவினர்கள் இருக்கிறார்களா என்றும் அவர்கள் தோட்டத்தொழிலை விட மேற்கொள்ளும் வேறு தொழில் முயற்சிகள் பற்றியும் பொலிஸார் கேள்விகளை கேட்டுள்ளனர்.

பாதுகாப்பு என்ற பேரில் மேற்கொள்ளப்படும் ரோந்து நடவடிக்கைகளால் அடிக்கடி தோட்டத்தொழிலார்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப் படுகிறது. அடிக்கடி பொலிஸார் தோட்டங்களுக்கு செல்வதால் மக்கள் பீதியடைந்துள்ளனர். அமைதி இழந்துள்ளனர். இந்நடவடிக்கைகள் மேலும் தொடருமானால் அமைதியீனம் ஏற்படுவதற்கு வழி ஏற்படும்.

வெறும் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்பு என்ற பேரில் தோட்டங்களுக்குள் இலகுவாக பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் செல்வதும். தொழிலாளர்களை இம்சிக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற் கொள்வதும் தோட்டங்களில் நிரந்தர அமைதியீனத்தையே ஏற்படுத்தும். கிறேட்வெஸ்டன் நானுஓயா ரயில்பாதையில் வேலைசெய்த சிங்கள ரயில்வே ஊழியர்களுக்கும் அவ்வழியே நடந்துசென்ற தமிழ் இளைஞர்களுக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்க மும் கைகலப்பும் பற்றி சிங்கள ரயில்வே ஊழியர்கள் பொலிஸாருக்கு பிழையான முறைப்பாடு செய்ததை அடுத்தே பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. ரயில்பாதையில் சில தமிழ் இளைஞர்கள் நாசகார வேலைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்கள் புலிகள் இயக்கத்தை சேர் ந்தவர்களாக இருக்கலாம் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது பிழையான முறைப்பாடு என்று தெரியவந்த பிறகும் அப்பகுதியில் பொலிஸாரின் கெடுபிடி குறைந்ததாக இல்லை. இந்த கெடுபிடிகள் குறித்து தோட்டத்தொழிலாளர்கள் முறைப்பாடுகளை செய்திருந்தபோதும் சம்பந்தப்பட்ட பொலிஸார் கவனத்தில் எடுத்துக்கொள்வதாக இல்லை. வடக்கு கிழக்கில் நிலைமைகள் மோசமடையும் ஒவ்வொரு காலகட்டத்திலும் மலையகத்தில் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் கெடுபிடிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் ஆளாவது வழமையாகி விட்டன.

# பலாங்கொடை மாணவர்களுக்கு அட்டன் ஹைலண்ட்ஸில் அனுமதி மறுப்பு

மலையகத்தின் ஏனைய மாவட்ட மலையகத்தமிழ் மாணவர்களுக்கு அட்டன் ஹைலண்ஸ் கல்லூரியில் க.பொ.த உயர்தரப்பிரிவில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் கற்பதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரண தரத்தில் திறமையாக சித்தியடைந்த பலாங்கொடையைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் உயர்தரத்தில் படிப்பதற்கு இரத்தினபுரி மாவட்டத்தில் பாடசாலைகள் இல்லாத நிலையில் அட்டன் ஹைலண்ட்ஸ்கல்லூரியில் கணித துறையில் படிப்பதற்கு விண்ணப்பித்துள்ளனர். வெளிமாவட்டத்தாருக்கு அனுமதி வழங்கப்படக் கூடாது என்று மத்திய மாகாண கல்வி அமைச்சர் அறிவுறுத்தல் கொடுத்துள்ளதால் அவர்களுக்கு மேற்படி அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் அம்மாணவர்கள் உயர் கல்வியை தொடரமுடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் மலையகத்தின் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தோருக்கென குறிப்பிட்ட இடங்கள் திறமையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருந்தன. வளர்ச்சியடைந்த பிற மாவட்டத்தை சேர்ந்தவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காக நுவரெலியா மாவட்ட பாடசாலைகளில் அதுவும் குறிப்பாக அட்டன் ஹைலண்ட்ஸ் அனுமதி பெற்று படிப்பதை வழ க்கமாக கொண்டுள்ளனர். அதனால் நுவரேலியா மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும் மாணவர்களின் வாய்ப்பு இல்லாமல் போகிறது. இதனால் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

நுவரேலியா மாவட்டமே மலையகத்தின் கல்வியில் வளர்ச்சியடைந்துள்ளதாக கொள்ளப்படுகிறது. க. பொ. த உயர்தரப்பிரிவில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்கு சிறந்த பாடசாலையாக அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியே கொள்ளப்படுகிறது. அதனால் மலையகத்தின் பதுளை, இரட்னபுரி, கேகாலை, களுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மலையகத்தமிழ் மாணவர்கள் க.பொ.த உயர்தரப்பிரிவில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளை கற்பதற்கு அட்டன் ஹெலண்ட்ஸ் கல்லூரியையே நாடிச் செல்கின்றனர். பாடசாலை வசதியும் வளர்ச்சியும் கொண்ட மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு இடமளிக்கக் கூடாது என்ற முடிவினால் வளர்ச்சி குறைந்த பாடசாலை வசதியற்ற மலையக மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கும் இடமளிக்கப்படா திருப்பது நியாயமாகாது. குருநாகல், கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் தமிழ்க் கல்வி சாதாரண வளர்ச்சியடைந்தாகக் கூட இல்லை. நுவரேலியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடமளித்துப்பின்னர் மேலதிக வகுப்பை ஏற்படுத்தியாவது மேற்படி மலையக மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் இடமளிப்பதே சரியான தாகும். ஏனைய மலையக மாவட்டங்களை சேர்ந்தவர்கள் கொழும்பு போன்ற வசதியான மாவட்ட பாடசாலைகளில் அனுமதியை பெறவும் முடியாது. அனுமதி பெற்றாலும் பல்கலைக் கழக அனுமதியை பெறுவது கடினம்.

இதுவிடயத்தில் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி அதிபரும் நிர்வாகமும் திறந்த மனத்துடனேயே இருப்பதாக தெரிகிறது. மத்திய மாகாண கல்வியாமைச்சர் அருள்சாமி அவரது முடிவை மாற்றி மலையக மாவட்டங்களை சேர்ந்தோருக்கு இடமளிக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். என்பது பெற்றோர்களின் எதிர்பார்ப்பாகும்

# நாளை - ஒரு நாள்

இற்றை நாள்
இதயம் மரத்துப் போன பின்னும்
ஒவ்வொரு ராத்திரியும்
உன் நினைவு
என்னை அலைக்கழித்தது
'காமுகர்கள் உன்னை கண்டபடி
மொய்த்துக் குதறியதாய்' – செய்தி
பத்திரிகைகள் பரபரத்தன
ஊடகங்கள் உறுமின
நாங்கள் கைகோர்த்து
ஆக்ரோஷமாய்க் கத்தினோம்
பாலியல் பலாத்காரம்!
பாலியல் பலாத்காரம்!
எரிந்து போ சாம்பலாய்
என எரித்தனர்.
மறுநாள்
செய்தி பரப்பிய பத்திரிகை
எரிந்தே போனது!
காமுகர்களுக்காய்
பிணந்தின்னி கழுகுகளுக்காய்
காப்பாளர்கள், காரியாலயங்கள் திரண்டன!
வலியது பொருளாதாரம்
பாவம் நீ......
இருட்டுக்குள்.........
நீ மட்டும் காணாமல் போனாய்.
உன் உணர்வுகள் நைந்து போயின
உன் சவ்வுகள் உடைந்து போயின
உன் கனவுகள் நொருங்கின
உன் காத்திருப்புக்கள் கருகிப் போயின!
யாரும் உன்னை
கண்டு கொள்ளவேயில்லை!
உன் உள்ளாடைகள்
வெளிப்படுத்தாத விசனம் எண்ணி
ஒவ்வொரு ராத்திரியும் அழும்
நீயும் நைந்துதான் போனாய்!
மேய்ப்பர்கள்
செம்மறிகளைத் தின்று தீர்ப்பது
பூமிக்கு புதிதல்ல!
நம் மண்ணுக்குங் கூட!
உறங்குகின்ற எரிமலைகள்
சீக்கிரமே வெடிக்கட்டும்
அவன் நஞ்சுண்ட கண்டனானாலும்
சாம்பலாவான்– சாவான்
செத்துப் போவதற்கு முன்–
ஒரு செய்தி........
காமுகனே உனக்கும்
நாளை
பெண்கள் பிறப்பார்கள்!

-சந்திரலேகா கிங்ஸ்லி-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 13 ஆடி 2006 பக்கம் 12 விலை 15/- சுழற்சி 93

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே:011-2435117,தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

## இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி இந்தியாவின் கருத்து

சாதாரண தமிழ்மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்றும் அதிகாரப்பங்கீட்டின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இந்திய பிரதமர் மன்மோகன்சிங் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீராவிடம் தெரிவித்துள்ளார். இலங்கையின் தற்போதைய நிலைமை பற்றி விளக்கமளிப்பதற்காக இந்தியாவிற்கு சென்றிருந்த மங்கள சமரவீரவிடமே அவ்வாறு கூறப்பட்டுள்ளது.

"இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கைகளின் மூலம் தீர்வு காண முடியாது பேச்சுவார்த்தையின் மூலமே தீர்வு காண முடியும். இலங்கையின் இறைமையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் இந்தியா முழுமையாக ஆதரிக்கிறது. எனினும் அங்கு வாழும் சிறுபான்மை மக்களின் குறிப்பாக தமிழர்கள் கௌரவத்துடன் வாழும் சூழலை உருவாக்க வேண்டும்." என்று பெங்களூருக்கு கடந்த மாதக் கடைசியில் விஜயம் செய்திருந்த போது இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதற்கு பிறகும் கருத்து தெரிவித்த ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா ஒற்றையாட்சியின் கீழ் தீர்வை காண்பதிலேயே ஜனாதிபதி மஹிந்த முயற்சித்து வருவதாகத் தெரிவித்தர். இவர் உட்பட பல அமைச்சர்கள் சந்திரிகா ஆட்சிக்காலத்தில் அதிகாரப்பங்கீட்டின் மூலமே சமஷ்டி முறையின் ஊடகத் தீர்வு காணப்படவேண்டும் என்று கூறிவந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் இனப்பிரச்சினையை கொடிய யுத்தமாக்கியதில் இந்தியாவுக்கு பாரிய பங்கிருக்கிறது. ஆனால் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க தயாரில்லாதிருந்த இலங்கையின் பேரினவாதம் 13வது அரசியல் யாப்பு திருத்தத்துடன் மாகாணசபை முறையை ஏற்றுக் கொண்டது. வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் (தற்காலிகமாக) இணைத்து ஓரலகாக ஏற்றுக்கொண்டது.

அதாவது 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் ஒற்றையாட்சித்தன்மையிலிருந்து சிறிதளவாவது மாற்றங்களை செய்த்தயாரில்லாமல் இருந்த அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜவர்த்தன மத்திய அரசின் அதிகா ரங்களில் சிலவற்றை மாகாணசபைகளுக்கு வழங்க இணங்கியது. வடக்கு கிழக்கும் தமிழ் மக்கள் வாழும் பாரம்பரிய பிரதேசம் என்பதை மறுத்து வந்த பேரினவாதிகள் நிர்ப்பந்தம் காரணமாக அவற்றை இணைந்த பிர தேசமாக ஏற்றுக் கொண்டனர்.

இதனை திணிக்கப்பட்ட தீர்வென்றே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்போர் அனைவரும் கூறினர். 1988 மாகாண சபை தேர்தலில் அத்தீர்வை ஏற்றுக்கொண்ட ஈ பி.ஆர்.எல்.எப். ரெலோ போன்ற இந்திய சார்பு தமிழ் அமைப்புகள் போட்டியிட்டன. வென்று ஆட்சியும் நடத்தின. அவற்றுக்கு இந்தியப்படைகள் அனுசரனையாக பாதுகாப்பாக இருந்தன. இலங்கை இராணுவத்தினதும் இந்திய இராணுவத்தினதும் அடக்குமுறை நடவடிக்கைகளால் மீண்டும் போராட்டங்கள் வெடித்தன. அதனூடாக தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு தம்மை வலுவான அமைப்பாக நிலைநிறுத்திக் கொண்டது.

இந்திய இராணுவத்திற்கு எதிரான தாக்குதல் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலை போன்றவற்றினால் தமிழ்மக்களின் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டையே இந்தியா எடுத்து வந்தது.

ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கத்திற்கும் த.வி.பு இயக்கத்திற்குமடையில் பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பம் ஏற்பட்டபோதெல்லாம் அதன் உளவுப் பிரிவான "றோ" திட்டமிட்டு செயற்பட்டுள்ளது. அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியா தூரவே ஒதுங்கி இருந்தது. இலங்கை அரசிற்கு இராணுவ உதவிகளை செய்து வந்தது. இவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த இந்தியா தற்போது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தமிழ்மக்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று கூறுவதும் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாதது போன்றும் தமிழ்மக்களின் மீது அனுதாபம் கொண்டிருப்பது போன்றும் ஒரு தோற்றப்பாட்டினை கொள்வது ஏன்?

இதற்கு பல காரணங்கள் இருக்கலாம். இலங்கையின் எண்ணெய் வர்த்தகம் உட்பட பல விடயங்களில் இந்தியா ஆதிக்கம் செலுத்துகிறது. ஏகாதிபத்திய உலகமயமாதலில் இந்திய முதலாளிவர்க்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் இணைந்து கொண்டு அதன் பிராந்திய மேலாதிக்கத்தை நிலைநிறுத்துகிறது. தமிழக மக்கள் மத்தியில் மீண்டும் இலங்கைத் தமிழ் மக்கள் மீதான அனுதாபமும் அதிகரித்துள்ளது. தமிழக அரசியல் சக்திகளின் அழுத்தங்களும் மேலோங்கி இருக்கின்றன.

பிரதமர் மன்மோகன் சிங் அண்மையில் கூறிய கருத்துக்கள் இலங்கை அரசாங்கத்தை உற்சாகப்படுத்துவதாக இல்லை என்பதற்காக இந்திய அரசாங்கம் இனி ஒருபோதும் இலங்கை அரசாங்கத்திற்கு உதப்போவதில்லை என்று தமிழ்த் தேசியவாதிகளும் பழைமை வாதிகளும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். இந்தியா அமெரிக்கா ஐரோப்பா பற்றிய அவர்களின் அரசியல் நிலைப்பாட்டுடன் தொடர்புடையதுமட்டுமன்றி மாறாமலும். இருந்து வருவதைக் காணலாம். அடித்தாலும் உதைத்தாலும் திட்டினாலும் நிராகரித்தாலும் நாங்கள் உங்கள் என்னென்றுமான விசுவாசிகளே என்றவாறே இந்தத் தமிழ்ப் பழைமைவாதிகள் நடந்து கொள்கிறார்கள். தமிழ் ஊடகங்களில் இதன் வெளிப்பாட்டைக்காண இயலும். இந்தியா இப்பிராந் தியத்தின் மேலாதிக்க சக்தியாகவும் உலகமயமாதலின் சின்னமாகவும் இருப்பதால் இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறுவதை மட்டுமே வரவேற்கக் கூடிய ஒன்றாகும் என்பதை விளங்கிக் கொள்வது போதுமானதாகும்.

இலங்கையின் இன்பிரச்சினையில் இந்தியாவின் அணுகு முறை எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும். தீர்வு பற்றிய கருத்தை மட்டும் கவனத்தில் கொள்ளும் அதே வேளை அதன் சுயரூபத்தைப் பற்றி எச்சரிக்கையாகவே இருப்பது அவசியம்.

**ஆசிரியர் குழு**

## இலங்கையில் நாற்கோணச் சமர் பலன்பெறுவோரும் பலியாக்கப்படும் மக்களும்

இலங்கையில் இப்பொழுது தேசிய இனப்பிரச்சினையை மையமாக வைத்து நாற்கோணச் சமர் இடம் பெற்று வருகிறது. இச் சமரிலே இலங்கை அரசாங்கம், விடுதலைப்புலிகள் இயக்கம், இந்தியா, அமெரிக்க- ஐரோப்பிய ஒன்றியம் என்பன நான்கு தரப்புகளாக பங்கு கொண்டிருக்கின்றன. இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கமும் சமரின் பிரதான போட்டியாளர்களாக இருந்து வரும் அதேவேளை இந்திய அமெரிக்க- ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன சமர் முடிவுக்கு வந்து விடாதவாறு தத்தமது பங்களிப்பை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் வழங்கி வருகின்றன.

மேற்படி நாற்கோணச் சமரிலே நாளாந்தம் மக்கள் பலிகொள்ளப்படும் நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன. குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களின் அன்றாட வாழ்வு அவலங்களுடனேயே கழிந்து வருகின்ற போக்கு உச்சமடைந்து காணப்படுகிறது. படுகொலைகள் ஆட்கடத்தல்கள் தாக்குதல்கள் இயல்புவாழ்வு குலைதல் தொடர்கின்றன.

இச் சமருக்கான ஆடுகளமாக தேசிய இனப்பிரச்சினையே இருந்து வருகிறது. இக் களத்தை இலங்கையில் உருவாக்க அடித்தளமிட்டவர்கள் வெள்ளைக் கொலனித்துவவாதிகளாவர். அதனைக் கடந்த நூற்றாண்டில் கட்டியெழுப்பியவர்கள் நிலவுடைமை வழிவந்த மேட்டுக்குடி முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினர். இந் நாட்டின் தமிழ் மக்களையும் வடக்கு கிழக்கு பிரதேசங்களையும் பாகுபாடு புறக்கணிப்பு ஓரங்கட்டல் போன்றவற்றால் திட்டமிட்டே இன மதமொழி அடிப்படையில் ஆளும் தரப்பாக உள்ள பேரினவாத சக்திகள் ஒடுக்கு முறைக்கு உள்ளக்கி வந்துள்ளனர்கள். இதனை அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் தமது தேவைகளுக்கும் நலன்களுக்கும் நன்கு பயன்படுத்த ஆரம்பித்தன. தூர நோக்கிலும் தலைமைத்துவ மதிநுட்பத்துடனும் நாட்டையும் அனைத்து மக்களையும் ஐக்கியப் படுத்தி வழிநடாத்தத் தவறிய முதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்கத் தலைமைகள் இன ஒடுக்குமுறையை உக்கிரப்படுத்தி வந்ததுடன் தேசிய இனப்பிரச்சினையை நாற்கோணச் சமரா க்குவதிலும் முன்னின்றனர். இதனை 1977ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தொடங்கி வைத்தார். அவரது ஆழ்மன விருப்பம் இலங்கையை அமெரிக்காவின் அப்பட்டமான மறு கொலனியாக்குவதேயாகும். அன்றுவரை நடுநிலைத் தோற்றத்தை நிலை நிறுத்தி வந்த இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை மாற்றி நேரடி அமெரிக்க சார்பு நிலைக்கு இட்டுச் செல்ல ஜே.ஆர். முற்பட்டார் இதனை இந்திரா காந்தி தலைமையிலான இந்திய ஆளும் வர்க்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. நமது நாட்டிற்கு அண்மையில் அமைந்திருக்கும் இத் தீவு நாட்டில் அமெரிக்க ஆதிக்கம் வலுப்பெறுவதை அவர்களால் உள்வாங்கிக் கொள்ள இயலவில்லை. இந்திரா காந்தி- ஜே.ஆர் முறுகல் நிலை ஏற்பட்டது.

ஆனால் ஜே.ஆர். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழுத்தும் தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்தார். தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்க மறுத்த ஜே.ஆர். அவர்களிடையே எழுந்த தமிழீழக் கோரிக்கைக்குப் பாடம் கற்பிக்கவும் முன்வந்தார். அதனை அப்பட்டமாகவே பாராளுமன்றத்தில் "யுத்தம் என்றால் யுத்தம் சமாதானம் என்றால் சமாதானம்" என்றும் பிரகடனம் செய்தார். இதன் அடிப்படையிலேயே அடுத்தடுத்து பருவ கால உற்சவங்கள் நடாத்தப்படுவது போன்று திட்டமிட்ட இனவன்முறையைத் தமிழ் மக்கள் மீது ஏவிக் கொண்டார். இவை அரச படைகளாலும் ஐக்கிய தேசியக் கட்சிக் குண்டர்களாலும் ஆயுதம் கொண்டு ஆயுதமற்ற தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட இன ஒடுக்குமுறைத் தாக்குதல்களாக்கப்பட்டன.

இவை இடம் பெற்ற காலப் பகுதியில் தான் இலங்கையின் பொருளாதார அரசியல் ராணுவ கட்டமைப்பு அமெரிக்காவின் வழிகாட்டலில் ஜே.ஆரின் தலைமையில் மாற்றியமைக்கும் செயற்பாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக முன்னெடுக்கப்பட்டன. அமெரிக்க ஆதிக்கம் ஜே.ஆர். தலைமையில் இலங்கையில் நிலை நாட்டப்படுவதை தடுப்பது என்ற முடிவுடன் இந்தியா செயலாற்ற களத்தில் இறங்கியது. 1983ம் ஆண்டின் தமிழ் மக்கள் மீதான கொடூரமிக்கதும் வரலாற்றுக் கறை படிந்ததுமான பேரினவாத வன்முறையுடன் இந்தியா இலங்கையின் இனப் பிரச்சினை ஆடுகளத்திலே தன்னை ஒரு தரப்பாக உட்புகுத்திக் கொண்டது. ஜே.ஆர்.ஆரின் திமிர்த்தன நடவடிக்கைகளுக்குப் பதிலடி கொடுக்கும் தொடர் நடவடிக்கைகளை மறைமுகமாகவும் நேரடியாகவும் தமிழர் தரப்பைப் பயன்படுத்தி இந்தியா மேற்கொண்டது. இதில் இந்திய உளவு நிறுவனமான "றோ" வழிகாட்டும் பாத்திரத்தை வகித்தது. மறுபுறத்திலே அமெரிக்காவும் சி.ஐ.ஏயும் தமது வழமையான ஊடுருவல்களைத் தொடர்ந்தது. இரு தரப்பு ஆடுகளமாக இருந்து வந்த இலங்கை இனப்பிரச்சினை நான்கு தரப்புகள் பங்கு கொள்ளும். சமர்க்களமாக விரிவு பெற்றது. ஜே.ஆர். வகுத்த நரித்தனமான ஒவ்வொரு தந்திரோபாயமும் இச் சமர்க்களத்தை மேன்மேலும் மோசமடையச் செய்தது. அந்த ஏகாதிபத்திய அடிவருடியின் தேசவிரோத நிலைப்பாட்டையே அவருக்குப் பின் வந்த நிறைவேற்று ஜனாதிபதிகளான ஆர். பிரேமதாச டி.பி. விஜதுங்கா. சந்திரிகா ஆகியோர் முன்னெடுத்தனர். அந்த அடிச்சுவட்டிலேயே இப்பொழுது மகிந்த ராஜபக்ஷவும் வழி நடக்கின்றார்.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் இடம் பெற்று வந்த மேற்படி சமர்க்களத்திலே தமிழ் மக்கள் தரப்பில் ஏறத்தாள ஒரு லட்சம் உயிர்கள் பலிகொள்ளப்பட்டுள்ளன. முஸ்லீம் சிங்கள மக்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர். சொத்துக்கள் கோடிக்கணக்கில் அழிக்கப்பட்டு பத்துலட்சத்திற்கு மேற்பட்டோர். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளைக்கப்பட்டனர். ஆனால் இன்று வரை இந் நாற்கோணச் சமரின் போட்டி முடிவுக்கு வரக் கூடிய எவ்வித அறிகுறியையும் வெளிக்காட்டவில்லை.

ஒவ்வொரு தரப்பும் தத்தமது நிலையில் உறுதியாக இருந்து தங்கள் இலக்குகளை அடைவதிலேயே குறியாக இருந்தும் வருகின்றன. பிரதான தரப்புகளான அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஒன்றையொன்று முறியடித்து மேவிச் செல்லவே முற்பட்டு நிற்கின்றன. குறிப்பாக இன்றைய மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பேரினவாதத்தை முன்னெடுப்பதிலும் புலிகளை பலவீனப்படுத்தி அழித்து விடலாம் என்ற குருட்டு நம்பிக்கையிலும் செயலாற்றி வருகின்றது. அதனால் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வை வழங்கத் தயாரில்லாத நிலையைக் கடைப்பிடிக்கின்றது. அதே வேளை புலிகள் இயக்கம் தன்னைத் தனிப்பலமாக்கி மகிந்தவின் பலவீனமான அரசாங்கத்தை முறியடித்து தமது தமிழீழக் குறிக்கோளை மையப்படுத்திய தந்திரோபாயத்தையே கையாண்டு வருகின்றது. சமபலம் சமத்தரப்பு என்பனவற்றின் ஊடாக வடக்கு கிழக்கில் தமது தனி அதிகார ஆதிக்கத்தை நிலை நாட்டும் வகையிலேயே புலிகள் இயக்கம் காய்களை நகர்த்தி வருகின்றது.

அதேவேளை இந்திய பிராந்திய மேலாதிக்க சக்திகள் இந் நாற்கோணச் சமர்க்களத்திலிருந்து முற்று முழுதாக விடுபட்டுக் கொள்ளத் தயாரில்லை. காரணம் பிராந்தியத்தின் பெரிய அண்ணன் பாத்திரத்தை இழக்கதயார் இல்லாத நிலையில் தனது பொருளாதார அரசியல் பிடிகளை இலங்கையில் இறுக்கி வைத்திருக்கவே செய்கிறது. எனவே இலங்கை மீதான இந்தியப் பிடி என்றும் பேணப்படுவதையையே இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் கொண்டிருக்கிறார்கள். இதன் அடிப்படையிலேயே ஒரு புறத்தால் இலங்கை அரசாங்கத்தையும் புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய தமிழர் இயக்கங்களையும் இந்தியா பல நிலைகளிலும் பயன்படுத்தி வருகின்றது. அதேவேளை புலிகள் இயக்கத்தின் மீதான வன்மத்தைக் தொடர்ந்து கொண்டிருக்கவும் செய்கின்றது.

அவ்வாறே அமெரிக்க- ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தமது காய்களை தேசிய இனப்பிரச்சினையின் சமர்க்களத்தில் நகர்த்தி வருகின்றன. அவர்களது நோக்கும் போக்கும் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வும் சமாதானமும் நிலவ வேண்டும் என்பதல்ல. அவர்கள் முன்னெடுத்து வரும் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் ஊடாக தமது பொருளாதார அரசியல் ராணுவ ஆதிக்கத்தை இலங்கையில் நிலை பெறச் செய்து நவ கொலனித்துவமாக்கிக் கொள்வதற்கேயாகும். அதற்கு அமெரிக்கா சகல வழிகளிலும் தலைமை வகித்த வருகின்றது.

இவ்வாறான நாற்கோண சமர்க்களத்தில் அடுத்த கட்ட நகர்வு எவ்வாறு அமையப் போகின்றது என்று எதிர்வு கூற முடியாத உச்ச கட்ட நெருக்கடி நிலையே காணப்படுகின்றது. நாட்டையும் மக்களையும் தேசிய இனங்களையும் மையமாகக் கொண்ட முடிவுகளும் தீர்வுகளுமே அனைத்து மக்களுக்கும் தேவைப் படுகிறது. அதற்கான தீர்வை இன்றைய நாற்கோண சமர்க்களத்தில் கண்டு கொள்ள முடியுமா? என்பதே மக்களின் பாரிய எதிர்பார்ப்பாக உள்ளது. நாட்டின் அரசியல் பொருளாதார யதார்த்த நிலைமைகளுக்கு ஏற்ப தூரநோக்குடனான நிதானமான கொள்கையும் நடைமுறையும் தோற்றுவிக்கப்படாது விட்டால் பாரிய அழிவுகளை நாடும் மக்களும் சந்திப்பதை தவிர்க்க முடியாது. அதனையிட்டு பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினருக்கு எவ்வித கரிசனையோ கவலையோ கிடையாது. அவர்களுக்கு மக்களிடன் துன்ப துயரங்கள் யுத்த அழிவுகள் பொருட்டல்ல.

> **மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பேரினவாதத்தை முன்னெடுப்பதிலும் புலிகளை பலவீனப்படுத்தி அழித்து விடலாம் என்ற குருட்டு நம்பிக்கையிலும் செயலாற்றி வருகின்றது. அதனால் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வை வழங்கத் தயாரில்லாத நிலையைக் கடைப்பிடிக்கின்றது.**

**வெகுஜனன்**

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்




# தடுக்க முடியாத கொலைகளும் பலியாக்கப்படும் மக்களும்



கெபிதிகொல்லாவ படுகொலைகள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையைப் போராக வளர்த்து விட்டதன் மிக மோசமான விளைவுகளில் ஒன்று. அரசியல் அடிப்படையிலோ போர்த் தந்திர அடிப்படையிலேயோ வேறெந்த விதத்திலோ





நியாயப்படுத்தக் கூடாததும் நியாயப்படுத்த இயலாததுமான பல கொடுமைகளில் அது ஒன்று. அதனாலேயே கட்சி, இயக்க வேறுபாடில்லாமலும் இன மத வேறுபாடில்லாமலும் எல்லாரும் அதைக் கண்டித்து ள்ளனர். எனினும் பழியை விடு தலை புலிகள் மீது சுமத்துவ தில் அரச தரப்பும் அரசாங்கச் சார்பான சக்திகள் மீது சுமத்து வதில் விடுதலைப் புலிகளும் தீவிரமாயிருந்தன. விடுதலைப் புலிகளைத் தடைசெய்த

மேலை நாடுகளில் அமெரிக்கா மட்டுமே தயங்காமல் விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டியுள்ளது. வேறு ஆயுதக்குழுக்கள் செய்திருக்கலாம் என்ற கருத்திற்கு உடன்பாடாக பி.பி.ஸி கருத்துத் தெரிவித்ததையொட்டி இலங்கை அரசாங்கத்தரப்புப் பேச்சாளர்கள் தமது எரிச்சலைத் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் கெபிதிகொல்லாவ படுகொலைகளைக் கார ணமாக்கி, வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளின் விமா னத்தளத்தின் ஓடுபாதை மீது வெற்றிகரமாகக் குண்டு வீசிய படங்களைத் தவிர்த்தால் குறிப்பிடத்தக்களவில் விடு தலைப்புலிகளின் போர் வலிமைக்கு எதுவித சேதமும் இல்லை என்றே தெரிகிறது. ஆனால் அகதி முகாங்கள் உட்பட்ட மக் கள் வாழுகிற பகுதிகள் பல பாதிக்கப்பட்டுள்ளன.

இதற்கு இரண்டு மாதங்கள் முன்பு ராணுவத் தளபதி சரத் பொன் சேகாவை இலக்கு வைத்து நடந்த தற்கொலைத் தாக்குதலை உடனடியாக அடுத்துத் திருகோணமலை

**~மோகன்~**

மாவட்டத்தில் சம்பூர் மீது குண்டு வீச்சு நடத்தப்பட்டது. அதில் இறந்தோர் சாதாரணமான மக்களேயாவர். பெருந் தொகை யான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இம் முறை விமானத் தாக்குதல்கள் இரண்டு நாட்களாகத் தொடர்ந்தன. அதுவும் போதாமல் மன்னார்க் கடற் சம ரொன்றும் அதிற் பதினொரு படையினரது சாவும் நிகழ்ந் ததையடுத்து வங்காலையை ஒட்டிய மீன்பிடிக் கடற்கரை யோரத்தில் படகுகளும் வலைகளும் குடிசைகளும் உபகரண ங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இந்த அழிவு விடுதலைப் புலிகளுடனான மோதலின் போது ஏற்பட்ட தற்செயலான சேதம் என்ற விதமாக அரசாங்கத் தரப்பில் விளக்கமளிக் கப் பட்டுள்ளது. அது போக வெற்றி மாதா கத்தோலிக்கத் தேவால யத்தினுள் அரசபடையினரால் எறி குண்டு வீசப்பட்டது. ஆலய த்தினுள் தஞ்சம் புகுந்தவர்களிற் படுகாயமடைந்தோர் உட்பட்ட



அனைவருமே கொல்லப்ப ட்டோர் நடுவிலும் சிந்திச் சிதறிய இரத்தத்திற்கும் சதைக்கும் நடுவிலும் பல மணி நேரம் இருக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். இன்னொரு புறம் கடலுக் கும் போன மீனவர்கள் சிலர் மீளவில்லை. இவை யெல்லாம் விடுதலைப் புலி கள் மீது கவனமாக இல க்கு வைக்கப்பட்ட தாக்கு தல்களா?

கெபித்கொல்லாவ பயங்கரத்திற்குப் பின்பு நடந்தவை யாவும் அதற்கு முன்பு நடந்தவற்றினின்று அடிப்படையில் வேறுபட்ட வையல்ல. ஆயுதப்படைகள் மீதான ஒவ்வொரு தாக்குதலின் பின்பும் பொது மக்கள் தாக்கப்படுவதும் தேடுதல் என்ற பேரில் அல்லற்படுத்தப்படுவதும் ஏதாவது சாட்டுச் சொல்லத் தமிழ் மக்கள் கொல்லப்படுவதும் சில மாதங்களாகவே நடந்து வரு கின்றவைதாம். ஒரு விதமான நிர்ப்பந்தமுமில்லாமல் சாதார ணமக்கள் அவர்களது வீடுகளிலும் பொது இடங்களிலும் கொல்லப்படுவதும் மக்கள் சார்பாகப் பேசக் கூடியவர்கள் இலக்கு வைக்கப்படுவதும் சனாதிபதி ராஜபக்ஷ பதவிக்கு

தொடர்ச்சி 9ம் பக்கம்

# தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கலா? பங்கீடா

ஐக்கிய இலங்கைக்குள் பிளவுபடாத இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது எப்படி என்பது பற்றி பல நிலைகளிலும் புத்திஜீவிகள் சிலர் இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒற்றையாட்சி (Unitary) சமஷ்டி (Federal) அதிகாரப்பரவலாக்கல் (decentralization) அதிகாரங்களை பாரப்படுத்தல் (devolution) அதிகாரப்பங்கீடு (Sharing Of Power) போன்ற சொற்றொடர்களை வைத்துக் கொண்டு பிய்த்துப் பிடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் மேற்கூறியவை பற்றி நமது கண்ணோட்டத்தை செலுத்துவது தேவையாகின்றது.

ஒற்றையாட்சி என்பது அதிகாரங்கள் யாவும் ஓரிடத்தில் அல் லது மத்தியில் குவிக்கப்பட்டிருப்பதாகும். அதன் கீழ் நிர்வா கத்தை நடத்துவதற்காக உள்ளூராட்சி சபைகளை ஏற்படுத்தி அதனூடாக அரசாங்கத் திட்டங்களை நடைமுறைப்படுத்து வதாகும். இதில் கொள்கை நடைமுறைகள் அபிவிருத்தித் திட்டங்கள் போன்றன பற்றி தீர்மானம் எடுக்கும் உரிமை உள்ளூராட்சி சபைகளுக்கு கிடையாது. அரசாங்கத்தின் கொள் கைகளை திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரசாங்கப் பிரதிநிதிகள் சபை போன்று அல்லது அரசாங்கத்தின் அங்கமா கவே உள்ளூராட்சி அமைப்புகள் இயங்குகின்றன. இது அரச பரிபாலனைத்தை இலகுபடுத்தும் முறை ஆகும்.

ஒற்றையாட்சியின் கீழ் இனங்கள் சமூகங்கள் வாழுகின்ற ஒரு நாட்டில் அதிலும் குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழுகின்ற வித்தியாசமான இனங்களுக்கிடையே இன சமத்துவம் என்பது நடைமுறையில் சாத்தியமற்றதாக்கப்பட்டுள்ளது. நிலப்பிரபுத் துவம், முதலாளித்துவம் என்பவற்றின் இயலாமையால் அதிகார த்துவத்தை அல்லது ஆதிக்கத்தை நிலைநாட்டவும் தக்கவைத் துக் கொள்ளவும் இன, மத, சாதி, பால், பிரதேச வேறுபாடு களை முரண்பாடுகளாக கூர்மைப்படுத்துவது ஆளும் வர்க்க ங்களின் தந்திரோபாயமாக வளர்ச்சியடைந்துள்ளது.

சில தேசிய அரசுகளின் உருவாக்கத்தின் போது பல ஆட்சி களின் கூட்டாக கூட்டாட்சிமுறை அறிமுகம் செய்யப்பட்டன. சில அரசுகள் ஒற்றை ஆட்சிமுறையை மாற்றி கூட்டாட்சி முறையை ஏற்றுக் கொண்டன. உதாரணமாக சோவியத் யூனியன், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளை குறிப்பிட லாம். இங்கு அதிகாரங்கள் மத்தியில் குவிந்து இருக்காமல் பிராந்தியங்களும் அரசியல் அதிகாரங்களை கொண்டனவாக இருக்கும். அல்லது அரசியல் அதிகாரங்களை கொண்ட பல தேசியங்களின் அதிகாரங்களைக் கொண்டு கூட்டாக செயற்படும். இங்கு வெவ்வேறு அளவுகளில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ள முடியும்.

இந்த அதிகாரங்கள் அதிகபட்சமாக பகிர்ந்தளிக்கப்பட்டு இணைக்கூட்டாட்சியாக (Confederation) செயற்படவும் முடி யும். சோவியத்யூனியன் சிதைவடைவதற்கு முன்பு அவ்வாறே இயங்கின.

சீனா ஹொங்கொங் மற்றொரு உதாரணம்

இதை விட அதிகாரங்களை பாரப்படுத்தும் முறை (Devolution) யும் நடைமுறையில் இருக்கிறது. இதற்கு உதாரணமாக இந்தியா, பெல்ஜியம், சுவிற்சலாந்து, சீனா, நிக்கிரகுவா போன்ற நாடுகளைக் கொள்ள முடியும். இதில் மத்தியின் பல அதிகார ங்கள் பிராந்தியங்களுக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கும். இங்கு பூரண கூட்டாட்சி இருப்பதில்லை.

அதிகாரப் பங்கீடு
Shareing of Power

இணைக்கூட்டாட்சி
Confederation
கூட்டாட்சி
Federal System

அதிகாரப் பாரப்படுத்தல்
Devolution

அதிகாரப் பரவலாக்கல்
Decntralization of Power

அரசின் ஒற்றையாட்சி முறைக்குள் அதிகாரங்களைப் பங்கீடு செய்ய முடியாது. அங்கு அதிகாரங்களை பரவலாக்க முடியும். அவ்வாறெனில் சீனாவிலும் நிக்கரகுவாவிலும் ஒற்றையாட்சி முறையின் கீழ் எவ்வாறு தேசிய இனங்களின் சுயாட்சி உறுதி செய்யப்படுகிறது என்ற கேள்வி எழலாம். அங்கு சோஷலிசக் கட்டமைப்புகள் இருந்துள்ளமை கவனத்திற்குரியதாகும்.

**இ. தம்பையா**
தேசிய அமைப்பாளர் புதிய- ஜனநாயக கட்சி

அதிகாரப் பாரப்படுத்தலின் மூலம் ஒற்றையாட்சியின் தன்மை மாற்றப்பட்டு பூரண கூட்டாட்சியாக இல்லாவிட்டாலும் கூட்டாட் சியின் சில அம்சங்கள் அல்லது பல அம்சங்களை ஏற்றுக் கொண்டு அரசு செயற்பட முடியும். சீனாவிலும் நிக்கரகு வேவாவிலும் தேசிய இனங்களிடையேயான சமத்துவம் ஒப்பீட்டு ரீதியில் அதிகாமாகவே உறுதி செய்யப்பட்டுள்ளது. அங்கு அதிகாரப் பாரப்படுத்தலை விட கூடுதலாக அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதே உண்மை. ஒரு தேசிய இனம் பிரிந்து சென்று தான் அதன் அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்பது அங்கில்லை. அங்கு சமஷ்டி ஆட்சிமுறை இல்லாவிட்டாலும் போதியளவுக்கு சுயாட்சிமுறை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சீனாவிலும் பின்பு நிக்கரகுவாவிலும் புவியியல் ரீதியான பிரதேச தொடர்ச்சியை கொண்டிராத தேசிய இனங்களின் சுயாட்சியும் கவனத்தில் கொள்ளப்பட்டன. ஒரு சுயாட்சி பிரதேசத்திலுள்ள சிறுபான்மையாக வாழும் ஏனைய தேசிய இனங்களின் சுயாட் சியை உறுதிசெய்ய சுயாட்சி உள்ளமைப்புகள் ஏற்படுத்தப்பட் டன. அவைபோன்ற ஏற்பாடுகள் பெல்ஜியம், சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளிலும் ஏற்படுத்தப்பட்டன. உலக நாடுகளில் சுயாட்சி, சமஷ்டி போன்றன அந்தந்த நாடுகளின் விஷேட தன்மைகளுக்கேற்பவே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரையில் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாத சூழலில் தமிழ்மக்களின் போராட்டம் வளர் ச்சியடைந்தது. அதனை ஒடுக்க அரசாங்கம் தமிழ்மக்கள் மீது யுத்தத்தை திணித்து 1983 ஆம் ஆண்டிற்குப் பிறகு இன ஒடுக்கல் யுத்தமே தொடர்கிறது. தமிழ்மக்கள் சார்பில் தனிநாடு என்பதே தீர்வாக முன்வைத்து ஆயுதப்போராட்ட ங்கள் முன்னெடுக்கப்பட்டன. அப்போராட்டங்களின் உச்சத்தில் 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒற்றை யாட்சியை அடிப்படையாகக் கொண்ட 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கு 13 வது திருத்தம் கொண்டு வரப்பட்டு மாகாணசபை முறை உள்வாங்கப்பட்டது. இதில் வடக்கு கிழ க்கு மாகாணங்களை தற்காலிகமாக இணைத்து வைத்திருக் கும் ஏற்பாடு செய்யப்பட்டது. மாகாணசபையைக் கலைக்கும்



அதிகாரம் 13வது திருத்தத்தில் இருக்கவில்லை. ஆனால் அவ்வாறு கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் திருத்தச்சட்டம் பின்பு திட்டமிட்டே நிறைவேற்றப்பட்டது. (இதற்கு வடக்கு கிழக்கிலிருந்து 1998ல் தெரிவு செய்யப்பட்ட 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்று ஆதரவாக வாக்களித்த னர் என்பது குறிப்பிடத்தக்கது). 13வது திருத்தச்சட்டம் அதிகாரப் பரவலாக்கலுக்கு அப்பால் சென்று அதிகாரப் பாரப் படுத்தலின் சில அடிப்படைகளைக் கொண்டிருந்ததால் அவ ற்றைப் பாராளுமன்றத்தினூடாக மத்திய அரசு மீளப்பெறு கின்ற ஏற்பாடுகளை கொண்டுள்ளது. அத்தோடு அதில் சட்டப்படி பாரப்படுத்தப்பட்ட அதிகாரங்களை நடைமுறையில் பாரப்படுத்துவதற்கு மத்திய அரசாங்கம் தயக்கம் காட்டி இழுத் தடித்து வந்தது. இதனால் வடக்கு கிழக்கில் மாகாணசபை செயலிழந்தது.

பின்னர் 1997 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்த யோசனைகள் அதிகாரப்பங்கீட்டின் சில அடிப்படைகளை கொண்ட அதிகாரப் பாரப்படுத்தல்களை உள்ளடக்கி இருந் தன. அதில் பல மாற்றங்கள் செய்யப்பட்டு அதாவது அதிகாரப் பங்கீட்டிற்குரிய அடிப்படைகள் நீக்கப்பட்டு வடக்கு கிழக்கு நான்காகப் பிரிக்கப்பட்ட நிலையில் அதிகாரப்பாரப்படுத்தல்களை

தொடர்ச்சி 9ம் பக்கம்

# சமூகமும் பண்பாடும் 2

பேராசிரியர் சி.சிவசேகரம்

பண்பாட்டு மீட்சி என்றும் கிராமங்களின் கூத்து இசை வடிவங்களையெல்லாம் காப்பற்றுகின்றோம் என்றும் கிராமத்து களத்து மேட்டிலும் கோவில் வளவிலும் கொட்டில்களிலும் பலவேறு சூழ்நிலைகளில் ஆடப்பட்டும் பாடப்பட்டும் வந்த கலை வடிவங்களையெல்லாம் கொண்டுவந்து நகரத்தின் வசதிபடைத்தவர்கள் ரசிப்பதற்காகக் குளிரூட்டப்பட்ட சொகுசான அரங்குகளில் காண்பிப்பது கொஞ்சக் காலமாகவே நடைமுறையில் உள்ளது. சில சமயங்களில், கிராமிய கலைஞர்களை அல்லது கிராமியக் கலை வடிவங்களை நிகழ்த்திக் காட்டுகிற கலைக் குழுக்களை மேலை நாடுகட்குக் கொண்டு போய் நிகழ்ச்சிகளை நடாத்தி நமது பண்பாட்டை உலகறியச் செய்வதாகச் சொல்லப்படுகிறது. இது இரண்டு விதமாக நடக்கிறது. ஒன்று அரசாங்கம் அல்லது ஒரு பண்பாட்டு நிறுவனம் பண்பாட்டுப் பரிமாறல் என்ற பேரில் நாட்டின் கலைவடிவங்களிற் சிலவற்றை அயல்நாடுகட்குக் கொண்டுபோய் நடத்துவதும்

## மரபின் கலைகளும் களைகளும்

அயல்நாடுகளிலிருந்து கலைஞர்கள் இங்கு வந்து நிகழ்ச்சிளை நடத்துவதும் ஒருவகை. இது நாடுகளிடையிலான நல்லுறவை மேம்படுத்துகிற நோக்கில் மேற்கொள்ளப்படுகிற முயற்சி. மற்றது என்.ஜி.ஓக்கள் நமது கிராமியப் பண்பாட்டைக் காப்பாற்றுகிற பேரில் நடத்துகிற நிகழ்ச்சிகள் போன்றவை.

உண்மையான மக்கள் அதிகாரம் இல்லாத சூழ்நிலையில், உள்ளூர்ப் பாரம்பரியக் கலை வடிவங்களைப் பேணுவது என்பது பசப்பானது. அதை விடப் பாரம்பரியக் கலைவடிவங்கள் என்பன எல்லாவகைகளிலும் நல்லவை என்றவாறான எண்ணமும் வேண்டுமென்றே ஊக்குவிக்கப்படுகிறது. ஒரு சமுதாயத்தில் உள்ள கலைவடிவங்கள் அந்தச் சமுதாயத்தின் பலவேறு அடையாளங்களை வெளிப்படுத்துகின்றன. ஒடுக்குமுறைச் சமுதாயக் கலை வடிவங்கள் ஒடுக்குமுறைச் சிந்தனைகளை ஏதோ வகையில் வெளிப்படுத்துகின்றன. ஆணாதிக்கம், சாதியம், வர்க்க ஆதிக்கம், இனத்து வேஷம், மதத் துவேஷம் போன்றவை நமது மரபு சார்ந்த கலை வடிவங்களில் இல்லை என்று நம்மாற் சொல்ல இயலுமா? நிச்சயமாக இயலாது என்றே நினைக்கிறேன்.

ஒரு கலை வடிவத்தைப் பேணும் போது அதனோடு ஒட்டியுள்ள சமூகக் கேடான, பிற்போக்கான, மூடநம்பிக்கை சார்ந்த சிந்தனைகளையும் நாம் பேண வேண்டுமா? வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மரபு சார்ந்த ஒரு விடயத்தை ஆவணப்படுத்துவது ஒரு விடயம். அதை மரபின் பேரால் தொடர்ந்தும் பேணுவது இன்னொரு விடயம்.

உதாரணமாக இசைக்கருவிகளில் பறை, உடுக்கை போன்றவை மட்டுமன்றித் தவில், நாதசுவரம் போன்றவையும் இன்னமும் சாதி அடையாளங்களையும் சில சமூக நிகழ்வுகளுடனான உறவையும் ஒன்று சேர்த்தே பேணுகின்றன. மேற்குறிப்பிட்ட இசைக் கருவிகளைத் தமிழரது பண்பாட்டின் அடையாளங்கள் என்றும் அவற்றைத் தொடர்ந்தும் சடங்கு வைபவங்களில் பயன்படுத்த வேண்டும் என்றும் வற்புறுத்துகிறவர்கள் உள்ளனர். அவை தமிழரது பண்பாட்டு அடையாளங்கள் என்றால் ஏன் குறிப்பிட்ட சாதியினர் மட்டும் அவற்றை இசைக்குமாறு எதிர்பார்க்கப்படவேண்டும்? வேண்டுமானால் மேடைகளில் மட்டும் ஒப்புக்கு யாரும் சாதி வேறுபாடின்றி அவற்றை ஒரு வேளை இசைக்கலாமே தவிர சமுதாய வழக்கில், ஒரு உயர் சாதியினர் எனக் கூறப்படும் குடும்பத்தவர் வீட்டுச் சாவுச் சடங்கில் அச்சாதியைச் சேர்ந்த யாரும் பறையையும் சங்கையும் ஒலிப்பார்களா? கோவில்களிலும் திருமணவீடுகளிலும் குறிப்பிட்ட சமூகத்தவரை விட வேறு யாராவது மங்களவாத்தியம் இசைப்பார்களா? இதில் வருந்தத்தக்கது என்னவெனில், சிறிது சமூக மேல் நிலையாக்கம் பெறுகிற தாழ்த்தப்பட்ட சாதியினர் என்போர் கூட உயர்சாதியினர் எனப்படுவோர் போலவே பண்பாட்டின் பேரால் சாதிய மரபுகளைத் தங்களுக்குக் கீழ்ப்பட்ட நிலையில் உள்ளவர்களைக் கொண்டு பேணப் பார்ப்பதாகும்.

பிற்படுத்தப்பட்டோராகவும் மிகவும் கேவலமாகச் சுரண்டப்பட்டோராகவும் இருந்து வந்த ஒரு சமூகத்தினரது இசைக்கருவிகளான வீணையும் மிருதங்கமும் கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் சாதி மேல் நிலையாக்கம் பெற்றுவிட்டன. சதிர், பரதநாட்டியமாக மேல் நிலையாக்கம் பெற்றுவிட்டது. இவை தமிழகத்தில் ஏற்பட்ட சில சமூக பொருளாதார மாற்றங்களுடன் தொடர்புடைய மாற்றங்கள். தவிலும் நாதசுவரமும் இன்னமும் அவ்வாறான மேல் நிலையாக்கம் பெறவில்லை. சில கூத்து வடிவங்கள் இன்னமும் மேல் நிலையாக்கம் பெறவில்லை. மேல்நிலையாக்கம் பெற்ற சில வடிவங்கள் எல்லாருக்கும் பொதுவானவையாகத் தமிழர் பண்பாடு என்று போற்றப்படுகின்றன. பிற விளிம்பு நிலையில் வைக்கப்படுகின்றன. அல்லது சமூக மாற்றத்தையொட்டி மெல்ல மெல்ல வழக் கொழிந்து போகின்றன. அல்லது வெறும் காட்சிப் பொருட்களாகப் பேணப்படுகின்றன.

> ஒரு பண்பாட்டைக் காலம் என்கின்ற பரிமாணத்திற்கு வெளியே வைத்து மதிப்பிடும் போது ஏற்படுகிற சிக்கல்கள் கலை இலக்கியம் தொடர்பாகவும் வெளிப்படுகின்றன

ஒரு பண்பாட்டைக் காலம் என்கின்ற பரிமாணத்திற்கு வெளியே வைத்து மதிப்பிடும் போது ஏற்படுகிற சிக்கல்கள் கலை இலக்கியங்கள் தொடர்பாகவும் வெளிப்படுகின்றன. இதனாலேயே சில கலைவடிவங்கள் வழக்கொழிந்து போவது பற்றி மிகையான புலம்பல்கள் கேட்கின்றன. எந்தக் கலை வடி வத்தினதும் பெறுமதியை அதன் சம காலப் பெறுமதியாகவும் வேறுபடுத்தி நோக்க வேண்டியுள்ளது. முன்னது, மரபுவழிக் கலைகளின் நல்ல பயனுள்ள பண்புகளை அடையாளங் கண்டு அவற்றைச் சமகாலச் தேவைகட்கேற்பப் பயன்படுத்துவது பற்றியது. பின்னய கலை வடிவங்களை வரலாற்று நோக்கில் அடையாங்கண்டு ஆவணப்படுத்திப் பாது காப்பது பற்றியது.

நமது சூழலில் மேல்குறிப்பிட்ட இரண்டையும் ஒன்றாக்கிக் குழப்புகிற ஒரு தன்மையைக் காணலாம். ஈழத் தமிழருக்கான ஒரு கூத்து அல்லது நாடக வடிவத்தை வரையறுக்கிற நோக்கம் சிலரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கே உள்ள பல முரண்பாடுகள் அடிப்படையான சில தவறுகளினின்று எழுகின்றன. எந்த ஒரு தேசிய இனத்திற்கும் பொதுவான பல பண்பாட்டு அடையாளங்கள் தேசியவாதத்தின் எழுச்சியையொட்டி வடிவமைக்கப்பட்டுள்ளன. எனினும் அவை நிலையாகவும் நிரந்தரமாகவும் இருந்ததில்லை. கலை வடிவங்களைப் பொறுத்தவரையிலும் இன்னென்ன கலைவடிவங்களே ஈழத் தமிழருக்குரியன என்று வற்புறுத்துகிற போது வரலாற்றுப் பார்வையும் சமகால யதார்த்த நோக்கும் குழம்பிப்போகின்றன.

நாட்டின் கூத்து வடிவங்கள் வெளியிலிருந்து பலவேறு விடயங்களை எப்போதுமே உள்வாங்கி வந்துள்ளன. அவை செவ்வியற் கலை வடிவங்களின் அளவுக்கு விறைப்பானவையல்ல. எனவே அவற்றுக்கு ஒரு நிரந்தரமான அடையாளம் வழங்கி அந்த அடையாளத்தை முழுச் சமுதாயத்திற்கும் உரியதாக்க இயலாது. அதே வேளை கூத்து வடிவங்களில் உள்ள அழகியற் கூறுகள் மட்டுமன்றி அவற்றுட் பொதிந்துள்ள சமூகப் பயனுள்ள சிந்தனைகளும் பலவேறு வகைகளில் சமகால நாடக மேடைகட்குப் பொருத்தப்படலாம்.

மரபு சார்ந்த கலை வடிவங்களுக்குப் புதிய அங்கீகாரம் பெற்றுக்கொடுப்பதுடன் சிலரது பங்களிப்பு நின்று விடுகிறது. அதற்கப்பாற் கலை இலக்கியங்களை நகர்த்துகிற ஆற்றலோ அக்கறையோ அவர்களிடமில்லை. சிங்களத்தில் சரத்சந்திரவின் நாடக முயற்சிகளான 'மனமே' 'சிங்ஹபாகு' ஆகியன மரபுக் கதைகளை வைத்து அமைக்கப்பட்டாலும், பலவேறு அந்நிய மரபுகளிலிருந்தும் கூறுகளை உள்வாங்கி நவீன மேடை உத்திகளுடனும் இணைத்தன என்பது முக்கியமானது. தமிழில் வித்தியானத்தனின் ராவணேசனில் கூத்துப் பிரதி புதியது எனினும் நாடக மேடையை வளப்படுத்துகிற விதமான கலைத்துவமான பங்களிப்புகள் மனமேயுடனோ சிங் ஹபாகுவுடனோ ஒப்பிடின் குறைவானவையே.

சரத்சந்திரவின் நாடகங்களின் வரவு சிங்கள நாடகமேடைக்குப் புத்துயிரூட்டியது. சரத்சந்திராவிடமிருந்து கற்றவற்றை அவரைப் பிரதி செய்கிற விதமாக அல்லாமல் அவற்றின் ஊக்கு விப்புடன் புதிய உத்திகளையும் பயன் படுத்தியதாலேயே 1970கள் வரை பல நல்ல நாடகங்கள் உருவாயின. தமிழில் ராவணேசன் அத்தகைய பாதிப்பை ஏற்படுத்தவில்லை. மரபை உள்வாங்கி நாட்டுக் கூத்தின் அடிப்படையில் ஒரு நவீன அரங்க முயற்சியாக வந்த கந்தன் கருணை, சங்காரம், கடூழியம் போன்றவை காத் த!ரமான சமூகப்பார்வை காரணமாக ஏற்படுத்திய தாக்கம் முக்கியமானது. அதன் பின்னர் வந்த நாடகமுயற்சிகள் பல மரபிலிருந்து ஊட்டம் பெற்றன. எனினும் மரபின் அடிப்படையில் ஒரு இனத்தை அடையாளப்படுத்துகிற ஒரு கூத்து வடிவம் இயலுமாகவில்லை என்றால் அப்படிப்பட்ட முயற்சிகள் மரபு என்பதை மிகவும் தவறாக விளங்கிக் கொண்ட தன் விளைவானவை என்றே தோன்றுகிறது. 1980களில் தமிழில் மட்டு மில்லாமல் சிங்களத்திலும் நாடக முயற்சிகள் நலிவடைந்தது ஏன் என நாம் ஆராய வேண்டும். சமூகச் சூழல்களில் ஏற்படும் மாற்றங்கள் மரபு பற்றிய பார்வையைப் பாதிக்கின்றன. எந்த ஒரு கலை வடிவமும் ஒரு சமூகத்தின் நிரந்தர அடையாளமாக இருப்பது அரிது.

சில கலைவடிவங்கட்கு நீண்டகால வரலாறு இருப்பதால் அவை சடங்கு முறையிலேனும் பேணப்படுகின்றன. எனினும் சமூக மாற்றங்கள் அவற்றைச் சமூகத்தின் வாழும் பண்பாட்டின் மையத்தில் இல்லாமல் விளிம்பிலேயே வைத்தும் பேணுகின்றன. சில சமயங்களில் அரசியற் காரணங்கட்காகச் சில இசை, நாட்டிய, நாடக மரபுகள் விழா வைபவங்களின் ஒரு பகுதியாக்கப்படுகின்றன. உதாரணமாக கண்டிய நடனமும் மங்கள வாழ்த்துப் பாடலும் இன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பாடசாலைக்கு வருகை தருகிற போது வரவேற்புக்களாக் நடக்கின்றன. இவற்றின் மூலம் நிலவுடைமைச் சமூகப் பிரபுத்துவ வர்க்கக் கண்ணோட்டமே வலியுறுத்தப்படுகிறது. இது ஏகாதிபத்திய உலகமயமாதற் சூழ்நிலையில் எவ்வாறு வலுப்பெற்றுள்ளது என்பதும் சிந்தனைக்குரியது.

ஒரு சமுதாயம் மனித சமத்துவத்தை நோக்கி நகரும் போதும் அவ்வாறான நகர்விற்கான சமூக இயக்கங்களின் போதும் மரபின் நல்ல அம்சங்களை உள்வாங்கியனவும் புதிய சமூகத்தை அடையாளப்படுத்தக் கூடியனவுமான மேடைக்குரிய கலைவடிவங்கள் உருவாகலாம். மற்றப்படி இறுக்கமான முறையில் மரபைப் பேண முயலுவது சமூகத்திற்கு அந்நியமான சமூகக் கேடான சிந்தனைகள் தொடர்ந்தும் நிலைப்பதற்கே உதவும். மாறாக மக்களது பங்குபற்றலுடன் கூட்டு முயற்சிகளாக முன்னெடுக்கப்படுவன உயிரோட்டமான முறையில் மரபின் வலுவான கூறுகளை வாழும்கலைகளுடன் இணைக்க உதவும்.

## மாக்சிச லெனினிச இயக்கத்தின் மூத்த தோழர் நாகேந்திரன் மறைவுக்கு புரட்சிகர அஞ்சலி

வடபுலத்தின் வடமராட்சி நெல்லியடியின் முன்னோடி மாக்சிச லெனினிசவாதியான தோழர் சுப்பிரமணியம் நாகேந்திரன் கடந்த 17-06-2006 அன்று இயற்கை எய்தினார். அறுபத்தியெட்டு வயதான நாகேந்திரன் தனது பதினெட்டாவது வயதில் மாக்ஸிசத்தை அறிவு பூர்வமாகவும் நடைமுறை வழிகளிலும் ஏற்று கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைந்து கொண்டவர். தனது ஆற்றல் ஆளுமை என்பனவற்றைக் கொண்டு நெல்லியடிப் பிரதேசத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் கட்டியெழுப்புவதில் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக நின்று செயல்பட்டார். மாக்ஸிசம் லெனினிசத்தின் மீதான ஆழமான பற்றுதலும் அறிவு பூர்வமான தெளிவும் மட்டுமன்றி அதனை நடைமுறைப்படுத்து வதில் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தை கட்டியெழுப்புவதிலும் தனது முன்னணிப் பங்களிப்பை வழங்கிவந்தார்.

அறுபதுகளின் நடுக் கூறிலே கம்யூனிட் இயக்கத்தில் பாராளுமன்றப் பாதையா? புரட்சிகரப் பாதையா?என்னும் விவாதத்திலும் பிளவிலும் தோழர் நாகேந்திரன் புரட்சிகரப் பாதையைத் தேர்ந்தெடுத்து மாக்சிச லெனினிசக் கட்சியின் அணிகளைப் பலப்படுத்தி முன்னெடுப்பதில் ஏனைய தோழர்களோடு நின்று ஆற்றிய பணி என்றும் நினைவு கூரத்தக்கதாகும். அக்கால கட்டத்தில் தமிழர் சமூகத்தில் மிக இறுக்கமாக நிலவி வந்த சாதிய தீண்டாமை அமைப்பையும் அதன் கொடுமைகளையும் எதிர்த்த புரட்சிகரப் போராட்டங்களும் ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டுக்களையும் பரிசோதனைக்குள்ளாக்கியது. உயர்சாதியினர் என அழைக்கப்பட்டு வந்தவர்கள் மத்தியில் மாக்சிஸ்டுக்களாகவும் கம்யூனிஸ்டுகளாகவும் இருந்து வந்தவர்களில் சிலர் இக்கால கட்டத்தில் அப்புரட்சிகரப் போராட்டங்களுக்கு முகம் கொடுப்பதில் தடுமாறினர். சிலர் பாராளுமன்றக் கண்ணோட்டத்தில் நின்று தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் முன்னெடுத்த நடைமுறைப் போராட்டங்களை "பலாத்காரப் போராட்டம்" "துப்பாக்கி ஏந்திய போராட்டம்" "இரத்தம் சிந்தும் போராட்டம்" எனக் கூறி எதிர்ப்புரட்சிகர நிலைப்பாட்டை எடுத்து வெகுஜனப் போராட்டங்களை நிராகரித்தும் சிலவேளைகளில் எதிர்த்தும் நின்றனர். ஆனால் நெல்லியடியில் மாக்ஸிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சியில் அணிதிரண்ட இளைஞர்களுக்கு வழிகாட்டியவர்களும் தமது "உயர்சாதியச்" சூழலையும் மீறி சமத்துவத்துவ ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடிய தாழ்த்தப்பட்ட மக்களோடு இணந்து நின்று போராடியமை அக்காலத்தில் குறிப்பிடக் கூடிய அம்சமாகும். நெல்லியடியில் மட்டுமன்றி வடபுலத்தின் பல்வேறு பகுதிகளிலும் வர்க்க அடிப்படையிலான மாக்சிச லெனினிச நிலைப்பாட்டுடன் சாதிய- தீண்டாமை எதிர்ப்பு போராட்டங்களில் மக்கள் கலந்து கொண்டனர். அதனாலேயே அன்றைய போராட்டங்கள் மிகவும் நிதானமானதாகவும் உறுதியானதாகவும் உரிமைகளை வென்றெடுத்த போராட்டங்களாகவும் அமைந்து கொண்டன. அத்தகைய சூழலில் தோழர் நாகேந்திரன் நெல்லியடியில் மூத்த தோழர்களில் ஒருவராக நின்று வழிகாட்டும் நிலையில் இருந்தார் என்பது இவ்வேளை



நினைவு கூரவேண்டியதாகும். தனது அரசாங்க ஊழியர் என்ற நிலைக்கூடாகவும் குடும்பஸ்தர் ஆகவும் வாழ்ந்ததில் மாக்சிச லெனினிச நிலைப்பாடு, சுயகட்டுப்பாடு, குடும்பத்தினரை நேசித்தல் போன்றவற்றால் ஒரு முன்னுதாரணமான வாழ்வை வாழ்ந்து வந்தார். அமைதியாக ஆனால் உறுதியான கொள்கையை அறிவுபூர்வமாகவும் நடை முறைவழிகளிலும் பின் பற்றி வந்தவர் தோழர் நாகேந்திரன். உடல் நிலை நோய் காரணமாக தளர்வடைந்து

தொடர்ச்சி 9 பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# எரிபொருள் வர்த்தகம் ஊடாக இலங்கையை மிரட்டும் இந்தியா

## தடியைக் கொடுத்து அடியை வாங்குவதா?

இந்தியா எரிபொருள் மூலம் மிரட்டுவதாக 2004ம் ஆண்டு செப்டம்பர் மாத புதிய பூமியில் குறிப்பிட்டிருந்தேன். இந்தத் தடவை அந்த மிரட்டலை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் நாடகம் அரங்கேறியுள்ளது. ஐ.ஓ.சி எனப்படும் இந்திய எண்ணெய்க் கம்பனி இந்திய அரசாங்கத்திற்கு சொந்தமானது. அதனடிப்படையிலேயே இலங்கையில் இயங்கும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனியின் நிர்வாக இயக்குனர் இலங்கையில் இருக்கும் இந்திய வைஸ்ராய் அம்மையார் நிருபமாராவ் அவர்களுக்கு அவ்வப்போது விபரம் கொடுத்து வந்தார். இந்த மானிய விவகாரத்தில் இந்தியத் தூதரகம் மானியம் தொடர்பான சர்ச்சையை அமைதியாக ஆரவாரம் எதுவும் இன்றி செயற்பட்டு தன் கைவண்ணத்தைக் காட்டியது. யூலை மாதம் தொடக்கம் இந்திய எண்ணெய்க் கம்பனி தனது கட்டுப்பாட்டில் தற்போது இயங்கும் 170 நிரப்பு நிலையங்களில் விற்கும் பெற்றோலிய பொருள்களின் விலை யை நிர்ணயிக்கும் உரிமையைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை மறுசீரமைப்பதாகக் கூறி 13-11-2002 லும் பின்பு 3-07-2003லும் முன்னைய எரிசக்தி அமைச்சர் அமைச்சரவைக்கும் சமர்ப்பித்த பிரேரணையை அமைச்சரவை முறையே 2-1-2003 லும் 29-07-2003லும் ஏற்றுக் கொண்டது.

இந்த சீரமைப்பின் காரணமாக பொது வசதிகளைப் பயன்படுத்தும் கம்பனி உருவாக்கப்பட்டது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான குழாய் உட்கட்டமைப்பு குதப்படுத்தல் என்பவற்றை இந்தக் கம்பனி பொறுப்பேற்றது. சில்லறை வியாபாரத்திற்கென மூன்று கம்பனிகள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொன்றும் தலா நூறு நிரப்பு நிலையங்களைப் பொறுப்பேற்றன. ஏற்கனவே சுமார் 350 நிரப்பு நிலையங்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடாத்தி வந்தது. சுமார் 650 நிரப்பு நிலையங்களை முகவர்கள் நடாத்தி வந்தனர். சில்லறை வியாபாரத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இயங்கும் நிறுவனம் 'சீபெற்கோ' என்றழைக்கப்படுகிறது. ஏனைய இரண்டு சில்லறை வியாபாரத்தில் ஈடுபட 100% அன்னிய பங்களிப்பு கோரப்பட்டது. முன்பு குறிப்பிட்ட பொது வசதிக் கம்பனியின் வளங்களை இந்த மூன்று சில்லறை வியாபாரக் கம்பனிகளும் 33 1/3% அடிப்படையில் பயன்படுத்த இணங்கப்பட்டது. இந்த ஐ.ஓ.சியை இரண்டாவது சில்லறை வியாபாரத்திற்காக ஒப்படைக்கப்பட்டபோது கேள்விப்பத்திரம் கோரப்படவில்லை. இந்திய மிரட்டலுக்குப் பணிந்து அந்தச் சமயம் இரண்டாவது சில்லறை வியாபாரத்திற்காக முக்கிய இடங்களில் அமைந்துள்ள நூறு நிரப்பு நிலையங்கள் வழங்கப்பட்டன. தற்போது எண்ணெய் ஆய்வுக்காக ஒரு குறிப்பிட்ட பகுதியை இந்தியாவுக்கு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளமையும் இங்கு கவனிக்கப்படல் வேண்டும்.

இந்தத் தடவையும் கேள்விப்பத்திரம் இன்றி இந்தியாவிடம் அந்தவேலையும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு என்ன வகையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் என்பதையும் இந்தியாவே தீர்மானிக்கும். இந்தியாவுக்கு எண்ணெய் அகழ்வுக்கு இடம் ஒதுக்குகின்றபடியால் முகம் மறுக்க முடியாது பெயரளவில் சீனாவுக்கும் கேள்விப்பத்திரமின்றி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிக்கும் பகுதிக்கு ஒரு கருவி தேவைப்பட் டது. அதற்கு கேள்விப்பத்திரம் கோரி யது பெற்றோலியக் கூட்டுத்தாபனம். ஆனால் கேள்விப்பத்திரத்திற்கு வெளியே அந்தக் சுத்திகரிப்புக் கருவியை வழங்கும் பொறுப்பை இந்தியக் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தியாவின் பொருளாதார ஆதிக்கப்பிடி இலங்கை மீது இறுகிக் கொண்டு வருவதையே நாம் ஆரம்பத்திலிருந்து சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

அமைச்சரவையின் 8-10-2003 பத்திரத்தின் படி நூறு நிரப்பு நிலையங்களை இந்திய எண்ணெய்க் கம்பனிக்கு வழங்கும் போது இந்தியா ஏழரைக் கோடி (7 1/2) அமெரிக்க டொலர்களை வழங்கும். அத்துடன் நிரப்புநிலையங்களை அழகு படுத்துவதற்கு இருநூறிலிருந்து முன்னூறு கோடி ரூபாவை வரை செலவிடும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

குறிப்பிட்ட 7 1/2 கோடி அமெரிக்க டொலரில் நாலு கோடி டொலர்கள் முன்பு குறிப்பிட்ட பொது வசதிகள் கம்பனியின் 33 1/3 வீத வளங்களைப் பயன்படுத்துவதற்கும் மூன்று கோடி பத்து இலட்சம் டொலர்கள் நூறு நிரப்பு நிலையங்களுக்கும் என அறிவிக்கப்பட்டது. 8-10-2003 அமைச்சரவைப் பத்திரத்தின் படி அரசாங்கமே சில்லறை விலைகளைத் தீர்மானிக்கும்.10-10- 2003 அமைச்சரவை பத்திரத்தின்படி அப்போதைய மின்சக்தி எரிபொருள் அமைச்சர் கொள்வனவு விலையானது வெளிநாட்டு நாணயத்திலேயே வழங்கப்பட வேண்டும். உள்ளூர் வங்கிகள் மூலமாகவல்ல என்று தெரிவிக்கப்பட்டது. 2004 ஜனவரியில் இந்திய எண்ணெய் கம்பனி செயற்பட ஆரம்பித்தது. 31-02-2006 வரையான இரண்டே கால் வருடங்களுக்கும் இந்திய எண்ணெய் கம்பனி மாதந்தோறும் மானியத்தை அரசாங்கத்திடமிருந்து கோரியது. ரூ 939 கோடி 48 இலட் சமளவில் மானியம் கேட்கப்பட்டது. அதில் அரசாங்கம் ரூ. 170 கோடி யை வழங்கியிருந்தது.

31- 3- 2006 இந்தியக் கம்பனிக்கு 769 கோடி 48 இலட்சமளவில் மிகுதி கொடுக்கப்பட வேண்டுமெனக் கணக்குக் காட்டப்பட்டது. ஏப்ரல் 2006ல் அரசாங்கம் 25 கோடி ரூபாவை வழங்கியது. ஏப்பிரல் 30ம் திகதிவரை அரசாங்கம் 962 கோடியளவில் தர வேண்டியிருப்பதாக இந்திய எண்ணெய் கம்பனி கூறியது.

இது இவ்வாறிருக்க 2005ல் புதிய அரசாங்கம் பாரத் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு மூன்றாவது சில்லறை வியாபாரத்திற்கு மூன்றாவது சில்லறை வியாபாரப்க் கம்பனியின் 49 வீத உரிமையை வழங்குவதென்றும் பொது வசதிகள் கம்பனியின் 33 1/2 வீத வளங்களை வழங்க அனுமதிப்பதென்றும் அதற்காக எட்டுக் கோடி 40 இலட்சம் டொலர்களைப் பெறுவதென்றும் 22-3-2005ல் அமைச்சரவைப் பத்திரத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பேச்சுவார்த்தையின் போது பாரத் கம்பனி இந்திய எண்ணெய்க் கம்பனியைப் போலவே விலை நிர்ணயத்திற்கு "மீள வரைவிலக்கணம்" கொடுக்கப்படவேண்டுமென்றது. மானியக் கோரிக்கை சமர்ப்பித்து மூன்று மாதத்திற்குள் அரசாங்கம் அதைச் செலுத்த வேண்டுமெனவும் கோரின. இவையாவும் இலங்கை மீது இந்தியாவின் பிடி படிப்படியாக இறுக்கிக் கொண்டுபோவதையே காட்டுகிறது.

இந்திய எண்ணெய்க் கம்பனி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் உடன்பட்டபடி நடக்கவில்லையென்பது இப்போது அம்பலமாகிறது.

1. இந்திய எண்ணெய் கம்பனி உடன் பட்டபடி ஏழரைக் கோடி டொலர்களைக் கொண்டுவர வில்லை.

2. இந்திய எண்ணெய்க் கம்பனியின் கணக்கு விபரத்தின்படி அக்கம்பனியின் பங்கு முதலீடு நாலு கோடி டொலர்கள் மட்டுமே. இணங்கியபடி 7/1/2 கோடி டொலர்கள் அல்ல.

3. 31-3-2004 ல். ரூபா 346 கோடி 97 இலட்சம் கடனாகக் காட்டப்பட்டது. அதே சமயம் பங்கு மூலதனம் ரூபா. 400 கோடி ரூபா என லங்கா ஐ.ஓ.சியின் கணக்கு தெரிவிக்கின்றது. ஐ.ஒ.சியிடமிருந்து. லங்கா ஐ.ஒ.சி பெற்ற கடன் 31- 3- 2005ல் செலுத்தப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது.

அப்படியானால் உள்ளுர் வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்கள் மூலம் இந்திய எண்ணெய் கம்பனியின் கடன் அடைக்கப்பட்டதா?

4. 2005 வருடாந்தக் கணக்கின்படி லங்கா ஐ.ஒ.சி 170 நிரப்பு நிலையங்களைக் கொண்டுள்ளது. மேலதிகமாக கைவசமான 70 நிரப்பு நிலையங்கள் மூலமாக வினியோகிக்கும் எரிபொருளுக்கும் மானியம் கோருவது எவ்வகையில் நியாயம்.

5. முகவர்கள் நடாத்தும் நிரப்பு நிலையங்கள் அரசிடமிருந்து மானியம் கோர முடியாது.

6. லங்கா ஐ.ஒ.சி 31-12-2004 முடியவுள்ள மாதகாலத்திற்கான வருமானக் கணக்கிற்கும் 31-3-2005 முடியவுள்ள 12 மாதகால வருமானக் கணக்கிற்குமிடையே "விளக்கமளிக்கப்படாத" வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இந்தச் சூழலில் லங்கா ஐ. ஓ. சிக்கு அது விற்கும் பெற்றோலியப் பொருள்களுக்கு விலை நிர்ணயிக்கும் உரிமை யூலை மாதத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டும் போது அந்தப்பணம் நாட்டிற்குள்ளேயே இருந்தது. லங்கா ஐ. ஒ. சிக்கு லாபம் என்றால் அந்தப் பணம் வெளியே செல்கிறது என்பது தான் இங்கே முக்கியமானதாகும்.

மறுசீரமைப்பு என்ற பெயரில் லாபத்தில் இயங்கி வந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒரு பகுதியை தனியார் மயப்படுத்தி இந்தியக் கம்பனியிடம் கையளித்ததன் விளைவே இன்றைய எரிபொருள் நெருக்கடியும் விலை நிர்ணய அச்சுறுத்தலுமாகும். தனியார்மயம் தாராளமயத்தை நாம் எதிர்த்து வந்தபோதும் இப்பெற்றோலிய கைமாற்று மோசடியை அம்பலப்படுத்தி எதிர்கால அபாயத்தைச் சுட்டிக்காட்டிய போதும் இந்திய விசுவாசிகளும் ஏகாதிபத்திய தாசர்களும் மௌனம் சாதித்து வந்தனர். இன்று என்ன நடைபெறுகிறது. நாளை இந்திய எண்ணெய்க் கம்பனிகளே எமது எரிபொருள் விலையைத் தீர்மானித்து பகற்கொள்ளையைக் கச்சிதமாக நடாத்தப்போகிறார்கள்.

இவ்வேளையில் அப்பட்டமான பெற்றோலியக் கொள்ளை பற்றி "நாடு" "மக்கள்" என வாய்கிழியக் கத்திவரும் ஜே.வி.பி யோ சிஹல உறுமயவோ வாய் திறக்கவில்லை. அல்லது மகிந்தவிற்கு சாமரை வீசும் பாராளுமன்ற இடதுசாரிகளோ எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஏன் தமிழர் தரப்பிலிருந்து கூட இது பற்றி கண்டனமோ எதிர்ப்போ இல்லை. அவர்கள் ஒரு போதும் சாதாரண மக்களது பிரச்சினைகள் பற்றி கண்டனமோ எதிர்ப்போ தெரிவிப்பது இல்லை. அவர்கள் ஒரு போதும் சாதாரண மக்களது பிரச்சினைகள் பற்றிப் பேசியதே கிடையாது.

இந்தியாவில் பெற்றோல் விலை ஏற்றத்தை எதிர்த்து மக்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்து வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். ஆனால் இங்கு இந்தியாவின் மிரட்டலுக்கு பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளும் தொழிற்சங்கங்களும் அடிபணிந்து சலாம் போடுகின்றன. ஆனால் பெற்றோலியம் பொருட்களின் விலை உயர்வால் நாட்டின் பொருளாதாரமும் மக்களின் வாழ்க்கைத்தரமும் கீழ்நேக்கிச் செல்வதையோநமக்கு எடுத்துக் காட்டுகிறது.

**-சிறீ-**

## அமெரிக்க மேலாதிக்கத் திமிரே உலகம் பிறந்தது உனக்காகவல்ல!

**-வாசகர் குமுறல்-**

அன்புள்ள ஆசிரியருக்கு.

தங்கள் புதிய பூமியின் வைகாசி 2006 இதழில் "பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல மனிதன்தான் பூமிக்குச் சொந்தம்" என்னும் தலைப்பில் 1851ல் அமெரிக்க செவ்விந்தியத் தலைவன் சியாட்டில் எழுதிய கடிதத்தைப் பிரசுரித்திருந்தீர்கள். மிகமிகப் பயனுள்ள கருத்துக்கள் கொண்டது அக்கடிதம். இற்றைக்கு 145 வருடங்களுக்கு முன்பு அமெரிக்க மண்ணின் ஆதிக்குடி மகன் எழுதிய அக்கடிதத்தின் ஒவ்வொரு வரிகளும் அற்புதமானவை. தமது மண்ணையும் மக்களையும் மலைகளையும் காடுகளையும் ஆறுகளையும் அருவிகளையும் புல்வெளிகளையும் பூச்சியினங்களையும் மிருகங்களையும் பெரு விருட்சங்களையும் எவ்வாறு தாங்கள் நேசித்து அவற்றோடு இணைந்து பாதுகாத்துப் பயன் பெற்று வாழ்ந்து வந்ததை வெறிகொண்டலைந்த குடியேறிகளான வெள்ளையர்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டியது அக்கடிதம்.

மீண்டும் மீண்டும் வாசித்துப்படிப்பதற்குத் தூண்டும் கருத்துக்களை தாங்கி நின்ற அக்கடிதத்தை அமெரிக்க மண்ணை அபகரித்த அந்த வெள்ளையின முதலாளிகள் அன்றும் புரிந்து கொள்ளவில்லை. இன்றும் புரிந்து கொள்வதாக இல்லை. முதலாளித்துவத்தின் கோரச் சுரண்டல்- லாபத்திற்காக இயற்கையின் சகல வளங்களையும் கண்மூடித்தனமாக அழித்தொழித்துக் கொள்வதே அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் கொடூரத்தனமாகும். தனது சொந்த நாட்டில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நாடுகளிலும் அமெரிக்கா அதனையே செய்து கொண்டு வருகின்றது.

அமெரிக்காவில் அண்மைய வருடங்களில் இடம் பெற்று வந்துள்ள பெரும் புயல், மழை வெள்ளம் கடல் கொந்தளிப்புகள், காட்டுத்தீ போன்றன தொடர்கின்றன. இவை வெறுமனே இயற்கையின் சீற்றம் இயற்கை அழிவு என யாரும் குறுக்கி கருத்துரைக்க முடியாது. இவ் அழிவுகளுக்கும் அன்று செவ்விந்திய தலைவன் சியாட்டில் எழுதிய கடிதத்தில் காணப்படும் கருத்துக்களுக்கும் இடையிலே உள்ள இயற்கை பற்றிய உறவையும் தூரநோக்குச் சிந்தனையையும் ஒப்பிட்டு நோக்குதல் வேண்டும்.

மேலும் அமெரிக்க கண்டத்தில் மட்டுமன்றி ஏனைய கண்ட நாடுகளிலும் பூமி வெப்பமாதல் வேகமடைந்து வருவதால் பல்வேறு இயற்கை அழிவுகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. முதலாளித்துவ ஏகாதிபத்தியப் பேராசைக்கு உலகின் மனித வாழ்வுக்குரிய அடிப்படை வளங்கள் இரையாக்கப்பட்டு வருகின்றன. இதன் எதிர்விளைவுகளே இயற்கை சீற்றங்களாக அழிவுகளாக இடம் பெறுகின்றன.

இந் நிலையினை மேற்படி "பூமி மனிதனுக்கு சொந்தமல்ல. மனிதன் தான் பூமிக்குச் சொந்தம்" என்ற தலைப்பிலான செவ்விந்திய தலைமைப் பெருமகன் சியாட்டில் எழுதிய கடிதம் எடுத்துக் காட்டுகின்றது. இயற்கையில் இருந்து தோற்றம் பெற்ற மனிதர்கள் அவ் இயற்கையோடு இணைந்தும் போராடியும் இயற்கையைக் கட்டுப்படுத்தியும் வாழ்ந்து வந்தமையே மனிதகுல வரலாறாகும். ஆனால் லாபத்திற்காகவும் தனிநபர் முன்னேற்றத்திற்காகவும் இயற்கையை காட்டு மிராண்டித்தனமாக அழிவுகளுக்கு உள்ளாக்கிய சூழலிலேயே இயற்கை அழிவுகளை எதிர்கொள்ளும் அபாய நிலை தோன்றியுள்ளது என்பதே உண்மை நிலையாகும். தமது லாபத்திற்காக மூலவளங்களைக் கொள்ளையிட்டு மனிதர்களையே நாளாந்தம் உலகம் பூராவும் கொன்று குவித்து வரும் முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளுக்கு இயற்கை வளங்களைப் பாதுகாத்து செயற்படுங்கள் என ஆலோசனை கூறுவது அர்த்தமற்றதாகும். ஒரேவழி மக்களுக்கு விளங்கச் செய்து அறிவூட்டி விழிப்புற வைத்து முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளை எதிர்த்துப் போராடுவதேயாகும்.உலகம் முழுவதையும் தனது காலடியில் வைத்திருக்கப் புறப்பட்டுள்ள அமெரிக்க ஆளும் வர்க்கத் திமிருக்கு எதிராக மக்கள் போராடவேண்டும்.

**சிவ சங்கரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மக்களைப் பிணங்களாக்குவது விடுதலைப் போராட்டமாகாது!

மனிதாபிமானம். மனித உரிமைகள், ஜனநாயகம் நேர்மை, உண்மை, இரக்கம், அனுதாபம், மனசாட்சி போன்றனவெ ல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களைக் கொண்டவை ஆகும். குறிப்பிட்ட சொற்களுக்கு வர்க்க அடிப்படையில் வித்தியாசமான அர்த்தங்கள் கொடுக்கப்படுவதுண்டு. அச்சொற்களுக்கு கொடுக்கப்படும் தொழிலாளி வர்க்க, அர்த்தங்களும் முதலாளி வர்க்க அர்த்தங்களும் வேறுபட்டவையாகும்.

அடக்கப்படுகின்ற தேசிய இனங்களின் அர்த்தங்களும் தேசிய இனங்களை அடக்குகின்ற சக்திகளின் அர்த்தங்களும் வித்தியாசமானவையாகவே இருக்கும். அவை விடுதலைப் படைகளுக்கும் அடக்குமுறைப் படைகளுக்கும் வெவ்வேறானவையாகவே இருக்கும்.

மனிதாபிமானம் என்பது ஆள்வோர் அல்லது அடக்குவோரை சீர்திருத்தலாம் என்ற எண்ணத்தில் வலியுறுத்தப்பட்டே வருகிறது. அதற்குமாறாக ஆளப்படுவோர் அல்லது அடக்கப்படுவோரை பரந்துபட்டரீதியில் ஐக்கியப்படுத்தி ஆள்வோருக்கும் அடக்குவோருக்கும் எதிராக செயற்பட மனிதாபிமானம் விரிந்த தளமாக இருக்கிறது. எதிரிகளாகக் கொள்ளப்படுவோருடன் மோதலில் ஈடுபடும்போது மனிதாபிமானம் அவசியப்படுவதில்லை. ஆனால் மோதலில் பங்கு பெறாத சாதாரண மக்கள் பற்றி கவனத்தில் கொள்வதற்கு இருக்கும் ஆகக்குறைந்த அடிப்படை மனிதாபிமானமாகும்.

இந்த மனிதாபிமானத்தை மக்களின் நலனில் அக்கறையுடையோர் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. மக்களுக்காகப் போராடுபவர்கள் எவராயினும் மக்களை கொல்வதை அரசியலாகக் கொள்ள முடியாது. போராட்டத்தில் மக்கள் யுத்தம் என்ற நிலையில் மக்கள் பங்களிப்பு செய்யாத போதும் எதிரிப்படைகள் அல்லது அடக்கு முறைப்படைகள் மக்களை அழித்தொழிப்பதை இலக்காக கொண்டு செயற்படுவதே வழமையானதாகும்.

போராட்டத்தை பலவீனப்படுத்தலாம் என்ற அடிப்படையில் மக்களை கொல்வது அடக்கு முறை இராணுவத்தின் அடிப்படை இராணுவத் தந்திரோபாயமாகும். ஆனால் விடுதலைப்படைக்கு மக்கள் எதிரிகளாக்கப்படக்கூடாது. எதிரியுடன் எதிரியாக ஒரு மக்கள் பிரிவினர் அடையாளம் காணப்பட்டாலும் அவர்கள் நேரடியாக மோதலில் பங்கெடுக்காத போது அவர்கள் கொல்லப்படுவதை தவிர்ப்பது விடுதலை போராட்டத்தின் உயர்ந்த யுத்த தர்மமாகும்.

மக்கள் யுத்தம் என்ற போராட்ட வழிமுறையிலும் கூட அனைத்து மக்களும் ஆயுத நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுவதில்லை. அவ்வாறு ஆயுத நடவடிக்கையில் ஈடுபடாத மக்களை போராட்ட இராணுவமாக அல்லது விடுதலை இராணுவமாகக் கொள்ளமுடியாது. அதனால் மக்கள் போராட்டத்தில் அல்லது மக்கள் யுத்தத்தில் பங்கெடுப்பது என்பது வேறு. போராட்ட அல்லது விடுதலை இராணுவமாக செயற்படுவது என்பது வேறு. எனவே நேரடியாக மோதலில் பங்கெடுக்காத மக்களின் வாழ்வுரிமை மதிக்கப்படுவது அவசியம். அவ்வாறு மதித்தால் அவர்களைப் பிணங்களாக்க வேண்டிய தேவை ஏற்படாது.

> அடித்தாற் திருப்பி அடிக்க வேண்டிய தேவை இருக் கிறது. ஆனால் யார் சொல்லி, யார் அடிக்கிறார்கள் என் பது யாருக்காக யார் அடிபடுகிறார்கள் என்பதுமே இன் றைய சிக்கலாக உள்ளது. அடிபடுகிறவர்கள் பெரும்பா லும் திருப்பி அடிக்க இயலாத பலவீனமானவர்களா கவோ யாரையுமே அடிக்க எண்ணாத அப்பாவிகளா கவோ இருக்கிறார்கள். அடிக்கும்படி ஆணையிடுவோர் கைக்கெட்டாத தொலைவில் இருக்கிறார்கள். எனவே, பாதிக்கப்படுவோர் அப்பாவிப் பொதுமக்களாகவே இருந்து வருகின்றனர்.
>
> கோகர்ணன்

எந்தவொரு போராட்டத்திலும், யுத்தத்திலும் பெரும் எண்ணிக்கையாக மக்கள் அவற்றுக்கு ஆதரவாக இருந்தாலும் கூட அவர்கள் நேரடியான மோதலில் ஈடுபடுவதில்லை. அத்தகைய மக்கள் மீதான அக்கறை மேலோங்கி இருக்கும் போது மனிதாபிமானத்தை புறந்தள்ள முடியாது.

இலங்கையின் இனப்பிரச்சினையில் சாதாரண தமிழ் மக்கள் கொல்லப்படுவதும் இம்சிக்கப்படுவதும் பேரினவாதத்தின் அரசியலாகும். அதற்கு பதிலிறுப்பதுபோன்று சாதாரண சிங்கள மக்களை கொல்வதும், இம்சிப்பதும் தமிழ்மக்களின் போராட்ட அரசியலாக இருக்க முடியாது. சாதாரண சிங்கள மக்களைக் கொல்வது இம்சிப்பது போன்றனவெல்லாம் பேரினவாதத்திற்கு ஓரளவுக்கு அழுத்தங்களாக இருந்தாலும் அவை சரியான வழிமுறையுமல்ல. போராட்டத்திற்கு பேரினவாதத்தை பணியவைக்கும் தந்திராரோபாயமுமல்ல. சாதாரண சிங்கள மக்களை பேரினவாதத்திலிருந்து பிரித்து பேரினவாதத்தை தனிமைப்படுத்துவதற்கு பதிலாக சிங்கள மக்களை கொல்வதன் மூலம் தமிழ் மக்களின் போராட்டத்தை சாதாரண சிங்கள மக்களின் உயிர் வாழ்விற்கு எதிரானதாக நிலைநிறுத்தி அவர்களை பேரினவாதத்தின் பக்கம் தள்ளி அதனைப் பலப்படுத்தவே வழிவகுக்கும்.

## மீ`கல்

தனிநபர் படுகொலைகள் அரசியல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகளல்ல. தனிநபர் கொலைகளால் எதிரிகளுக்கு அழுத்தங்கள் ஏற்படலாம். ஆனால் அவற்றால் எதிரிகள் மேலும் பலமடைவரேயன்றி பலவீனமடைய மாட்டார்கள். இந்த தனிநபர் படுகொலைகளை அரசியல் வழிமுறையாக ஏற்றுக்கொள்பவர்கள் எதிரி தரப்பினரை கொலை செய்யத்தொடங்கி தமது சொந்த அணியில் ஜனநாயகத்தை மறுத்து அங்கும் அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க தனிநபர் படுகொலைகளை அரசியல் அணுகுமுறையாக அல்லது வழிமுறையாக கொள்வர் என்பதையே வரலாறு நமக்கு எடுத்துக்காட்டி வந்துள்ளது.

ஆளும் வர்க்க பேரினவாதிகள் மக்களை கொல்வதை அரசியலாக யுத்த தர்மமாக கொள்பவர்கள். இவர்கள் நாளடைவில் சொந்த மக்களை கொன்று குவிப்பதையும் அரசியலாக நியாயப்படுத்துவர். தனிநபர்கள், குழுக்கள் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு கொலைகளை வழிமுறைகளாக கொள்பவர்கள். ஆனால் அதற்கும் மக்கள் போராட்டத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது.

போராடுகின்றவர்களின் தரப்பிலுள்ள மோதலில் ஈடுபடாத சாதாரண மக்களை எதிரிகள் கொலை செய்வதால் அடக்குகின்றவர்களின் தரப்பில் இருப்பதாக கொள்ளப்படும் மோதலில்

தொடர்ச்சி 12ம் பக்கம்

---

### *தடுக்க முடியாத கொலைகளும்*

6ம் பக்க தொடர்ச்சி

வந்த நாளிலிருந்து படிப்படியாக மோசமாகி வந்துள்ள சில போக்குகள்.

கெபிதி கொல்லாவ நமக்கு மீளவும் நினைவூட்டிய இன்னொரு பயங்கரவாதம் ஊடகப்பயங்கரவாதம். ஊடகச் சுதந்திரம் மனித சமத்துவத்துக்காகவும் விடுதலைக்காகவும் பேசுகிற போதெல்லாம் அது தட்டியடக்கப்படுகிறது. அது பேரினவாத வெறியைக் கிளறிவிடும் போதும் இனப்பகைமையைத் தூண்டிவிடும் போதும் அது ஊக்குவிக்கப்படுகிறது. எனினும் சண்டேலீடர் 18-06-2006 இதழின் தலையங்கம் எழுப்பிய கேள்வி பெறுமதிமிக்கது. எங்காவது சிங்கள மக்கள் விடுலைப் புலிகளால் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிற போதெல்லாம் படமெடுக்கக் கமராக்கள் சகிதம் தலத்துக்குப் படையெடுக்கிற தேசிய ஊடகங்கள் ஏன் தமிழ் மக்கள் பாதிக்கப்படும் போது ஏறெடுத்தும் பார்ப்பதில்லை? அவர்கள் ஒரு வலிமை குறைந்த கடவுளின் குழந்தைகளா?

தமிழ் மக்கள் 1958 வன்முறை முதலாக இன்றுவரை பட்ட அவலங்களைச் சிங்கள மக்களுக்குக் தெரியத்தக்கதாகக் கூறக் கூடிய ஊடகங்கள் இந்த நாட்டில் இல்லை என்பது வருத்தத்திற்குரிய உண்மை. இது பற்றித் தமிழ் தலைமைகள் என்ன செய்கின்றன? தமிழ் ஊடகங்கள் என்ன சொல்கின்றன? ஒரு பிசாசைச் சந்திக்க இன்னொரு பிசாசை ஏவிவிடுகிற அணுகுமுறை உள்ளதே ஒழிய பேரினவாதப் பிசாசை அடக்கக் கூடியவர்களது நட்பைத் தேடுகிற நோக்கம் தேசியவாதிகள் யாரிடமும் இல்லை.

பாராளுமன்றத்தில் கெபிதிகொல்லாவ பற்றிய அனுதாபப் பிரேரணையின் போது எழுந்து நிற்க மறுத்துக் குறைந்தபட்ச மனிதாபிமானத்தையேனும் காட்டாத இரண்டு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மிடையே இருப்பது பற்றித் த.தே.கூ. பா. உக்கள் என்ன சொல்லப் போகிறார்கள். பச்சை இனவாதியான ரத்னசார தேரர் இறந்த தமிழ் மக்களுக்கான அடுத்த நாளைய அனுதாபப் பிரேணையின் போது மிக நாகரிகமாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்திவிட்டுப் பிரேரணையின் அடிப்படையைத் தான் ஏற்கவில்லை என்று சொன்னார். அந்தளவு நிதானங் கூட இல்லாத ஈழ வேந்தன் அதே நாள் தங்களது மனிதாபிமானம் பற்றித்தொலைக் காட்சியில் நீட்டி முழக்கியிருந்தார். இப்படிப்பட்டவர்கள் மனிதாபிமான அடிப்படையில் தமிழ் மக்களுக்காக மன்றாடுவார்களானால் உண்மையில் யார்தான் தமிழருக்காக இரங்க முடியும்? இது போன்ற நடத்தை சிங்கள பேரினவாதிகளது கைளை மேலும் வலுப்படுத்தும் என்பது இவர் போன்றோருக்குத் தெரியாததா?

போரைச் சாதாரணமக்களுக்கு எதிராகத் திருப்பி அவர்களைத் தண்டிப்பதன் மூலம் விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தி மக்களை அகதிகளாக்குவது வேண்டுமானால் ஒரு அடக்குமுறை ஆட்சிக்குப் பொருந்தும். அதற்கு முழுமாறான ஒரு அணுகுமுறையே ஒரு விடுதலைப்போராட்டத்துக்கு முக்கியமானது. சாதாரண மக்களைத் தாக்காமலிருப்பது மட்டுமில்லாமல் அவர்கள் யாராயிருப்பினும் எந்த விதமான மிலேச்சத்தனமான தாக்குதலுக்கும் உட்படாதிருக்குமாறு காப்பாற்றுகிற பொறுப்பையும் ஒரு விடுதலை இயக்கம் தனது பொறுப்பாகக் கருத வேண்டும். ஒரு ஆக்கிரமிப்பு ராணுவத்தினின்று வேறுபட்டவிதமாக விடுதலைப்படைகள் நடப்பதன் மூலம் எதிரியை உள்ளிருந்தும் பலவீனப்படுத்த இயலும். இவ்விடயத்தில் மாக்ஸிய லெனினிய விடுதலைப் போராளிகள் நேபாளத்தில் நடந்து கொண்ட முறை முன்னுதாரணமானது. அதனாலேயே பத்து ஆண்டுகளில் பத்தாயிரத்திற்கும் சிறிது அதிகமான உயிரிழப்புக்களை மட்டுமே மக்கள் சந்தித்தனர். அதிற் பெரும் பகுதிக்கு இராணுவமே பொறுப்பு. ஒரு தடவை இராணுவ வாகனத்திற்கு இலக்கு வைத்த கண்ணிவெடியில் பஸ்ஸில் சென்ற சாதாரண மக்கள் இறந்த போது அதற்கான பொறுப்பை ஏற்று மக்களிடம் மன்னிப்புக்கேட்டுத் தவறு செய்தவர்களையும் தண்டித்தார்கள் நேபாளத்தின் விடுதலைப்படையினர் என்பது குறிப்பிடத்தக்கது. போராட்டங்களில் தேவையற்ற உயிரிழப்புக்கள் நடக்கலாம். ஆனால் அவை தவிர்க்க வேண்டியவை. முடிந்தால் எதிரிப் படைகளைக் கூடக் கொல்லாதீர்கள், சிறைப்பிடித்துத் திருத்துங்கள் என்பதுதான் மாஓ, ஹோ சிமின் போன்ற மாக்ஸியப் போராளித் தலைவர்கள்ப் தமது தோழர்கட்கு வழங்கியும் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்தியும் வந்த போராட்ட நடைமுறை.

ஒரு போராட்ட இயக்கம் வெகுசன இயக்கமாகவும் போராட்டம் மக்கள் யுத்தமாகவும் வடிவு பெறுகிற போது சாதாரண மக்கள் பாதுகாக்கப்படுகின்றனர் என்பது போகப் பொய்யான ஒரு குற்றச்சாட்டை எந்த நிலையிலும் போராளிகள் மீது சுமத்த இயலாது போகும். அண்மையில் பிலிப்பினிய ராணுவ கொலைக்குழு ஒரு வெகுசன இயக்கத்தலைவரைக் கொன்றது. அரசாங்கம் புதிய மக்கள் படை எனப்படும் விடுதலைப்படையினர் மீது குற்றம் சுமத்த முயன்றது. எனினும் பொதுமக்கள் நடுவிலிருந்து யார் குற்றவாளிகள் என்பதற்கான ஆதாரங்களைத் திரட்டி அரசாங்கத்தின் பொய்யை அம்பலப்படுத்த இயலுமாயிற்று. மக்கள் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாகத் தம்மை உணருகிற போதே இப்படி இயலுமாகிறது. இன்று அரசாங்கத்தின் பேரினவாத அடக்குமுறைப் போரின் இலக்கு விடுதலைப்புலிகள் மட்டுமல்ல. தமிழ் மக்களைப் பயமுறுத்திப் பணியவைக்கிற போக்கு 1983 முதல் நடைமுறையிலுள்ளது. தமிழ் மக்கள் அரச பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றப்பட வேண்டும். அந்தப் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் மட்டும் போதாது. ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு அவசியமான அரசியல் சமூகப் பரிமாணங்கள் பற்றியும் நாம் விரிவாகச் சிந்திக்க வேண்டும்.

கெபிதிகொல்லாவவின் சோகம் போல இந்த மண்ணில் இனி எங்கும் எவருக்கும் நிகழக் கூடாது என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்க வேண்டும். அது போன்ற எந்தக் கொடுமையும் நாட்டின் அமைதிக்கு நிரந்தரமான தீமைவிளைவிப்பது என்பது பற்றி நாம் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். இது யாருடைய பயங்கரவாதம் என்பதல்ல இன்று முக்கியமானது. இனியும் இப்படி நடக்க விடுவோமா என்பது தான் நம்முன்னாலுள்ள சவால்.

---

### தேசிய இனப்பிரச்சனை

6ம் பக்க தொடர்ச்சி

கொண்டதாக 2000ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தமிழ்த் தரப்பும் ஏற்கவில்லை. ஐ.தே. கட்சியும் ஏற்காதது மட்டுமன்றி அச்சட்ட மூலத்தை சில ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குள்ளேயே எரித்தனர்.

2002 ஆம் ஆண்டு சமாதான உடன்பாட்டிற்கு ஏற்ப சமஷ்டி முறையிலான தீர்விற்கு அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ இணக்கம் தெரிவித்திருந்தார். அதனை ஜனாதிபதி சந்திரிகாவும் ஏற்றுக் கொண்டிருந்தார்.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த சமஷ்டி முறையை ஏற்கவில்லை. இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சியின் கீழே தீர்வு காணப்பட வேண்டும் என்றே கூறிவருகிறார். ஜே.வி.பி, ஹெல உறுமய என்பன அதிகாரப் பாரப்படுத்தலுக்கு கூட இணக்கத்தைத் தெரிவிக்கவில்லை. தமிழ்த் தரப்பில் சமஷ்டி ஆட்சியே வலியுறுத்தப்படுகிறது.

இந்நிலையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பது அதிகாரப் பரவலாக்கலின் அடிப்படையிலோ அதிகாரப் பாரப்படுத்தலின் அடிப்படையிலோ அமைய முடியாது. அதன் மூலம் தமிழ் மக்களுக்கும் ஏனைய அடக்கப்படுகின்ற தேசிய இனங்களுக்கும் சுயாட்சியை வழங்கி இன ஒடுக்கலுக்கு முடிவு கட்ட முடியாது. அதிகாரப்பங்கீடு என்ற அடிப்படையை ஏற்றுக்கொண்டு அந்த அடிப்படையிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்பதே சரியானதாகும்.

இவ் அதிகாரப்பங்கீடு பிரிவினையாகவோ தனி நாடாகவோ வியாக்கியானம் செய்யப்பட வேண்டிய தேவையோ கட்டாயமோ இருக்க முடியாது. சிங்கள மக்கள் மத்தியில் ஆளும் வர்க்க அரசியல் ஆதிக்கத்தை நிலை நிறுத்த முற்படும் பிற்போக்கு சக்திகளே தேசிய இனங்களுக்கு அதிகாரத்தை பங்கீடு செய்வதை மறுத்தும் எதிர்த்தும் வருகின்றனர்.

மாக்சிச லெனினிசவாதிகளாகிய நாம் தேசிய இனங்களின் வளர்ச்சி இருப்பு எதிர்காலத்தை அங்கீகரிக்கின்றவர்கள். சுய நிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சியை வற்புறுத்தியே நிற்கிறார்கள். அச்சுயாட்சியின் அடிப்படை அதிகாரப் பங்கீடாகவே இருத்தல் வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தும் வருகின்றார்கள்.

---

### *மாக்சிச லெனினி*

7ம் பக்கம் தொடர்ச்சி

வருவதை முன் கூட்டியே உணர்ந்து கொண்ட அவர் பிள்ளைகளுக்கு தனது இறப்பு நிகழ்வை மிக எளிமையாகவும் எந்த விதமான சமய கிரிகைகள் சடங்குகள் ஏதுமின்றி தான் வாழ்நாளில் கடைப்பிடித்த கொள்கைக்கு ஏற்ப நடாத்த வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்திருந்தார். அதனை அவரது குடும்பத்தினர் உரியவாறு நிறைவேற்றி எவ்வித மூடநம்பிக்கைகள் கொண்ட கிரிகைகள் சடங்குகள் இன்றி அஞ்சலி நிகழ்வு நடாத்தி கொழும்பு கனத்தை மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. இறுதி அஞ்சலி உரைகள் நெல்லியடி தெ.நாகேந்திரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி.கா.செந்திவேல், சோ.தேவராஜா, சி.சிவசேகரம் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சார்பில் திருமதி அ.புவனேஸ்வரி உட்பட நண்பர்கள் பலர் உரையாற்றினர். தனது அறிவு ஆற்றல் குடும்ப சூழல் என்பனவற்றின் ஊடாக ஒரு மாக்சிச லெனினிசவாதியாகச் சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து பணிசெய்து மறைந்த தோழர் நாகேந்திரனுக்கு எமது புரட்சிகர அஞ்சலியையும் அவரது கடும்பத்தினருக்கு அனுதா பங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். -ஆசிரியர் குழு-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# நேபாள மக்களின் போராட்டம் ஒரு வரலாற்றின் முடிவும் இன்னொன்றின் தொடக்கமும்

இத்துடன் நேபாளத்தில் மன்ன ராட்சியின் வரலாறு முடிந்து விட்டாற் போலத்தான் உள்ளது. எனினும் அந்த முடிவு எப்படி இயலுமானது என்று சொல்லுவதிற் தான் பல பேருக்குச் சங்கடம். நேபாளம் தென் னாசியாவின் மிகப் பின்தங்கிய நிலை யில் உள்ள நாடாயிருப்பதற்கான காரணங்கள் பல. அவற்றுள் நிலவு டைமைச் சமூகத்திற்குப் பாதுகாவ லாய் இருந்த முடியாட்சியினது பங்கு பெரியது. அந்த முடியாட்சி ஒரு பயங்கரமான கொடுங்கோ ன்மையாகக் கடந்த ஐந்தாண்டு களாக நடந்து கொண்டபோது கூட அதை ஆதரித்து வந்தவர்கள் இருக் கிறார்கள். அவர்கள் இப்போது புதிய நேபாளத்தின் எதிர்காலத்தைத் தீர் மானிக்கத் துடிக்கிறார்கள்.

மன்னராட்சினின்று நேபாளத்தின் விடுதலையின் பயனை மக்கள் அனு பவிக்காமல் தடுப்பதற்கு அமெரிக் காவும் இந்தியாவும் மும்முரமாயிருந் தன. அமெரிக்கா வெளிவெளியா கவே மன்னராட்சியை ஆதரித்தது. மன்னராட்சி தடுமாறித் தத்தளித்த நிலையில் றிச்சட் பௌச்சர் என்கிற அமெரிக்காவின் தென்னாசிய அலு வற் பொறுப்பாளர் நேபாள ராணு வத் தலைமையுடன் கலந்தாலோச னைகளை நடத்தினார். அதன் விளைவுகளைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இந்தியா மன்னராட்சிக்கு மிகவும் உடந்தையாயிருந்தது. பழைய மன் னரது குடும்பத்தின் படுகொலையி லும் இந்தியாவின் பங்கு பற்றிப் பேச ப்பட்டமை நினைவிலிருத்தத் தக்கது.

முழு அதிகாரங்களையும் மன்னர் க்யானேந்திர 1-2-2005 அன்று தனதாக்கிய பின்பும் இந்தியா அவரு க்கு ஆதரவாயிருந்தது. மன்னராட் சிக்கு எதிரான வெகுசன இயக்கம் வலுவடைந்த பின்பும் மன்னராட்சி யின் கீழான பாராளுமன்ற சனநாய கம் என்ற நிலைப்பாட்டையே இந் தியா ஆதரித்தது. மன்னராட்சி பாராளுமன்ற சனநாயகத்தை மீட்க மறுத்தால் மாஓவாதிகள் தலைமை யிலான ஒரு மக்கள் குடியரசு உரு வாகும் என்ற ஒரு சூழ்நிலையிலேயே இந்திய ஆளும் நிறுவனம் மாற்று வழிகளைத் தேடியது.

க்யானேந்திராவை எதிர்க்கத் திரா ணியில்லாது, 1-2-2005க்குப் பின்பும் மன்னருடன் சமரசம் செய்தவை தான் நேபாள பாராளுமன்றக் கட்சி கள். இதில் நேபாள ஐக்கிய மா.லெ கம்யூனிஸ்ற் கட்சியும் குற்றவாளியே. இப்படிப்பட்ட கட்சிகளால் எதுவுமே இயலாத நிலையில் மாஓவாதிகளது போராட்டம் நேபாள அரசாங்கத்தை விரும்பிய போது செயலற்றதாக்கக் கூடியதாக வலிமை பெற்று வந்தது. நம்பிக்கைத் துரோகியான க்யானே ந்திராவை எதிர்த்து முறியடிக்கும் வலிமை பாராளுமன்றக் கட்சிகட்கு இருக்கவில்லை. ஏழுகட்சிகள் சென்ற ஆண்டின் பிற்பகுதியில் ஒரு கூட்டணி அமைத்துப் போராடி னாலும் மன்னராட்சியை அவர்க ளால் எதுவும் செய்ய இயலவில்லை. சென்ற நவெம்பர் மாதம் மாஓவாதி களுடன் ஒரு உடன்படிக்கை செய்த பின்னரே அவர்களால் மன்னருக்கு எதிராகத் தைரியமாகப் போராட முடிந்தது.

இந்திய ஆளும் வர்க்கத்தில் ஒரு பகுதியினர் ஏழு கட்சிக் கூட்டணிக் கும் மாஓவாதிகட்குமிடையிலான உடன்படிக்கைக்கு ஒத்துழைத்த னர். அதன் மூலம் மாஓவாதிக ளைச் 'சனநாயக நீரோட்டத்திற்கு' கொண்டுவரலாம் என்பதும் பாராளு மன்ற அரச அதிகாரத்தில் அவர்கள் பங்காளிகளான பின்பு அவர்களை வளைத்துப் போடலாம் என்பதும் ஒரு பகுதியினரது கணிப்பு. இன்னொரு பகுதியினர் மாஓவாதிகளைப் பாவி த்து பாராளுமன்ற ஆட்சியை நிறுவிய பின்பு மாஓவாதிகளை ஓரங்கட்டலாம் என்பதாகும். அதைவிட ஏழுகட்சிக் கூட்டணி மாஓவாதிகளுடன் ஒத்து ழைப்பதை இந்திய அரசாங்கம் விரு ம்பவில்லை. அந்த ஒத்துழைப்பை முறி யடிக்கத் தமது கையாளான கொய் ராலாவைப் பாவித்தார்கள். எதிர்பார் த்ததை விட வேகமாகவே நேபாள அரசர் பின்வாங்க நேரிட்டது. அந்த நிலையில் அவர்கள் அடுத்த ஆண்டு தேர்தல்களை நடத்துவது, உட னேயே தேர்தல் என்று பேரம்பேசி எதுவும் எடுபடாமல் பழைய பாராளும ன்றத்தைக் கூட்டுவது என்று 4-2005 அன்று சொன்னவுடனேயே

**-நரசிம்மா-**

அதை ஏற்குமாறு கொய்ராலாவை யும் ஏழுகட்சிக் கூட்டணியையும் இந்தியா வற்புறுத்தியது. அவர்கள் அதற்கு உடன்பட்டனர். அதையே இறுதித் தீர்வாக்கி, மன்னராட்சிக் குக் கீழ்ப்பட்ட பாராளுமன்ற சனநா யகத்தை நிறுவுவதற்கு இந்தியா சொன்னபடி நடக்க கொய்ராலா ஆயத்தமானார். இதற்கு எதிராக மாஓவாதிகள் எச்சரித்துக் கடுங் கண்டனம் தெரிவித்தனர்.

புதிய அரசியல் யாப்பை வரையவும் மக்கள் தீர்ப்புக்கமைய ஒரு புதிய



ஆட்சி முறையையும் பல கட்சிச் சனநாயகத்தையும் உருவாக்குவதற் கான அரசியல்யாப்பு அவை ஒன் றைத் தெரிவுசெய்து உருவாக்குவத ற்கான நடவடிக்கைகளை அவர்கள் வற்புறுத்தினர். அதை ஏற்பதற்குத் தயங்குகிறவர்கள் மக்களை ஏமா ற்றத் தயங்கமாட்டார்கள் என்று அறி ந்த மாஓவாதிகள் யூன் மாதத் தொட க்கத்தில் இரண்டு லட்சம் மக்களை நேபாளத்தின் தலை நகரத்தில் அணி திரட்டி ஒரு மாபெருங் ஆர்ப்பாட்டக் கூட்டத்தை நடாத்தினர். மன்னருக் கெதிரான போராட்டத்தின் எக் காலகட்டத்திலும் திரண்டதை விடப் பல மடங்கான மாபெரும் மக்கள் திரட்சியின் பின்பு ஏழு கட்சிகள் கூட்டணியினர் மாஓவாதிகளுடன் பேசி ஒரு புதிய அரசியல் யாப்புக் கான நடவடிக்கைகள் பற்றி உடன் பாடு கண்டுள்ளனர்.

மாஓவாதிகள் தமது மாபெரும் மக்கள் பொதுக்கூட்டத்தின் மூலம் முடியாட்சியைப் படியிறங்கச் செய் தது யாருடைய வலிமை என்பதை உலகிற்குத் தெளிவாக்கியுள்ளனர். இப்போது மாஓவாதிகளை மெச்சிப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்து கிற முயற்சியில் இந்திய திரிபுவாதக் கட்சிகள் இரண்டும் இறங்கியுள்ளன. பாராளுமன்றப் பாதைக்கு மாஓவாதி கள் வந்துவிட்டதற்காக அவர்களைப் பாராட்டி அப்பாதையையே இந்திய மாஓவாதிகளும் பின்பற்ற வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ற் கட்சிப் பொதுச் செயலாளர் பரதன் பேசியி ருந்தார். இத் தொனியிலேயே திரிபு வாதிகளும் அவர்கட்கு ஆதரவான ஏடுகளும் பேசுகின்றனர். இவ்வாறு மாஓவாதிகளது பத்துவருடப் போரா ட்டமும் அதன் வெற்றிகளும் கொச் சைப்படுத்தப்படுகின்றன. அதை விட மாஓவாதிகள் என்ன அடிப்படை களின் கீழ் பாராளுமன்ற முறையை ஏற்க முன்வந்தனர் என்றோ அவர் கள் உருவாக்க முயலுகிற பாராளும ன்ற முறை எப்படியிருக்கும் என்றோ இதுவரை சாதித்த சமூக விடுத லைகளின் எதிர்காலம் என்ன என் றோ இந்தியத் திரிபுவாதிகட்கு அக்க றையில்லை. ஆயுதப் போராட்டப் பாதையை மறுத்தால் அதுவே போதுமானது.

இதில் இன்னொரு விடயமும் முக்கி யமானது. மாஓ வாதிகள் வெறு மனே ஆயுதப் போராட்டம் மட்டும் நடத்தவில்லை. அவர்கள் காணிச் சீர்திருத்தம் பெண்ணுரிமை, சாதிய ஒழிப்பு, இன சமத்துவம் போன்ற பல வேறு நடவடிக்கைகளையும் மக் களின் கூட்டு முற்சியால் ஒரு நெடுஞ்சாலை உட்பட்ட நிர்மாண வேலைகளையும் முன்னெடுத்துள்ள னர். இவை பற்றிப் பேசாமல் விடுவ தன் மூலம் மாஓ வாதிகளது செல் வாக்கு அவர்களது கைகளிலிருக்கிற துப்பாக்கியிலேயே தங்கியுள்ளது என்ற பொய்யான பிரசாரம் வலுப்பெ றுகிறது.

சீன, வியற்நாமிய, பிலிப்பினிய கம் யூனிஸ்ருக்கள் உட்பட்ட மாக்ஸிய லெனினியர்கள் யாவரும் எல்லாக் காலத்திலும் அமைதியான முறையில் நியாயமான தீர்வுகளைப் பேச்சுவார்த் தைகள் மூலம் பெற ஆயத்தமாகவே இருந்துள்ளனர். வீணான உயிரிழப் புக்களைத் தவிர்ப்பதில் மிக அக்கறை யுடன் இருந்து வந்துள்ளனர். போரா ட்டம் என்பதை அவர்கள் பல வேறு தளங்களிலும் நிகழ்த்துவதற்கு ஆயத் தமாயிருந்துள்ளனர். அமைதியாக வென்றெடுப்பதை அமைதியாக வென்றெடுப்பதும் அதை எதிரி குழப்பு வான் என்று அறிந்து எச்சரிக் கையுடன் செயற்படுவதும் குழப்புகிற சூழ்நிலையில் தேவைக்கேற்ப ஆயுதம் ஏந்தியோ ஏந்தாமலோ போரிடுவதும் தான் மாக்ஸிய லெனினிய போரா ட்ட அணுகுமுறை.

இந்திய மாஓவாதிகளின் ஆயுதங்க ளைக் கீழே போடச் சொல்லுகிற திரிபுவாதிகள். அவர்கள் எந்தச் சமூக நீதிக்காக ஆயும் ஏந்தினார் களோ அந்தச் சமூக நீதியை மக்க ளுக்குக் கிடைக்கச் செய்கிற சூழ் நிலை இந்தியாவில் உண்டு என்று சொல்வார்களா? அதற்கான உத்தர வாதம் அவர்களிடம் உண்டா? திரிபு வாதிகள் பெரிதும் அஞ்சுவது மாஓ வாதிகளது ஆயுதப் போராட்டத்துக் கல்ல. அவர்களது போராட்ட வெற் றிகள் இந்திய மக்களை ஒரு மாபெ ரும் போராட்டச் சக்தியாக மாற்றி விடும் என்பதையிட்டே அவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஏகாதிபத்திய உலகமயமாதலுடன் சமரசம் செய்து கொண்டு காங்கி ரஸ், தி.மு.க, ம.தி.மு.க, அ.தி.மு.க, முஸ்லிம் லீக் என்று சந்தர்ப்பவாதத் தேர்தல் கூட்டணி அமைக்கின்ற இந்திய திரிபுவாதிகட்கு நேபாளத தின் மாஓ வாதிகள் ஏழு கட்சிக் கூட்டணியுடன் செய்த உடன்படி க்கையின் நோக்கமோ பெறுமதியோ விளங்காது. எனவே தான் அதைக் கொச் சைப்படுத்துகிறார்கள்.

# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகப் பார்வை

உலகோன்

## வெற்றியாளர்களின் வரலாறு

உலக வரலாறு எப்போதும் வெற்றியாளர்களுக்கு உரியதாகவே இருந்து வந்துள்ளது. இப்போது எங்களுக்குச் சொல்லப்படுவதும் கூட வெற்றியா ளர்களின் வரலாறே. "கொலம்பஸ் உலக நாகரிகத்திற்கு மகத்தான சேவையைச் செய்துள்ளார்" என்று புஷ் அண்மையில் சொல்லியிருந்தார். கொலம்பஸ்சும் அவரது வாரிசுகளும் கொன்றொழித்த அமெரிக்க பூர்விக மக்களின் எண்ணிக்கையும் சூறையாடிய வளங்களும் எண்ணிலடங்கா. ஒரு நாகரிகத்தையே பூண்டோடழித்த பெருமை கொலம்பஸ்சைச் சாரும். இந்நிலை தொடர்ந்தால் கொஞ்சக்காலம் கழித்து எங்கள் குழந்தைகள் "ஈராக்கையும் ஆப்கானிஸ்தானையும் அழித்து உலக நாகரிகத்தைக் காப்பாற்றியவர் எங்கள் புஷ் மாமா தானே" என்றே கூறுவர்.

கவனிக்க: எங்கள் புஷ் மாமா.

## ஈராக்கிலே எண்ணெயில்லையாம்

அமெரிக்கா படாதபாடுபட்டு ஈராக்கைக் கைப்பற்றியதும் அமெரிக்கப் படைவீரர் செத்துத் தொலையத்தொலைய ஈராக்கில் தொடர்ந்துமிருப்பதும் எண்ணெய்க்கே எண்ணெய்க்கே. நாளொன்றுக்கு மூன்று மில்லியன் கலன்கள் எண்ணெயை அமெரிக்கப் படைகள் பயன்படுத்துகின்றன. ஆனால் சாதாரண ஈராக்கிய மக்களின் பாவனைக்கு எண்ணெய் இல்லை. எண்ணெய்க்குப் பெரும் தட்டுப்பாடு. இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கூட்டுப் படைத் தலைமை "அமெரிக்கப் படைகளுக்குத் தேவையான எண்ணெய் ஈராக்கில் இல்லை, நாங்கள் எண்ணெயை குவைத்திலிருந்தும் சவுதி அரேபியாவிலிருந்தும் பெறுகிறோம்" என்று தெரிவித்தது. வேடிக்கை எப்படி இருக்கிறது. இதனை நம்பவும் ஒரு கூட்டம் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறது.

## கொன்றாகிவிட்டது ஆதலால் பேச மாட்டான்

அல்கைதாவின் ஈராக்கிய தலைவர் சார்காவியை கொலை செய்ததை பாரிய வெற்றியாகவும் புலனாய்வின் அசாத்தியத் திறமை என்றும் ஊடகங்கள் புகழ் பாடுகின்றன. அமெரிக்கா சொல்லுகின்ற தகவல்களின் அடிப்படையில் சார்காவியின் இருப்பிடத்தை கண்டறிந்து சுற்றி வளைத்து குண்டு போட்டுக் கொன்றிருக்கிறார்கள். அப்படியென்றால் சார்காவியை உயிரோடு பிடித்திருக்க வேண்டியதுதானே. உயிரோடு பிடித்திருந்தால் பல தகவல்களைப் பெற்றிருக்கலாம் அல்லவா. சார்காவி உண்மையில் ஒரு அமெரிக்கத் தயாரிப்பு. உயிரோடு பிடிக்கப்போய் அவன் உண்மைகளை உளறி வைத்தால்....?

## ஜனநாயகப் பாதுகாப்பு

கொலம்பிய பல்கலைக்கழகமொன்றின் மாணவர்களும் ஆசிரியர்களும் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகிறார்கள். 'கம்யூனிசமற்ற கொலம்பியா' என்ற அமைப்பைச் சார்ந்தவர்களே இந்த அச்சுறுத்தல்களை தொடர்ந்தும் விடுத்து வருகிறார்கள். கொலம்பியாவில் ஜனாதிபதித் தேர்தல் வருகிறது. தற்போதைய ஜனாதிபதி தன்னுடைய 'ஜனநாயகப் பாதுகாப்பு' கொள்கைகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப் போவதாகச் சொல்லி யிருக்கிறார். அதன் ஒரு அம்சமாக பல்கலைக்கழக பேராசியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் தேர்தல் கண்காணிப்பாளர் களாக செயற்பட அனுமதிக்கப்பட்மாட்டார்கள் என தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுவும் மேற்கூறிய "ஜனநாயகப் பாதுகாப்பு" க்கு உட்பட்டதேயாகும்.

## தெரிவிப்பதும் நானே தீர்மானிப்பதும் நானே

"போதைப் பொருளுக்கெதிரான யுத்தம்" என்னும் காரியத்தையும் தானே முன்னெடுப்பதாக கூறி இலத்தீன் அமெரிக்காவெங்கும் தனது படைகளை நிறுத்துவதும் ஆட்சிமாற்றங்களை செய்து தனக்கு வசதியாக பொம்மை அரசாங்கங்களை நிறுவுவதும் என எல்லாவற்றையும் செய்து வருகிறது அமெரிக்கா. இதற்கிடையில் வெனிசுவேலா அமெரிக்காவுடன் போதைப்பொருளுக்கெதிரான யுத்தம் தொடர்பில் வைத்திருந்த கூட்டை முறித்துக் கொண்டு விட்டது. அமெரிக்கா "வெனசுவேலா போதைப்பொருள் கடத்தலுக்கு உதவி செய்கிறது. உலகில் மனிதாபிமானத்தைக் காக்க வெனசுவேலா கட்டுப்படுத்தப்பட வேண்டும்" என்று சொல்லி வருகிறது. உலகில் மிகப்பெரிய போதைப்பொருள் விற்பனையாளர்கள் சீ.ஐ. ஏ (CIA) என்பதை யார் தான் உரத்துச் சொல்வார்களோ.

## செவிடன் காதில் ஊதிய சங்கு

ஐ.நா என்றொன்று இன்னமும் இருப்பதாய் மட்டும் நம்பியபடி.....

கொஸ்டா ரீகா இன்று வரை அமெரிக்காவின் கொலனி நாடாகவே இருந்து வருகிறது. ஐ.நா நிறைவேற்றிய கொலனி நாடுகளுக்கு விடுதலை அளிக்கும் 1514ம் தீர்மானத்தின் படி 1970ம் ஆண்டு தொடக்கம் கொஸ்டா ரீகாவின் விடுதலை பற்றி தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது. பயனேதுமில்லை. அணு ஆயுதப் பரிசோதனை என எல்லாவகையிலும் கொஸ்டா ரீகாவின் சுற்றுப் புறச் சூழலை ஒழித்துக் கட்டிவிட்டது அமெரிக்கா. இவை எல்லா வற்றைப் பற்றியும் ஐ.நாவில் எடுத்துச் சொன்ன பிறகும் ஐ.நாவும் கேட்பதாய் இல்லை. அமெரிக்காவும் கேட்பதாய் இல்லை. இதன் மூலம் அமெரிக்கா விற்காக ஐ.நா இருப்பது மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## தேவதைகள் போல் ஒரு சாத்தான்

நேபாளிய மக்கள் இயக்கத்தின் மகத்தான போராட்டமும் அதன் வெற்றியும் யாவரும் அறிந்தவை. இதற்கிடையில் மன்னராட்சி போய் மக்களாட்சி மலர்ந்தால் முதுகுக்கு ஆபத்தென்று பாய்ந்தோடிப் போய் மன்னராட்சியை காத்தது இந்திய அரசு. எல்லோரும் இந்தியாவை தேவதையாகப் பார்த்த னர். இப்போது மன்மோகாதாரம் தன் விளையாட்டைக் காட்டுகிறது. மக் கள் இயக்கத்தினரை விலைக்கு வாங்கவும் புதிய இந்திய கம்பெனிகளை நிறுவி தன் மேலாதிக்கத்தை பேணவும் முயல்கிறது இந்தியா. அடுத்த கட்டத்தைச் சிறிது பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# இடதுசாரி எதிர்ப்பு வக்கிரங்களை உக்கிரப்படுத்தும் "ஞானம்"

## இஞ் ஞானத்தின் அஞ்ஞானம்

ஞானம் என்கிற சஞ்சிகையின் சிறப்பு மாகந்தவறாமல் நாட் பிந்தாமற் கடந்த ஆறு ஆண்டுகளாக அது வெளி வருகிறது என்பது. அத்துடன் அது மட்டுமே, அதன் மெச்சத்தக்க பண்பு என்றுஞ் சொல்ல வேண்டும். பக்கச் சார்பற்ற தன்மை, நடு நிலை என்பன பற்றி ஞானத்திற் தலையங்கங்கள் வந்திருக்கின்றன. குழு மனப்பான்மை பற்றியும் அதில் மிகவும் பேசப்பட்டு வருகிறது. அரசியலுக்கு அப்பாற்பட்ட இலக்கியம் பற்றிய மயக்கங்கள் அதில் இருப்பது போலத் தெரியும். இது ஞானத்தின் தோற்றப்பாடான இலக்கியப் பார்வை.

ஞானம் ஆசிரியரிடம் பக்கச்சார்பற்ற தன்மையோ நடுநிலையோ குழுச்சாராத மனப்பான்மையோ அரசியலுக்கு அப்பாற்பட்ட இலக்கிய நோக்கோ இருக்கிறதாக நான் நம்பவில்லை. அவர் கூட அதை நம்ப நியாயமில்லை என்றே நினைக்கிறேன். என்றாலும் மேற்கூறியவிதமான பாசாங்குகள் வணிக நோக்கங்கட்குப் பயனுள்ளவை எனினும் பரபரப்பான வணிக விளம்பரங்கள் போன்று உண்மைக்குப் புறம்பானவை.

ஞானம் பத்திரிகையினதோ அதன் பதிப்பாளரும் ஆசிரியருமான ஞானசேகரனதோ அரசியல் என்னவென்று விளங்கிக்கொள்ள ஒருவர் துப்பறியும் நிபுணராக இருக்க வேண்டியதில்லை. அதே வேளை ஞானசேகரனை ஆட்கொண்டிருக்கும் இடதுசாரி எதிர்ப்பின் வக்கிரங்கள் அண்மைக்காலங்களில் மேலும் உக்கிரமாக வெளிப்படுவதால் அவரது இலக்கியத்தின் அரசியல் பற்றிச் சிறிது தோலுரித்துக் காட்ட வேண்டியுள்ளது.

ஞானசேகரன் கைலாசபதி மீது கொண்டிருக்கும் பகையுணர்வு விளங்கிக் கொள்ளக் கூடியது. அவருடைய இலக்கிய ஞானத்தின் அளவுகோல்களின் படி அது அவருக்கு நியாயமானதாகவும் தெரியலாம். ஞானசேகரனின் முதலாவது சிறுகதைத் தொகுதிக்குக் கைலாசபதியிடம் முன்னுரை பெற்றுத் தருமாறு தனது உறவினரான கி. லக்ஷ்மண அய்யரைக் கேட்டபோது கைலாசபதியின் நண்பரான லக்ஷ்மண ஐயர் அவரை அதற்கு எதிராக எச்சரித்தும் அசட்டுத் துணிவுடன் கைலாசபதியிடம் முன்னுரை பெற்றதாகவும் அம் முன்னுரையிற் கைலாசபதி சில கதைகளை வாசித்த போது தானறிந்த வேறு சிறுகதைகளை வாசித்த நினைவு வந்ததாகவும் எழுதியதோடு கதைகளின் தரத்தை வெகு சராசரியானவை என்றே குறிப்பிட்டிருந்தார் என்றும் ஞானத்தில் எழுதியிருந்தார்.

கைலாசபதி குறிப்பிட்ட கதைகளைத் தான் வாசித்தே இருக்கவில்லை என்றும் அப்படியிருக்கக் கைலாசபதி அவ்விதமாக எழுதியது பற்றியும் ஞானத்தில் ஞானசேகரன் சிலகாலம் முன்பு குமுறியிருந்தார். கைலாசபதி சொன்னது பிழையானது என்று அவரால் நிறுவ முடியவில்லை. உண்மையிற் சில வேளைகளில் இப்படி விபத்துக்கள் நேரலாம். ஆனால் ஒரு தொகுதியில் கணிசமான அளவில் நிகழும் போது ஒரு விமர்சகர் அதைப் பற்றிக் கவனியாமல் இருக்க இயலாது.

அதை விட முக்கியமாக, கைலாசபதி தன்னைச் சரியாக மதிப்பிடப்படாத போதும், பிற் காலத்தில் தனது நாவலுக்கும் சிறுகதைகட்கும் பரிசுகள் கிடைத்ததாகவும் அதன் மூலம் கைலாசபதியைப் பொய்ப்பித்து விட்டதாகவும் அவர் பெருமைப்பட்டுக் கொண்டார்.

இங்கே இரண்டு கேள்விகள் எழுகின்றன. கைலாசபதியாற் கடுமையாக விமர்சிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட கதை எதுவும் பரிசு பெற்றதா என்பது ஒன்று. அதற்குரிய பதில் இல்லை என்பதாகும் என்று நினைக்கிறேன். மற்றது யாரிடமிருந்து எப்போது பரிசு கிடைத்தது என்பதாகும்.

சாகித்திய மண்டலப் பரிசுகள் பல குறிப்பாகத் தமிழுக்கானவை, அரசியற் காரணங்கட்கு மட்டுமல்லாது தனிமைப்பட்ட நட்பும் பகையுங் காரணமாயும் முடிவாகியுள்ள என்பதை ஞானசேகரனும் மறுக்கமாட்டார் ஞானசேகரனுக்கு பரிசுகள் கிடைத்த காலம் யூஎன்பி ஆட்சிக்காலம். இதற்கு மேல் பரிசுகளின் அரசியல் சாராத பரிமாணம் பற்றி நான் சொல்ல அவசியமில்லை.

அண்மையிற் கொழும்புத் தமிழ்ச் சங்க நிகழ்வொன்றில் "தனது பெருமதிப்பிற்குரிய" கைலாசபதியைக் குறித்தே என்.கே.ரகுநாதன் "நிலவிலே பேசுவோம்" சிறுகதையை எழுதியதாகக் கூறப்பட்டுக் கைலாசபதி பற்றிய வீண் சர்ச்சைகள் எழுந்த போது மவுனங்காத்த ரகுநாதன் நாற்பது வருடங்கட்கும் பின்னர் தான் தனது கதை கைலாசபதி பற்றியதல்ல என்ற உண்மையைச் சொன்னார் என்று ரகுநாதனைக் கடிந்து கொண்டார்.

**இலக்கியத்தை லீற்றரிலும் கிலோவிலும் அளந்து மதிப்பிடுகிற புரவலர்கள் கொலு வீற்றிருக்கிற ஒரு யுகத்தில் இலங்கையில் தரமான தமிழ் இலக்கிய ஏடுகள் வெளிவரத் தடுமாறுகின்றன.**

முதலாவதாகத் தன்மீதான அவதூறுகளைக் கைலாசபதி என்றுமே பொருட் படுத்தியவரல்ல. இரண்டாவதாகக் கதையையும் அது எழுதப்பட்ட காலத்தையும் அறிந்த எவரும் அது கைலாசபதி பற்றியதாக இருக்க இயலாது எனவும் கதையில் வருகிற சாதியவாதி ஒரு 'காந்திய வாதி' எனவும் அறிவர். இதையெல்லாம் அறிந்து கொண்டும், இவ்வாறாக அவதூறு கிளப்புகிறவர்கட்குக் களமமைத்துக் கொடுக்கிற "ஞானம்" ஏட்டின் ஆசிரியர் ரகுநாதனைப் பற்றி விமர்சிப்பது சிரிப்புக்குரியது.

அதே கூட்டத்தில் ஒரு குறிப்பிட்ட எழுத்தாளரது தனிப்பட்ட நடத்தை பற்றி இன்னொரு எழுத்தாளர் எழுதிய கதையை மிகவும் சிலாகித்துப் பேசினார். இங்கே நம் முன் எழுகிற கேள்வி இது தான். நடந்த ஒரு சம்பவத்தை ஏறத்தாழ அப்படியே அது யாரைப் பற்றியது என்று ஊகிக்கக் கூடத் தேவையற்ற வாறு பச்சையாக எழுதுவது படைப்பாற்றலின் வெளிப்பாடா? அக் கதை யின் இலக்கியப் பரிமாணம் என்னவென்று சொல்ல ஞானசேகரனுக்கு இயலவில்லை. அவர் மெச்சிய கதையும் அவர் அதை மெச்சிய காரணமும் நடுநிலையையும் குழுச்சராத பண்பையும் பற்றி நமக்குக் கூறுகின்றனவா?

ஞானம் சஞ்சிகையில் சிவத்தம்பியின் நேர்காணல் தொடர்கதை மாதிரி நீண்ட போது அது ஞானத்திற்குக் கனதியான ஒரு தோற்றத்தை அளித்தது. எனினும் அந்த நேர்காணல் மூலம் சிவத்தம்பி தனது தடுமாற்றங்களை வெளிப்படுத்திய அளவுக்குப் பயனுள்ள ஒரு இலக்கியப்பார்வையைப் புலப்படுத்தவில்லை. இடதுசாரியாகத் தொடங்கித் திரிபுவாதிகளுடன் ஒட்டி உறவாடி இறுதியாகத் தமிழ்த்தேசியவாதத்திடம் தஞ்சம் புகுந்துள்ள ஒருவரது நேர்காணலை அடுத்து அதை விட நீளமாகக் கைலாசபதி, சிவத்தம்பி, டொமினிக் ஜீவா ஆகியோரைத் தனிப்பட வெறுக்கும் இடதுசாரி விரோத வியாதியுள்ள எஸ்.பொன்னுத்துரை என்பவரது புளுகுகளால் அலங்கரிக்கப்பட்ட புராணம் வெளியானது. இனிக் கம்பவாரிதி என அறியப்படுகிற இ. ஜெயராஜ் என்கிற ஒருவரது கட்டுரைத் தொடர் வரவுள்ளது. ஞானத்தின் "குழு மனப்பாண்மையின்மைக்கும்" "பக்கச் சார்பின்மைக்கும்" மேலும் சான்றுகள் பல உள்ளன. பத்திரிகையில் இடம் பற்றாது. புத்தகமாகப் போடலாம்.

ஞானசேகரன் உதிர்த்த இன்னொரு முத்து, எங்களுக்கு "இசங்கள்" வேண்டாம் என்பதாகும். நிச்சயமாக அவருக்கு வேண்டாத இசங்கள் பற்றி நாம் அறிவோம். சோஸலிசம், கம்யூனிசம், மாக்சிசம் என்று ஒரு பட்டியல் உண்டு. அந்தப் பட்டியலுக்கு வெளியே ஹிந்துயிசம் நஷனலிசம் என்று சில விலக்குகள் உள்ளன. பொறுப்புள்ள ஜேணலிசம் அவருக்கு உடன்பாடான இசமாக இருக்குமோ தெரியாது.

ஞானம் பத்திரிகை பெருமளவும் வம்புப் பேச்சிலும் அரட்டையிலும் தான் ஓடுகிறது. சமூகப் பெறுமதியற்ற தனிப்பட்ட வாக்குவாதங்களும் சிறு பிள்ளைத் தனமான தனிப்பட்ட தாக்குதல்களும் ஞானத்திற் மிகுதி. அதை நம்பிப்பத்திரிகை நடக்கிற வரை அது இலக்கிய ஏடாகப் பரிணமிக்கப் போவதில்லை.

இலக்கியத்தை லீற்றரிலும் கிலோவிலும் அளந்து மதிப்பிடுகிற புரவலர்கள் கொலுவீற்றிருக்கிற ஒரு யுகத்தில் வாழுகிறோம் என்பதையும் மனதிற் கொண்டு தான் இலங்கையில் தரமான தமிழ் ஏடுகள் வெளிவரத் தடுமாறுகிற நிலையைக் கருத்திற் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஞானமும் அதன் ஆசிரியரும் தங்களது இடதுசாரி எதிர்ப்பைக் கைவிட வேண்டுமென்று நாம் எதிர்பார்க்க ஒரு நியாயமும் இல்லை. என்றாலும் "இசம்வேண்டாமிசம்" "நடுநிலை யிசம்" "குழுச்சாராமையிசம்" போன்ற பம்மாத்துக்கள் தொடருவது பற்றி யாரும் அலட்சியமாக இருக்கக் கூடாது.

~சிவா~

## தாய் மண்ணோடு........

வருடங்கள் பல கடந்தும்
இன்னும்
பாலர் வகுப்பு பாடத்தைப் போல்
தாய்மண்ணின் நினைவவைகள்

தாய் மண்ணிலே
சுவாசித்த காற்றில்
அன்பும் கலந்து
எம்மை
அரவணைத்துக் கொண்ட
நாட்கள்
அற்புத நாட்களேயாகும்

பூவரச மரமும் பனை மரமும்
அழகான அடையாளங்களை
எம் ஊருக்கிட்டனவே
மரங்களோடு மனதுகளும்
செழித்திருந்த நாட்கள்
இன்று மாறி புதியதான
இன்னுமொரு ஊரிலே
நாமும் பழையவராய் மாறி
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்

ஆளாலும் எம் மண்
அப்படியேயிருப்பதால் தானே
அந்நியரையும்
ஏற்றுக்கொள்கிறது

எம் மூட்டை முடிச்சுகளோடு
தாய் மண்ணையும்
சுமந்து வர முடிந்திருந்தால்
எவ்வளவு
நன்றாயிருந்துக்கும்

மண்ணை விசுவாசித்த மனிதரை
மண்ணும்
மனிதரை விசுவாசித்த மண்ணை
மனிதரும்
பறிகொடுத்தபடியே
சமாதான வருகைக்காய்
காத்திருப்புக்கள்
தொடர்கின்றன.

நா. மரியா என்டனீட்டா
நாவலப்பிட்டி

### மக்களைப் பிணங்களாக்

9ம் பக்க தொடர்ச்சி

ஈடுபடாத மக்களை கொலை செய்வது ஒருபோதும் போராடுகின்றவர்களின் பதிலடியாக இருக்கக்கூடாது.

நேரடியாக மோதலில் ஈடுபடுபவர்களிடமிருந்து அவர்கள் தரப்பில் இருப்பதாக கொள்ளப்படும் சாதாரண மக்களை பிரித்துப் பார்த்து அவர்களை இலக்காக கொள்ளாதவரைக்கும் போராடுபவர்களின் பக்கத்திலிருக்கும் நேரடியாக மோதலில் ஈடுபடாத மக்களை அடக்கு முறை படைகள் தாக்குவதற்கு எதிரான வலுவான நியாயம் இருக்கும். அடக்கு முறைப்படைகள் போராட்ட படைகளை ஆத்திரமூட்டு வகையில், மக்களை பீதிக்குள்ளாக்கும் வகையில் மேற்கொள்ளும் சாதாரண மக்கள் மீதான மனிதப்படுகொலைகளுக்கு பதிலடியாக மறுபறத்து சாதாரண மக்களின் படுகொலைகளாக இருக்க வேண்டும் என்பது அடக்கு முறை படைகளின் எதிர்பார்ப்பாகும். இத்தகைய சூழ்ச்சி அடக்கு முறைத் தந்திரோபாயத்தி ற்கு போராடும் சக்திகள் பலிக்குப்பழி என்ற நிலையில் பலியாகிவிடக் கூடாது என்பது கவனத்திற்குரியதா கும்.

அடக்குமுறையாளன் திட்டமிட்டு மக்களை கொல்வான். போராடுபவன் மக்களை திட்டமிட்டு கொல்லமாட்டான் (தவறுதலாக விதிவிலக்காக மக்கள் கொல்லப்படுவது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு) இதுவே அடக்கு முறையாளனுக்கும் போராடுபவனுக்குமிடையே இருக்கும் அடிப்படை வித்தியாசமாகும்.

இந்த வித்தியாசங்களை மறுக்கும் வகையில் சில தேசிய விடுதலைப் போராட்டங்களில் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். தென்னாபிரிக்க விடுதலை போராட்டம், பாலஸ்தீன விடுதலைப்போராட்டம், இலங்கை தமிழ்மக்களின் போராட்டம் போன்றவற்றில் மக்கள் கொல்லப்பட்டமை பொதுப் போராட்ட நியதியாக தந்திரோபாயமாகக் கொள்ள முடியாது. எதிரியின் தரப்பிலிருக்கும் சாதாரண மக்களை கொலை செய்வது போராட்டத்தினது எதிர்வினையாக முடியாது. மாறாக சாதாரணமக்களை கொல்லுவதற்கு எதிராக எதிரியின் தரப்பிலுள்ள மக்களையும் எதிரிகளுக்கு எதிராக திருப்புவதற்கு மனிதாபிமானம் என்ற பரந்த தளத்தில் செயற்பட முடியும். அது உறுதியான சரியான நடவடிக்கை ஆகும்.

சாதாரண மக்களை கொலை செய்வது இம்சிப்பது போன்றன மூலம் போராட்டத்திற்கு எதிராக எதிரிகள் மட்டுமன்றி மக்களும் கூட மனிதாபிமானம் என்ற அடிப்படையில் அணிதிரள வாய்ப்புக்கள் ஏற்படவே செய்யும். 'மனிதாபிமானம்' என்பது ஆள்பவர்களை பாதுகாக்கும் ஒரு கவசமாகப் பாவிக்கப்படுவதை மாற்றி அடக்குமுறைக்கு உள்ளாகும் மக்களைப் பாதுகாக்கவும் பாவிக்கப்பட வேண்டும். இதன் மூலம் அடக்கு முறைப் படைகளின் பக்கம் இருப்பதாகக் கொள்ளப்படும் பரந்துபட்ட மக்களை போராட்டத்திற்கு எதிரில்லாத நிலையில் வைத்திருக்க உதவும்.

சர்வதேச ரீதியாக பேசப்படுகின்ற மனிதாபிமானம் மனித உரிமைகள் போன்றவற்றின் அடிப்படையில் அடக்கு முறையாளர்களை தனிமைப்படுத்தி நியாயமான போராட்டத்திற்கு சார்பான பரந்து விரிந்த ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். அடக்குமுறை படையினருக்கும் அவர்களின் பக்கத்தில் இருப்பதாக கொள்ளப்படும் மக்களுக்குமிடையில் பகைமுரண்பாடு இருப்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். அந்த முரண் பாட்டை கூர்மைப்படுத்தி அடக்குமுறைப் படையை அம் மக்களிடமி ருந்து அந்நியப்படுத்துவதின் மூலம் போராட்டத்திற்கு ஆதரவுப் பலத்தை சேர்க்க முடியும்.

சாதாரண மக்களை தாக்குவது நாஜிசத்தினாலும், பாசிசத்தினாலும் பின்னர் சியோனிசத்தினாலும், இன, மத அடிப்படை வாதங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அவை எதுவுமே விடுதலைக்கு அடிப்படையாவதில்லை. ஏனெனில் அவ் வாதங்களில் மேலாதிக்கம், அடக்கு முறை, கொடூரம் என்பன இருக்கின்றன. இனவிடுதலைப் போராட்டம் என்பது எந்த சந்தர்ப்பத்திலும் சாதாரண மக்களின் ஜனநாயக மனித உரிமைகள், நல்வாழ்வு போன்றவற்றை மறுத்து விட்டு விலகிச் செயற்பட முடியாது.

தனிநபர்கள் அல்லது ஒரு குழுவினர் அதிகாரத்தை பெற்று ஆதிக்கத்தை நிலை நாட்டுவதை மட்டும் இலக்காகக் கொண்டு செயற்படும்போது ஜனநாயக மறுப்பும் மனித உரிமைகள் மீறலுமே இயங்குமுறையாக இருப்பது தவிர்க்க முடியாததாகி விடும். இதனை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. பரந்துபட்ட மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு உண்மையான விடுதலைக்காகச் செயற்படும் போது ஜனநாயகம் மனித உரிமைகள் மனிதாபிமானம் என்பனவற்றை எவ்வகையிலும் நிராகரிக்க முடியாது. விடுதலைப் போராட்டத்தின் அரசியலும் ராணுவத் தந்திரோபாயத்திலும் அவை மையப்படுத்தப்படும் போதே மக்களுக்கான விடுதலையும் விமோசனமும் சாத்தியமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

புதிய பூமி

Puthiya Poomi

சுற்று13 ஆடி 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 93

## புதிய - ஜனநாயக கட்சியின் 28 வது ஆண்டு

புதிய- ஜனநாயக கட்சி தனது 28வது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது. இத்தனை ஆண்டுகளில் பல்வேறு பிரச்சினைகள் நெடுக்கடிகள் சவால்கள் அடக்குமுறைகள் அச்சுறுத்தல்கள் மத்தியில் மாக்சிசம் லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனை மார்க்கத்தில் வழிநடந்து வந்துள்ளது. தொடர்ந்தும் உறுதியாக இருந்து தியாகத்திற்கு அஞ்சாது வெற்றிகளை வென்றெடுக்க திடசங்கற்பம் பூணுகின்றது.

# கண்காணிப்பு குழுவிற்கு "நடுநிலைமை" அவசியம்

ஐரோப்பிய யூனியன் நாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடைவிதித்ததுடன் மட்டுமல்லாது போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவில் இருக்கும் சில ஐரோப்பிய நாடுகளுக்கூடாக பல நிர்ப்பந்தங்களை கொடுக்க இருப்பதாகவும் தெரிகிறது. இது இன்றைய உலக ஒழுங்கில் ஐரோப்பிய ஒன்றியநாடுகள் செலுத்துகின்ற ஏகாதிபத்தியச் செல்வாக்கையே வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

ஐரோப்பிய நாடுகள் த.வி.பு. இயக்கத்தை பயங்கரவாத இயக்கப்பட்டியலில் சேர்த்த பின்பு வெளிப்படையாகவே 'நடுநிலைமை'என்பது பொய்ப்பிக்கப்பட்டு விட்டது. பின்லாந்து, டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகளச் தொடர்ந்தும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெற தகுதியற்றனவாக இருக்கின்றன.

இவ்விடயம் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதான நடவடிக்கைகளுக்கு அனுசரணை வழங்கும் நோர்வே நாட்டிற்கும் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவிற்கும் அறிவித்துள்ளது. த.வி.பு இயக்கம் இக்கோரிக்கையை விடுத்துள்ள போதும் இலங்கை அரசாங்கம் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவில் எவ்வித மாற்றங்களையும் செய்யக்கூடாது என்று கூறிவருகிறது. இது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவில் சம்பந்தப்பட்ட நாடுகளில் கூட்டம் நடைபெற்றபோதும் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

ஐரோப்பிய ஒன்றியம் த.வி.பு இயக்கத்தை தடை செய்திருந்தபோது தாங்கள் தங்களது நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தாது தனிப்பட்ட ரீதியிலேயே இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவில் அங்கம் வகிப்பதாக பின்லாந்து, டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். அதனால் தாங்கள் அக் குழுவிலிருந்து விலகிக் கொள்ளப் போவதில்லை என்றும் அறிவித்திருக்கின்றனர்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் இந்தியாவும் அமெரிக்காவும் தலையிடாமல் ஐரோப்பிய நாடுகள் சம்பந்தப்படுவது பரவாயில்லை என்று பொதுவாகப் பேசப்பட்டது. ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கையில் இருக்கும் அக்கறைகள் பற்றி வெளியே தெரியாதபடியால் அந்நாடுகள் சம்பந்தப்படுவது நல்லதாகும் என்றே கருதப்பட்டது. அவை நடுநிலையாக செயற்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் த.வி.பு. இயக்கத்தை தடைசெய்தவுடன் அவ் எதிர்பார்ப்புகள் பொய்த்துவிட்டன. அத்துடன் ஐரோப்பிய நாடுகளில் அங்கம் வகிக்கும் நாடுகளில் பின்லாந்து டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவிலிருந்து விலகிக்கொள்ளப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளனர்.

அனுசரணையாளரை நியயிக்கும் போதும், போர்நிறுத்தக் கண்காணிப்பு குழு அங்கத்தவர்களை நியமிக்கும் போதும் த.வி.பு இயக்கமும், இலங்கை அரசாங்கமும் (பிரபாகரன், ரணில் விக்கிரமசிங்ஹ) இணக்கம் கண்டிருந்தனர். அதில் ஏதாவது ஒரு பகுதியினர் முரண்படுகின்ற போது ஒருவர் அனுசரணையாளராக இயங்கவும் முடியாது, கண்காணிப்பு குழுவில் அங்கம் வகிக்கவும் முடியாது. எரிக்சொல்ஹெய்ம் சிறப்பு சமாதானத்தூதுவராக இயங்குவது பற்றி ஜனாதிபதி மஹிந்தவிற்கு அபிப்பிராய பேதம் இருந்தது. அதனால் அவர் சிறப்புத்தூதுவர் என்ற நிலையிலிருந்து விலகிக் கொண்டார். அதேபோன்று பின்லாந்து சுவீடன், டென்மார்க் நாட்டு பிரதிநிதிகள் கண்காணிப்பு குழுவில் இடம்பெறுவதை த.வி.பு. இயக்கம் விரும்பவில்லை.

போர் நிறுத்தம் என்பது தற்போது நடைமுறையில் இல்லாது எழுத்தில் மட்டுமே இருந்தாலும் எதிர்காலத்தில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க போர்நிறுத்தம் அவசியமானதாகும். போர் நிறுத்த கண்காணிப்பு குழுவில் இடம்பெறுபவர்கள் குறித்து அரசுக்கும் வி.பு. இயக்கத்திற்கும் இணக்கப்பாடு இருக்க வேண்டியதும் தேவையானதாகும். எனவே போர்நிறுத்தக் கன்காணிப்பு குழுவில் பின்லாந்து, டென்மார்க், சுவீடன் ஆகிய நாட்டு பிரதிநிதிகள் விலகிக் கொள்வதே சரியானதாகும். அதை விடுத்து அந்நாட்டுப்பிரதிகள் அக்குழுவிலிருந்து விலகிக் கொள்ளமாட்டோம் என்று பிடிவாதமாக இருந்து கொண்டு போராட்டத்தின் மீதும் தமிழ் மக்கள் மீதும் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவது சமாதானத்திற்கு எதிரான செயற்பாடே யாகும்.

# ஆசிரியர் நியமனத்திற்காக மலையகத்தில் போராட்டம்

கடந்த 14-06-2006 அன்று இராகலை நகரம் சத்தியாகிரப் போராட்டம் தொடர்பான சுவரொட்டிகளால் நிரம்பி வழிந்தது. பல தோட்டங்களில் வேலை நிறுத்தமும் செய்யப்பட்டதால் இப்பிரதேசம் ஒரு வகையான இயல்பு நிலையை இழந்திருந்தது. பல நூற்றுக்கணக்கானோர் இராகலை கிறிஸ்தவ தேவாலயத்திற்கு முன்பு ஒன்று கூடினர். அரசியல் பேதமின்றி இப் பகுதி அரசியல் முக்கியஸ்தர்களும் சமூக அளித்திருந்தனர். 2004ம் ஆண்டிலிருந்து இழுபட்டு வரும் மலையக இளைஞர் யுவதிகளுக்கான ஆசிரியர் நியமனத்தை வழங்குமாறு கோரி அந்நியமனம் வழங்கப்படாததால் பாதிக்கப்பட்டோர் அமையத்தினால இப்போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விண்ணப்பித்தவர்கள் பெற்றோர் ஆசிரியர்கள் மாணவர்கள் தொழிலாளர்கள் பெரும் தொகையில் கலந்து கொண்டனர். ஊர்வலம் பின்பு சத்தியாக்கிரகம் என்ற வடிவத்தில் இடம்பெற்ற இப் போராட்டத்தில் புதிய ஜனநாயக கட்சியின் மலையகச் செயலாளரும். வலப்பனை பிரதேசசபை உறுப்பினருமான ச. பன்னீர் செல்வம் மலையக மக்கள் முன்னணியின் உப தலைவர் லோரன்ஸ், இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவர் ஜோசப் ஸ்டாலின், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பிரதேசசபை உறுப்பினர் சண்முகம் மற்றும் சமூக அக்கறையாளர்கள் முன்னின்று இப் போராட்டத்தில் பங்கேற்றத்துடன் உரையும் நிகழ்த்தினர். மலையக ஆசிரியர் சங்கத்தினர் தாம் பங்கேற்பதாகக் கூறியபோதும் அதன் தலைமைப் பீடத்தில் இருந்து ஒருவரும் பங்கேற்கவில்லை. இ.தொ.கா போராட்டத் தில் பங்கேற்கவில்லை. வேலை நிறுத்தத்தில் இ.தொ.கா தொழிலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். அதே வேளை. சிலர் வேலை நிறுத்தத்தை குழப்புவதில் அக்கறை செலுத்தி தோல்வி கண்டனர். மலையக இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசியல் தலைவர்களுக்கு இவர்களது பிரச்சினை அரசியல் லாபங்களுக்கு மட்டுமே பேசுபொருளாக இருந்து வருகிறது. இதனை நன்கு உணர்ந்த இவ்வமைப்பினர் மீண்டும் அக் கரபத்தனையில் கூடி தொடர்ந்து போராடுவதற்கான வியூகங்களை வகுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

2005ம் ஆண்டு யூலை முதலாம் திகதி வெளியான1400ம் இலக்க அரச வர்த்தமானியில் முஸ்லீம்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக முஸ்லீம் காங்கிரஸின் உயர் பீட உறுப்பினரும் மத்தியமாகாணசபை உறுப்பினருமான நயீமுல்லாவும் மற்றும் பைசர் முஸ்தாபாவும் தொடுத்த உயர் நீதிமன்ற வழக்குகளாலேயே இந்நியமனம் வழங்கப்படமுடியாநிலை இருந்து வந்தது.

மேற்படி ஆசிரியர் நியமனம் பற்றிய வழக்கு யூலை 4 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்பட்ட போது மலையகத்தில 600 முஸ்லீம்களுக்கு ஆசிரியர் நியமனப் வழங்குவதெனவும், குறித்த 3179 ஆசிரியர் நியமனங்களை மலையகத் தமிழர்களுக்கு வழங்குவதெனவும் இணக்கம் காணப் பட்டது.

இன்னும் காலத்தை இழுத்தடிக்காமல் இந்த இணக்கத்தை அடிப்படையாக கொண்டு உடனடியாக ஆசிரியர் நியமனங்களை வழங்க வேண்டியது கல்வியமைச்சின் பொறுப்பாகும்.

இதனால் மலையகத்தில் நிலவி வரும் வேலையில்லாப்பிரச்சினை வறுமை தீர்ந்து விடப் போவதில்லை. வேலையில்லாப் பிரச்சினை மேலும் தொடரப்போகிறது. எனவே மலையக மக்கள் இளைஞர்கள் தமது பிரச்சினைகளுக்காகப் போராடினாலே ஒழிய ஒருபோதும் அரசாங்கம் திரும்பிப் பார்க்கப் போவதில்லை.



கடந்த 14-06-2006 அன்று இராகலையில் 3179 ஆசிரியர் நியமனங்களை வழங்கக் கோரி நடைபெற்ற ஊர்வலத்தையும் சத்தியாகிரகத்தையும் படத்தில் காண்க.

## இந்திய தலையீடு..

1ம் தொடர்ச்சி அவதானிக்க முடிகிறது. இலங்கை ஜனாதிபதியையும் தெற்கு அரசியல் சக்திகளையும் அரசியல் தீர்வை முன்வைக்குமாறு இந்தியா வற்புறுத் துவதன் நோக்கம் வரவேற்கக் கூடியதாயினும் அதன் உள்நோக்கம் விடுதலைப் புலிகளை தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தலாகும். ஏற்கனவே இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் விடுதலைப் புலிகளின் போராட்டம் வேறு தமிழ் மக்களின்

பிரச்சினைகள் வேறு என்ற நிலை நின்றே இலங்கையின் இனப் பிரச்சினையை அணுகி வந்திருக்கின்றனர். இதன் அடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வை அரசியல் தீர்வாக இந்தியா இப்பொழுது அழுத்த ஆரம்பித்திருக்கிறது. இது நேரடித்தலையீடு வரை செல்லாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

ஆனால் இந்தியா தற்போது வற்புறுத்தும் அரசியல் தீர்வுக்கான அதிகாரப் பகிர்வு எத்தகையது என்பது தெரியவில்லை. இந்திய மாநிலங்களில் பின்பற்றப்படும் வரையறுக்கப்பட்ட அதே நேரம் வேறுபட்ட அளவுகளில் இருந்து வரும் அதிகாரப் பகிர்வா என்பதும் சிந்தனைக்குரியது. அவ்வாறான ஒரு தீர்வுக்கு ஒற்றையாட்சியை வற்புறுத்தி வரும் ஜனாதிபதியும் அவரைச் சூழவுள்ள பேரினவாத அரசியல் சக்திகளும் எந்தளவுக்கு உடன்படப் போகிறார்கள் என்பது மிகப் பெரும் கேள்வியாகும். ஏற்கனவே சந்திரிகா அம்மையாரும் ரணில் விக்கிரசிங்காவும் சமஷ்டி என்ற சொற் பிரயோகத்தைப் பயன்படுத்தி அதனை ஏற்றுக் கொள்வதாகவும் கூறி வந்தனர். ஆனால் அதன் உருவ உள்ளடக்கத்தை முன்வைக்கவில்லை. சந்திரிகா முன்வைத்த தீர்வுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட "பிராந்தியங்களின் ஒன்றியம்" என்பதற்கே பாராளுமன்றத்தில் எதிர்ப்பும் எரிப்பும் இடம் பெற்றமை நினைவுபடுத்தப்பட வேண்டியதாகும். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது இலகுவான ஒன்றல்ல. ஜனாதிபதியும் அவரது கொள்கை வகுப்பாளர்களும் ஒற்றையாட்சியின் கீழான இன்றைய அரசியல் யாப்பின் கீழே திருத்தத்தை சேர்த்துக் கொள்ளும் அதிகாரப்பரவலாக்கம் பற்றியே கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். இவர்கள் இப்பொழுதும் 1956ல் 1965ல் 1987ல் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாட்டின் தேசிய இனப்பிரச்சினை மோசமடைந்து சிக்கலும் யுத்தமுமாக 2006ம் ஆண்டில் இருப்பதை யதார்த்தமாகக் காண மறுக்கின்றனர். அதிகாரப் பரவலாக்கம் வேறு அதிகாரப் பகிர்வு வேறு (தனிக்கட்டுரை 6ம் பக்கத்தில்) என்பதை அடிப்படையில் விளங்கித் தீர்வுக்கான வெளிச்சட்டகமோ அல்லது உள்ளடக்கமோ உருவாக்கப்படல் வேண்டும்.

அதனை விடுத்து வெறும் கண்துடைப்பிற்கும் தமிழ் மக்களை ஏமாற்றிச் திசை திருப்புவதற்குமான எந்தத் தீர்வு வரையும் பயனற்றதாகும். விடுதலைப் புலிகளை ஓரங்கட்டும் நோக்கிலோ அல்லது அவர்களை நிர்ப்பந்திக்கும் வகையிலோ எந்தத் தீர்வும் முன்வைப்பதில் அர்த்தம் இருக்காது. வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் தேசிய இனங்களையும் அவர்களது தேசிய அபிலாசைகளையும் உள்ளடக்கக் கூடிய அரசியல் தீர்வே அவசியமாகும். இத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் புலிகள் இயக்கத்தின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

எனவே இந்தியாவின் அழுத்தமோ அல்லது தலையீடோ இலங்கையின் இனப்பிரச்சினையை மேலும் மோசமாக்கி யுத்தத்திற்குள் தள்ளும் வகையில் அமைந்துவிடக் கூடாது. அதற்குப் பதிலாக வடக்கு கிழக்கு மக்களின் முழுமையான தீர்வுக்கு வழி வகுப்பதாக அமைதல் வேண்டும்.

வெளியிடுபவர் : இ.தம்பையா. இல. 47. 3வது மாடி. கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட் கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட் 334A.K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.